பாரத தேவி

நிர்வாக ஆசிரியர் வ. ரா. தனிப்பிரதி 2 அணா

மலர் 1	ஞாயிறு 13-8-'39	இதழ் 6

பொருள் அடக்கம்

			பக்கம்
சொர்க்கம்	...	...	2
அனாவசியமான கட்சிகள்	...	...	3
லோக சஞ்சாரம்	...	...	8
அகத்தியர் வைத்தியம்	...	...	12
பாரதியும் சாரதியும்	...	வரதன்	15
கலைஞான வரலாறு	...	...	17
பரதேசத் தபால்	...	...	22
நக்ஷத்திரங்களுக்கு ஆபத்து	...	...	26
எது சனாதனம்?	...	...	27
மறதி எதனால்?	...	சதயம்	29
இரு பிரமுகர்கள்	...	...	33
அகத்தியன்	...	...	36
பெண் முகம் கண்டு		என். சுப்ரமண்யன்	40
அணையாத தீ	...	சி. ரா. சே.	47
உயிர் பெறாத சித்திரம்		அ. கி. ஜெயராமன்	49
பகீரதப் பிரயத்தனம்	...	கரிச்சான்	53
ஆழ்கடல்	...	பு. வே. சு.	55
பெரியோர் வாக்கு	...	...	57
நாடோடி	...	மணி	60
நக்ஷத்திர பலன்.	...	...	65
ஹிட்லர் மேல் கண்!	...	...	78
ஒரு பழந்தானே!	...	சி. சு. செல்லப்பா	81
சுதந்திர புருஷன்	...	ஹரவி	86
மார்க்கோனி	...	வெ. ம.	88
நாடக முடிவு	...	ரஞ்சனன்	93
திரைப்படச் செய்திகள்	...	...	97
யமப் பையன்	...	விகடாநந்தன்	99
ஒரு நிமிஷக் கதைகள்	...	...	102

சொர்க்கம்

காலை இளம் வெயிலில், பசும்புல்லின்மேல் படுத்துக்கொண்டு, இனிய கனவைக் காண்பதைப்போன்ற சுகம் உண்டோ என்பது என் சந்தேகம்.

உடம்புக்கு லேசாகச் சூடு கொடுப்பதற்கு இளம்வெயில். உடம்பை, இன்பமயமாகத் தடவிக் கொடுப்பதைப்போல இருப்பதற்கு, பசும்புல். கனவு காண்பதற்கு, கற்பனை இருக்கிறது. இந்த மூன்றும் சேர்ந்தால், சொர்க்க லோகத்துக்குச் சமானம் என்று சொல்லுவார்கள்.

நான் சொர்க்கத்தைப் பார்த்ததில்லை. சொர்க்கத்தைப்பற்றிப் பலர் வாயினின்றும் கற்பனை மூலமாகவும் கேள்விப்பட்டிருக்கிறேன். சொர்க்கத்திலே, எல்லோரும் சோம்பலோடு கலந்த களியாட்டத்திலே ஈடுபட்டிருப்பார்கள் என்று ஒரு முகமாகச் சொல்லுகிறார்கள்.

அப்படியானால், எனக்கு சொர்க்கம் வேண்டாம். சோம்பல் ஒரு வேலையாகுமா? எப்படி, எப்பொழுதும் சோம்பலிலேயே தோய்ந்து கிடக்கிறது? இருந்த இடத்திலேயே, கிடக்கும் மரக்கட்டைக்கும் சோம்பல் பிடித்த மனிதனுக்கும் என்ன வித்தியாசம் என்று தெரியவில்லை.

சொர்க்கத்திலே, இன்னொன்று இருக்கிறதாகச் சொல்லுகிறார்கள். யார் எதை வேண்டுமானாலும் செய்யலாமாம்! அதற்கு ஆட்சேபனை இருக்காதாம்! பூரணமான சுதந்திரத்துக்கு, இதை அடையாளமாகக் கொண்டு, சொர்க்கத்தை பலர் போற்றக்கூடும்.

யாரும் வரம்பில்லாமல் முறையில்லாமல் எதையும் செய்யலாம் என்றால், குழப்பத்தைத் தவிர, ஒழுங்கையும், அமைதியையும், பொறுப்பையும் காண முடியாது. பொறுப்பில்லாத வாழ்க்கையும் அரிசி இல்லாத நெல்லும் ஒன்றுதான்.

எல்லோரும் சுகமாக, சோம்பலோடு ஒரு காரியமும் செய்யாமல் வாழ்வதாயிருந்தால், பசி, தாகம், ஆசை முதலிய எந்த உணர்ச்சியும் சொர்க்கத்திலிருப்பவர்களுக்கு இருக்காது என்றுதானே அர்த்தம்?

மேற்சொன்ன உணர்ச்சிகள் இல்லாமற்போனால், வாழ்க்கை ருசியாக இருக்காதுபோலத் தோன்றுகிறது. போராட்டத்திலேதான் உயிரும் இன்பமும் கலந்து நிற்கின்றன. உணர்ச்சிகளை இல்லாமல் போனால், உயிரிலே என்ன இருக்கிறது? வெறும் சோம்பல்தான் மிச்சம்.

ஆகவே, சொர்க்கம் என்பது இன்ப மயமான வாசஸ்தலமாகத் தோன்றவில்லை.

அனுவசியமான கட்சிகள்

மீனாட்சியம்மன் கோவில், ஹரிஜனங்களுக்குத் திறக்கப் பட்டாலும் திறக்கப்பட்டது, அப்பா! என்னென்னமோ, விநோதமான வாதங்கள் வெளிவருகின்றன. நல்ல காரியத் துக்கு, இத்தனை எதிர்க்கட்சிகளா? இவ்வளவு இடஞ்சலா?

திருட்டுத்தனமாக, கோயிலில் நுழைந்து விட்டார்கள் என்று ஒரு கட்சி. திருட்டுத்தனமாக என்ற வார்த்தையை பிர யோகம் செய்பவர்களுக்கு, அந்த வார்த்தையின் அர்த்தம் தெரிய வில்லை என்பது தெளிவு.

கோவிலுக்குப் போய், சுவாமி அம்மன் தரிசனம் செய்பவர் கள் எல்லோரும், ஊர் முழுதும் தண்டோரா போட்டுத் தெரி வித்து விட்டுத்தான் போகிறார்களா? 'எங்களுடைய பக்தியைக் கண்டு, பரவசப்படுங்கள்' என்று ஒவ்வொருவரும் பகிரங்கப் படுத்த வேண்டும் போலிருக்கிறது.

கோவிலுக்குப் போகிறேன் என்று பக்கத்து வீட்டுக்கார னிடம் கூட சொல்லிக்கொள்ளும் வழக்கம் இந்த தேசத்தில் இல்லை. நல்ல, சுபமான காரியத்துக்கு, விளம்பரம் தேவை யில்லை என்பது இந்த நாட்டின் சம்பிரதாயங்களில் ஒன்று.

கலியாணத்துக்கு அழைப்பு உண்டு. உற்சவத்துக்கு அழைப்பு கிடையாது. அரசன், ஆண்டவன், இவர்களை தரி சனம் செய்வதற்கு, அழைப்பு தேவையில்லை; தண்டோரா மூலமாக பகிரங்கப் படுத்தவும் வேண்டியதில்லை.

பகிரங்கமில்லாத காரியம் எல்லாம் இரகசியம்தான். இரக சியம் என்றால் திருட்டுத்தனம் என்று எந்த அகராதியில் அர்த் தம் சொல்லியிருக்கிறது? தியானம் என்பது இரகசியமான காரியங்களில் ஒன்று. ஆகவே, தியானம் என்பதை திருட்டுத் தனம் என்று முடித்து விடுகிறதா?

மந்திரிமார்களின் தூண்டுதலின் பேரிலேதான், மதுரை ஆலயப்பிரவேசம் நடந்திருக்கிறது என்று ஒரு விபரீதக் கட்சி. காங்கிரஸ் மந்திரிமார்கள், ஆலயப் பிரவேசத்துக்குச் சாதகம் என்பது உலகப் பிரசித்தமான சங்கதி. மந்திரிகளின் ஆதரவு, இந்த விஷயத்தில் எப்பொழுதும் இருக்கிறது. இதற்குத் தூண்டுதல் என்று பெயரா ?

கனம் டாக்டர் ராஜன் தூண்டுதலின் பேரில், கோவில் நிர்வாக அதிகாரி, ஹரிஜனங்களுக்குக் கதவைத் திறந்துவிட்டு விட்டார் என்று ஒரு அபவாதம். இந்த அபவாதம் உண்மையாக இருக்க வேண்டும் என்பது நமது ஆசை. ஏனென்றால், அப்பொழுது ஆலயப்பிரவேசம் மிகவும் எளிதான வேலையாகிவிடும் அல்லவா ?

மந்திரி சொன்னால், கோவில் திறந்துவிடும் என்ற நிலைமை ஏற்பட்டுவிடுமானால், அந்த நிலைமை, எல்லா இடங்களிலும் ஏக காலத்தில் ஏற்பட்டுவிடவேண்டும் என்று கடவுளைப் பிரார்த்திக்கிறோம்.

காங்கிரஸ் மந்திரிமார்கள் கொடுத்த வாக்குறுதியில், ஆலயப்பிரவேசம் இல்லை என்பது ஒரு கட்சி. காங்கிரசும் காங்கிரஸ் மந்திரிமார்களும் ஒன்றுதான். ஆலயப்பிரவேசம் காங்கிரஸ் திட்டங்களில் ஒன்று. அரசியல் உலகில், காந்தி தலைமைவகித்து நடத்தத் துவக்கிய நாள் முதல், இந்த வாக்குறுதி இருக்கிறது.

ஆலயப்பிரவேசத்துக்கு ஆதரவாயிருக்கும் தர்மகர்த்தர்களையும் கோவில் நிர்வாக உத்தியோகஸ்தரையும் மற்றும் நல்லெண்ணத்தோடு சுவாமி தரிசனம் செய்யும் ஹரிஜனங்களையும் வம்பு வழக்கு நேராமல் காப்பாற்றுவதற்காக, இப்பொழுது ஆக்கியிருக்கும் சட்டத்தால், காலிகளின் அட்டூழியங்கள்தான் அதிகப்படும் என்று ஒரு கட்சி.

எந்த சட்டத்துக்கும், இந்த மாதிரி ஒரு கட்சியைச் சொல்லிவிடலாம். வருமான வரிச்சட்டம் என்று புதிதாக, ஒரு சட்டத்தை ஆக்குவதாக வைத்துக்கொள்ளுவோம். ஸர்க்கார் அதிகாரிகள் இலஞ்சம் வாங்குவதற்கு, இந்தச் சட்டம் தூண்டுதலாயிருக்கும் என்று ஒரு கட்சி சொல்லப்படாதா ?

ஆலயப் பிரவேசம், எல்லா ஹிந்துக்களும் செய்யலாம் என்று ஒரே அடியாக சட்டம் செய்வதற்கு என்ன என்று ஒரு

கட்சி. இந்தக் கட்சிக்கு அர்த்தம் இல்லை. சில காரியங்களை, ஒரே மூச்சில் செய்துவிடலாம். சில காரியங்களை, நிதானமாகத்தான் செய்ய முடியும்.

ஏன் ஒரே அடியாகச் செய்யக் கூடாது என்று சொல்லுவது ஜஸ்டிஸ் கட்சியாரின் வாதம். அவர்கள் காங்கிரஸ் ஆட்சியை, எந்த வகையிலும் எதிர்த்து, நாட்டின் அமைதியைக் குலைப்ப தில்லை என்று வாக்குறுதி கொடுக்கத் தயாராயிருக்கிறார்களா?

அவர்கள் தயாராயிருந்தால், ஹிந்துக்கள் எல்லோருக்கும் எல்லாக் கோவில்களும், குறிப்பிட்ட ஒரு நாளில் திறந்து விட்டு விட, காங்கிரஸ் மந்திரிமார்கள் தயாராயிருப்பார்கள் என்பது நிச்சயம். ஏழை எளியவர்களைக் காப்பாற்றுவதற்காக, மது விலக்குச் சட்டம் செய்தால், அதை ஜஸ்டிஸ் கட்சியார் எதிர்க் கிறார்கள்.

கலால் இலாகா வருமானமாகிய $4\frac{1}{2}$ கோடி ரூபாயை சென்னை அரசாங்கம் இழப்பதாயிருந்தால், அதை ஈடு நிரப்ப வேண் டாமா? அதற்காக, விற்பனை வரியை விதித்தால், அதை ஜஸ் டிஸ் கட்சியார் எதிர்க்கிறார்கள்.

இந்திய ஒற்றுமைப்பட்டு, அரசியலிலும் வியாபாரத்திலும் பொது பாஷையொன்றை அங்கிகாரம் செய்யவேண்டும் என் பதற்கு ஹிந்துஸ்தானி போதனையை யோசனையாகச் சொன்னால், "தமிழ் போய்விடும்" என்று கூச்சல் போட்டு, அதற்காக சிறை செல்ல வேண்டும் என்று ஆர்ப்பரிக்கும் ஜஸ்டிஸ் கட்சியாரை நம்பி, ஒரே அடியாக, ஆலயப் பிரவேசச் சட்டம் செய்ய முடியுமா?

நல்லதுக்கு ஒத்துழைப்பு, கெட்டதற்கு யோசனை சொல்லு தல் என்று அரசியல் நல்ல எண்ணத்தோடும் நமது நாட்டுக்கு சுதந்திரம் வேண்டுமே என்ற தாகத்தோடும், ஜஸ்டிஸ் கட்சியார் தங்கள் வேலையைச் செய்தால், அனேக காரியங்களை, ஒரே அடி யாகச் செய்துவிடலாம்.

காங்கிரஸ் மந்திரிமார்கள் ஆட்சி நடத்தக் கூடாது என்ற ஒரு எண்ணத்தையே பிடிவாதமாகக் கொண்டு, சில அசட்டுக் காரியங்களைச் செய்துவரும் ஜஸ்டிஸ் கட்சியாரை நம்பி, உயர்ந்த சீர்திருத்தங்களை ஒரே அடியில் செய்துவிட முடியாது.

மதுரை ஆலயப் பிரவேசத்தால், சனாதனிகளின் உள்ளம் புண்ணாகி விட்டது என்று ஒரு கட்சி. கோர்ட்டு மறியல் செய்த

காலத்தில், வக்கீல்களுக்குக் கோபம். அன்னிய நாட்டுத் துணிகளைப் பகிஷ்காரம் செய்யவேண்டும் என்று செய்த காலத்தில், துணி வியாபாரிகளுக்குக் கோபம். பூரண மதுவிலக்குச்சட்டம் செய்த சமயத்தில், போதைவஸ்து வியாபாரிகளுக்கும் தொழிலாளிகளுக்கும் கோபம்.

ஆனால், ஆலயப்பிரவேச விஷயத்தில், சனாதனிகளுக்கு, மேற்சொன்ன கூட்டத்தார்களைப்போல, கோபம் வருவது முறையல்ல. ஆண்டவனுடைய தரிசனத்துக்கு, "சேரவாரும் ஜகத்திரே!" என்று அழைக்கும் மனப்பான்மைதான், சனாதனிகளிடம் இருக்க வேண்டும். அழியாத தர்மத்துக்கு இருப்பிடம் என்று தங்களை நினைத்துக்கொண்டிருக்கும் சனாதனிகளுக்கு விசாலமான இதயம் வேண்டும்.

பொது ஜனங்களின் அபிப்பிராயத்தைச் சரிப்படுத்திக் கொண்டபிறகு, ஆலயப் பிரவேசத்தைச் செய்தால், அது இனிதாக முடியும் என்று மகாகனம் சாஸ்திரியார் ஒரு கட்சி சொல்லுகிறார்.

பிரசாரம் என்பது ஒரு சாதனம். காரியம் செய்வதற்கு முன்னர், பிரசாரம் செய்ய வேண்டியது அவசியம்தான். கோட்டீஸ் கொடுப்பதைப்போல, விளம்பரம் செய்ய வேண்டும். ஆனால், காரியத்துக்கு சாதனம் பிரசாரம் அல்ல. காரியத்துக்கு உதவியாக இருப்பது காரியம் தான்.

ஆலயப் பிரவேசம் வேண்டும் என்று பல வருஷங்களாக, காங்கிரஸ் பிரசாரம் செய்துகொண்டு வந்திருக்கிறது. அவ்வாறு பிரசாரம் செய்தது, பிரசாரத்தோடுதான் நின்றுவிட்டது. அது காரியத்துக்குத் தூண்டுதலாக, ஏற்படவில்லை. விவேகமுள்ளவர்கள் என்று சொல்லிக்கொள்ளும் சனாதனிகளுக்கு, மனச்சாட்சி தூய்மைப்படவில்லை.

வெறும் பிரசாரம் மட்டும் செய்துகொண்டே போனால், காங்கிரஸ்காரர்கள், பகட்டு வேலை செய்கிறார்கள் என்று கெட்ட பெயர் வாங்குவது நிச்சயம். ஒரு காரியம் செய்யப் போவதாகச் சொல்லுமளவு, எதிர்ப்பு இருக்காது. காரியம் செய்து பார்த்துத்தான், எதிர்ப்பின் அளவைத் தெரிந்து கொள்ள முடியும்.

பிரசாரம், வெறும் வாய் வேதாந்தமாகப் போய்விட்டாலும் போய்விடும். மலையாள ஆலயப்பிரவேச சட்டத்தால், என்

நன்மை உண்டாகவில்லை என்று சிலர் கேட்கிறார்கள். அந்தக் கேள்வி கேட்காமலிருப்பதற்குத்தான் இந்தப் புதுச்சட்டம்.

இந்த தேசத்தில், ஒரு வழக்கம் உண்டு. அரசன் ஆக்கினைக்குக் கீழ்ப்படிந்து நடக்கவேண்டும் என்ற வழக்கம் உண்டு. சட்டத்தின் மூலமாக, உற்சாகம் கொண்ட நல்லவர்களுக்கு ஆதரவு கொடுத்தால், ஆலயப்பிரவேசம் எளிதிலே கைகூடிவிடும்.

அனேக சீர்திருத்தங்கள், ஆட்களைப் பொறுத்திருக்கின்றன. எந்தப் பிராந்தியத்தில், நல்லவர்கள் இருக்கிறார்களோ, அந்தப் பிராந்தியத்தில், சீர்திருத்தங்கள் விரைவில் நிறைவேற முடியும். அப்பேர்ப்பட்ட பிராந்தியங்களில், நல்லவர்களின் உற்சாகத்துக்கு பாதுகாப்புக் கொடுக்கவேண்டியது அரசாங்கத்தாரின் கடமையாகும்.

நல்ல காரியத்துக்கு கட்சி சொல்லி, அதை ஒத்திப்போடப் பார்ப்பது பாபமாகும். அதை எதிர்த்து, நாசமாக்கப் பார்ப்பது மனிதத்தன்மையாகாது. மனிதனுக்கு அன்பும் விவேகமும் இருப்பது உண்மையானால், அவன், நல்ல காரியத்தை விரைவில் செய்ய வேண்டும்.

கடவுள் எதற்காக மனிதனுக்குப் பகுத்தறிவையும் அன்பையும் பொக்கிஷங்களாகக் கொடுத்திருக்கிறார்? துவேஷப் படுவதற்காகவா? விசித்திரமாக, எதிர்க்கட்சி பேசுவதற்காகவா? உண்மையைக்கண்டு, அதன்படி நடப்பதற்காகத்தான், மனிதனுக்கு அன்பும் அறிவும் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

1940-ம் ஆண்டு பிறப்பதற்குள், தமிழ் நாட்டிலுள்ள எல்லாக் கோவில்களிலும் ஹிந்துக்கள் யாவரும் பக்தியுடன் சென்று ஈசுவர தரிசனம் செய்கிறார்கள் என்ற நற்செய்தி, நாடு முழுதும் பரவ வேண்டும் என்பது நமது பிரார்த்தனை.

லோக சஞ்சாரம்

முள் படுக்கைதான்

'பதவி ஏற்பது ரோஜாப் புஷ்ப படுக்கையல்ல; முள் படுக்கை தான்.' இது, காங்கிரஸ் பதவி ஏற்பதற்கு முன் காங்கிரஸ் மாளிகைக் கூட்டம் ஒன்றில் பிரதம மந்திரி சொன்னது. அப்போது அதன் உண்மையை நாம் நம்பவில்லை. மந்திரி பதவி வகிப்பதில் அப்படிக்கென்ன கஷ்டம் இருக்கப்போகிறது, கவர்னருக்கும், மந்திரிகளுக்கும் தகராறு ஏற்படும் சந்தர்ப்பத்தைத் தவிர, என்று தான் நினைத்துக் கொண்டிருந்தோம்.

அவர் சொன்ன உண்மையை இன்று பார்க்கிறோம். கடன் நிவாரண சட்டம் ஆனதிலே லேவாதேவிக் கூட்டத்துக்குக் கொஞ்சம் கசப்பு. உடனே கண்டனம். மதுவிலக்குக் கொண்டு வந்ததில்பார்ஸிகளுக்குக் கோபம். சொத்துவரி போட்டதில் முஸ்லீம்களுக்கு வருத்தம். விற்பனை வரி போட்டதில் வியாபாரிகளுக்கு ஆக்ரோஷம். 'நாங்கள் சத்தியாக்கிரக காலங்களில் எவ்வளவு ஒத்துழைத்தோம். அதற்குப் பலனா இது' என்று கேள்வி. புகையிலை வரி போட்டதிலும் சம்பந்தப்பட்ட வியாபாரிகளுக்கு ஆட்சேபணை. ஹிந்தி கட்டாயப் பாடமாக்கினதில் தமிழ்ப் போச்சு என்ற கூச்சல்.

இத்தனையும் போதாதென்று ஆலயப்பிரவேச சட்டம் கொண்டு வந்ததிலே சனாதனிகளுக்குக் கோபம். 'ஓட்டு கேட்ட காலத்தில் எங்களுக்கு வாக்குக் கொடுத்தீர்களே' என்று கேள்வி. இன்னும் தொழிலாளர் சட்டம் ஏதாவது கொண்டுவரப்பட்டால் அவர்களுக்கும் குறை வரும்.

இந்தமாதிரி எதிர்ப்புகளுக்கும், கண்டனங்களுக்கும் முடிவு வரப் போவதில்லை, சுயநல ஆசை ஓங்கி இருக்கும் வரைக்கும். பிறர் சம்பந்தப்பட்ட மட்டில் அவர்களுக்குக் கவலை இல்லை. தனக்குப் பாதகமாக, பெரும்பான்மை சமூகத்துக்கு சாதகமாக, ஏதாவது ஒன்று செய்ய காங்கிரஸ் சர்க்கார் முற்படும்போது தான் ஆத்திரம் பீறிட்டுக் கிளம்புகிறது; கச்சை கட்டத் தோன்றுகிறது. இப்படி பலருக்கும் பொதுவான, ஒரு மேலான லக்ஷிய நோக்கு இல்லாமல், குறுகிய நோக்கத்துடன் செய்யப்படும் கண்டனங்களுக்காக காங்கிரஸ் மந்திரி சபை தன் கடமையை விட்டுக் கொடுத்து விடும் என்று எதிர் பார்க்க முடியாது. இவ்வளவு எதிர்ப்பு, கஷ்டங்களையும் எதிர்த்து நீஞ்சிப் போக காங்கிரஸ் சர்க்கார் தயாராக இருக்கிறது. ராஜாஜி சொன்னது போல் ரொம்ப பொல்லாத முள் படுக்கைதானே மந்திரி பதவி!

இத்தனையும் வெளியிலிருந்து மொய்த்துக் கொண்டிருப்பது இருக்க, காங்கிரஸுக்குள்ளேயே அரித்துக்கொண்டிருக்கும் சில சக்திகளும், சமீபத்தில் திரிபுரி காங்கிரஸுக்கு அப்புறம் கிளம்பி இருக்கின்றன. முன்னணிக் கட்சி! ரொம்ப அழகான பெயர்! மனித மனப்பான்மையின் வளர்ச்சி ஆவலைக் காட்டும் ரொம்ப பொருத்தமான பெயர் தான். வாஸ்தவத்திலே அது வெகுவாக முன்னேற்றத்துக்குப் பாடுபட வேண்டும் என்பது எல்லோருடைய விருப்பமும்.

ஒரு கட்சி என்றால், ஒரு பத்திரிகையும் தொடரவேண்டும் என்பது சம்பிரதாயம். ஸ்ரீ சுபாஷ் சந்திரபோஸ் பத்திரிகாசிரியராகிவிட்டார். அவருடைய 'பார்வர்ட் பிளாக்' என்ற வாரப் பத்திரிகை முதல் இதழில் அதன் முதல் வார்த்தையே அழகாக வரவில்லை.

மஹாத்மா காந்தியும்,காங்கிரஸ் செல்வாக்கு பெற்று இருக்கும் மந்திரி சபையினரும், அவர்களுடைய ஆலோசனையாளர்களும் போராட்டம் என்பதைப்பற்றியே மனதில் சிந்திக்கவேயில்லை. அவ்வளவு தூரம் சட்ட மனப்பான்மை (மிதவாத) பதிந்து போய்க் கிடக்கிறது என்று கூறி இருக்கிறார் சுபாஷ்!

இடது கை போதும்!

மஹாத்மா காந்திக்கு போராட்டச் சிந்தனையே கிடையாதாம் இப்போது! வாஸ்தவம். காலடியில் தளம், அஸ்திவாரம் பலமில்லாத சந்தர்ப்பத்தில் எம்பிக் குதிக்க அவர் விரும்பவில்லை. அவர் தளத்தைப் பலப் படுத்தச் சொல்கிறார். ஸ்ரீ சுபாஷ் இந்தக் கருத்தை மனதில்கொண்டு முன்னணியை வகுத்தால்தேவலை. ஆனால், அவர்தான், வலது கையை ஒடித்து எறிந்துவிட்டு, இடது கை ஒன்று மட்டும் போதும், அதன் பலத்தையும் சேர்த்துக் காட்டலாம் இந்த ஒரே கையால், என்று சொல்கிறாரே. அவருக்கு இது எங்கே படப் போகிறது?

வங்கக் கைதிகள் உண்ணா விரதத்தைக் காரணமாகக் கொண்டு அகில இந்திய போராட்டம் நடத்த வேண்டும் என்று துடியாக துடிக்கிறார் சுபாஷ் தனித்து நின்று. காந்திஜி சொல்லியும் நிறுத்தாத உண்ணாவிரதிகள், சுபாஷ் சொல்லி நிறுத்திவிட்ட பெருமையை சுபாஷ் அடைந்து விட்டது அவருக்குப் பெருமை தான். காந்திஜியே சுபாஷைப் பாராட்டி "இது எனக்குக் கொஞ்சம் நம்பிக்கை அளிக்கிறது. என்னால் ஆன சிறு முயற்சியை செய்கிறேன்" (2000 பேர்கள் அவர் முயற்சியில் டுவிதலை அடைந்தது சின்னது தானே!) என்று சொல்லி இருக்கும்போது சுபாஷ் வெற்றியைக் குறைவாகமதிப்பிட விரும்பவில்லை.

ஆனால் ஒன்று மட்டும் சொல்லாமல் இருக்க முடியவில்லை. இத்தனை நாள் உயிரை திரணமாக மதித்து பட்டினி கிடந்து வந்த கைதிகள், அவர்கள் செய்த தியாகத்தின் அளவுக்காவது பலனை காணாமல் விட்டதும்,

'நான் திருத்தவே சொல்ல மாட்டேன்' என்று ஆர்ப்பாட்டம் செய்த சுபாஷும் ஒரு அபிவிருத்தியும் காட்ட முடியாத நிலைமையில், 'இரண்டுமாத அவகாசம் கொடுப்போம்' என்று தனக்குத் தானே ஆக்ஷேபணையும், சமாதானமும் செய்து கொண்டதும் அவர்கள் வெற்றியைக் காட்டுகிறதா? அவர்கள்தான் சொல்ல வேண்டும்.

* * *

மஹாத்மா யோசனை

மஹாத்மா காந்தி வெற்றியை எப்போதும் தன்னிடமே வைத்துக்கொள்ள வேண்டுமென்று ஆசைப்படுபவரல்ல. காங்கிரஸின் வெற்றி, கடமை இரண்டுதான் அவருக்குப் பிரதானம். சமீபத்தில் அவர் சொல்லிவிட்டார்.

'சமஸ்தான ஊழியர்கள் எல்லோரும் என்னிடம் வந்து ஆலோசனை கேட்டு, எதிர்பார்க்க வேண்டாம். அகில இந்திய சமஸ்தான பிரஜைகள் மஹா நாட்டின் நிரந்தரக் கமிட்டி இருக்கிறது. அதனிடம்போய் ஆலோசனை கேளுங்கள். கிரியாம்சையில் வழிகாட்ட அது தான் சரியானது.'

'காங்கிரஸ் காரியக் கமிட்டியின் வரம்புக்கு உட்பட்ட போது வேலைகளில்கூட நான் காங்கிரஸ்காரர்களுக்கு யோசனை கூறுவதில்லை. ஆனால் அவர்கள் அணுகும்போது யோசனை சொல்லத் தயாராக இருக்கிறேன். சமஸ்தான விஷயங்கள் விஷயத்திலும் அப்படித்தான் இனி நடந்து கொள்வேன். காங்கிரஸுக்கு ஒரு கடமை இருக்கிறது. சமஸ்தான பிரஜைகள் மஹா நாட்டுடன் காங்கிரஸுக்கு ஏதோ ஒரு விதத்தில் சம்பந்தம் இருப்பதாக எனக்குத் தோன்றுகிறது. அதன் மூலம் காங்கிரஸ் தன் கடமையைச்செய்யும்.'

சமஸ்தான மன்னர்களோடு போராட வேண்டிய விஷயங்களுக்கு, யோசனை செய்வதை அந்த சமஸ்தான பிரஜைகள் மஹாநாட்டுக்கே விட்டு விட்டார் காந்திஜி, நேருக்கு நேர் அவர்களே கலந்து கொள்ளட்டும் என்று. பிறர் நுழைந்து கலக்கிறார்கள் என்ற புகார் இனி அரசர்களிடமிருந்து கிளம்பாதல்லவா? பொதுஜனக் கிளர்ச்சிக்கு எதிராக தாங்கள் எப்படி ஒன்று சேர கச்சை கட்டிக் கொள்ளுகிறார்களோ, அதே மாதிரி இனி அகில இந்திய சமஸ்தான பிரஜைகளும் ஒன்று சேர்ந்து போராட இந்த யோசனையிலிருந்து வகை ஏற்படும். ஆனால் காங்கிரஸின் கடமையையும் காந்திஜி வற்புறுத்தி இருக்கிறார். காங்கிரஸ் எப்போதும் போல் பின்னலிருந்து யோசனை கூறிக்கொண்டு இருக்கும்.

* * *

முடவன் கோபம்தானே!

எவ்வளவு காலம்தான் ஊனமான அங்கத்தை பொத்திவைக்க முடியும்? கடைசியில் ஒரு மட்டுக்கு சேம்பர்லேன் வாயிலிருந்தே வெளிவந்துவிட்டது. 'கீழ்க்கோடியில் ஜப்பானுக்கு மேலான ஒரு கடற்படை இப்போது நம்மிடம் கிடையாது' என்பதை பட்டவர்த்தனமாக ஒப்புக் கொண்டு விட்டார். என்ன செய்வது? பேர் போன பிரிட்டிஷ்

கௌரவத்தை விட்டு உண்மையைச் சொல்லவேண்டிய சந்தர்ப்பமும், நிர்ப்பந்தமும் ஏற்பட்டுவிட்டது. இத்தனை நாளாக ஜப்பான் படுத்திவரும் பாடுகளுக்கெல்லாம், 'இன்னொரு கன்னத்தில் அடி பார்ப்போம்' என்று காலை பின்னுக்கு இழுத்து, கன்னத்தைத் தடவிக் கொண்டிருந்ததின் ரகசியம் எல்லாம் இந்த வார்த்தையில் தெளிவாகி விட்டது.

ஆனால் அதிலேயும் ஒரு சமாதானம். 'அத்தகைய படை இங்கே ஐரோப்பாவில் இருக்கிறது. அவசியம் வந்தால் அதை அனுப்புவோம்' என்று சொல்லிக் கொண்டார். அவசியம் இனிமேல் தான் ஏற்படவேண்டும் என்ற அபிப்பிராயம் இருக்கட்டும். அனுப்புவது சாத்யமாக இருக்குமா என்று கேள்வி.

மேற்கே உள்ள புகைச்சலுக்குள் அகப்பட்டு, கண் அவிந்த நிலையில், இந்த கடற்படை எப்படி கிழக்கோடிக்கு வரப்போகிறது என்ற திண்ணக்கத்தில் இன்னும் ஜப்பானியர் எதுவும் செய்யலாம். பிரிட்டனும் துணிந்து ஒரு எட்டு முன் வைக்கப்போவதும் எங்கே என்று தான் தோன்றுகிறது. என்னதான் இருந்தாலும் முடவன் கோபம்தானே!

வடமேற்குப் புகைச்சல்

ஆசியா விஷயத்தில் இப்படி இருந்தாலும், ஐரோப்பிய விஷயத்தில் பிரிட்டன் ஒரு வார்த்தை பலத்துப் பேசிவிட்டது கடைசியில். அதன் பயனாகத்தான் இன்னும் டான்சிக்கின் எதிர்காலம் நிர்ணயிக்கப்படாத நிலையில் இருக்கிறது. போலந்து முஸ்திப்புச் செய்து, ஜெர்மனியை உஷார் படுத்திக்கொண்டிருக்கிறது. 'டான்சிக்கில் ஒரு மயிரிழைகூட விட்டுக் கொடுக்கமாட்டோம்' என்று போலிஷ் தளபதி ஸ்மிக்லி ரிட்ச் எச்சரித்து இருக்கிறார்.

இதுவரையில் அரட்டி மிரட்டி காரியத்தை சாதித்துக்கொண்டு இருந்த ஜெர்மனியிடம் பழைய துணிவு இல்லை. தயங்கி யோசனை செய்ய ஆரம்பித்திருக்கிறது. பிரஞ்சு-பிரிட்டிஷ், ரஷ்ய ராணுவப் பேச்சு மாஸ்கோவில் ஆரம்பமாகப் போகிறது. போலந்தும் அதில் கலந்துகொள்ள ரஷ்யா அழைப்பு அனுப்பி இருக்கிறது. ஹிட்லரின் தயக்கத்தை அது அதிகரிக்கச் செய்யுமோ, இல்லை, அது முடிவதற்குள் டான்ஸிக் விஷயத்தில் ஒரு கை பார்த்து விடலாம் என்ற நினைப்புத் தோன்றுமோ தெரியவில்லை. கோயரிங்கின் மிரட்டலுக்குக் கொஞ்சமும் குறைவில்லை. டான்ஸிக் எதிர்காலத்தைப்போல் யுத்தத்தின் எதிர்காலமும் நிர்ணயிக்கப் படாமல் இருக்கிறது, வாராவாரம் தள்ளிப் போய்க்கொண்டு.

அகத்தியர் வைத்தியம்

பொதிகையின் கண் உபதேசித்தருளிய அகத்திய முனிவர், இந்த சரீரம் அழியா வண்ணம், புகன்ற சித்த ஔஷத முறைகள் அனந்தம். உலகில் உதித்தவர்களும், உதிப்பார்களும் வினையாலும் செய்கையாலும், உற்பவிக்கும் 4448 வித பிணிகளால் பீடிக்கப் படுகிறார்கள். அதிற்சில பின்வருமாறு:—

நீர்நோய் (Diabetes) என்னும் மதுமேக ரோக லக்ஷணம்.

மதுரோகம் உண்டாவதற்குக் காரணம் என்ன ?

மதுரோகம் என்னும் நீர் வியாதியைத் தடுத்துக்கொள்ளும் உபாயங்கள் எவை ?

மதுமேக ரோகத்தை அறவேயொழித்து சரீரத்திற்குத் திடகாத்திரத்தைத் தரும் சித்த ஔஷதம் எது ?

இவைகளை அகத்தியன் முறைகளிலிருந்து நன்கறிந்து கொள்ளுங்கள் !

மேகநீர் ரோகம் இருபது வகைப்படும். அவையாவன. (1) வசா மேகம் (2) மச்சா மேகம் (3) அஸ்தி மேகம் (4) சார மேகம் (5) நீல மேகம் (6) காளமேகம் (7) அரித்திரா மேகம் (8) மஞ்சிஷ்டி மேகம் (9) இரத்த மேகம் (10) இச்சு மேகம் (11) ஜலமேகம் (அல்லது சங்க மேகம், (12) சாந்திரா மேகம் (13) சுருமேகம் (14) பிஷ்ட மேகம் (15) சுக்ல மேகம் (16) சுக்ரா மேகம் (17) சீதமேகம் (18) சனயர் மேகம் (19) லாலா மேகம் (20) மது மேகம் அல்லது பூரண மது மேகரோகம் முதலியவை.

இவைகள் ஒவ்வொன்றின் பெயருக்குத் தக்கவாறு சிறு நீரின் நிறங்களும் குணங்களும் மாறுபடும்.

1. நீர் நிறத்திலும் நாற்றத்திலும் வசம்பை ஒத்திருந்தால் கவசாமேக மெனப்படும்.

2. நீர் மச்சையெனும் மாமிச நிறமாயும், மதுகலந்தது போல வும் காய்ச்சினால் கெட்டவாசனையும் அது உறைந்த விடத்து மோரை ஊற்றியது போலவும் தோன்றின் மச்சா மேகமெனப்படும். (மச்சை யென்பது எலும்புக்குள்ளிருக்கும் சத்து)

3. நீர் யானையின் நீர்போல் இறங்கினால், அது அஸ்திமேக மெனப்படும்.

4. நீர் அதிக உப்பாகவே இறங்குவதும் அது உறைந்த விடத்தில் உவர்மண் சுண்ணும்பு நிறமாகத் தோன்றுமாயின் சாரமேக மெனப்படும்.

5. நீர் சிறிது நீல நிறமாக இறங்கின் நீலமேக மெனப்படும்.

6. நீர் கருப்பு கட்டைக்கரியை அரைத்துக் கரைத்த ஜலம் போல் இறங்கினல், காளமேக மெனப்படும்.

7. நீர் மஞ்சளைக் கரைத்த ஜலம் போல், இறங்கினல் அரித்திராமேக மெனப்படும்.

8. நீர் மஞ்சிஷ்டி வேரின் கிஷாயத்தின் நிறத்தை ஒத்திறங்கி ஞல் மஞ்சிஷ்டி மேக மெனப்படும்.

9. நீர் இரத்த நிறத்தையும் உப்பையும் துர்க்கந்தத்தையும் பெற்று அனலைவீசிக்கொண்டே இறங்கினல், இரத்தமேக மெனப் படும்.

10. நீர் கருப்பஞ் சாற்றைப்போல் மதுரமாக இறங்கினல், இட்சுமேக மெனப்படும்.

11. நீர் சுத்த ஜலம் போல் தெளிந்து மிகுந்தும், மினு மினுத் தும், சிறிது கலங்கலாகவும் இறங்குமாயின், ஜல மேக மெனப்படும். வெண்மையாய் இருப்பதால் சங்க மேக மெனவும் சொல்லுவார்கள்.

12. நீர் வயிற்றில் தங்கி மறுநாள் முழுவதும் குழம்பாக இறங் கின் சாந்திர மேக மெனப்படும்.

13. நீர் மதுவைப்போல் (மது=கள்) இறங்கின் சுரா மேக மெனப்படும்.

14. நீர் அரிசிமாவைக் கரைத்த தண்ணீரைப்போல் இறங்கினல் பிஷ்ட மேக மெனப்படும் (பிஷ்டம்=அரிசிமாவு)

15. நீர் சுக்கிலத்தைப்போல் வெண்மையாக, சுக்கிலம் மிதப்ப தாகவும் இறங்கினல் சுக்கில மேக மெனப்படும்.

16. நீர் வெள்ளை மணல் கலந்த ஜலம் போல் இறங்கின் சித்தா மேக மெனப்படும். (சித்தா=வெள்ளை மணல்)

17. நீர் மிகுந்த குளிர்ச்சியாய் இறங்கினல், சீத மேக மெனப் படும்.

18. நீர் கொஞ்சம் கொஞ்சமாய்ப் பொறுத்துப் பொறுத்து இறங்கின் சனய மேக மெனப்படும்.

19. நீர் கோட்டு வாய் ஜலத்தைப் போல் மினுமினுத்து நூல் இழைபோல் தாரையாக இறங்கினல், லாலா மேக மெனப்படும்.

20. மேற்கூறிய 19 வித மேகங்களிலும் முற்றியதும் கொடியது மான மதுமேகம் என்பதைப்பற்றி விரிவாகச் சிறிது உரைப்போம்.

நீர் தடித்து விழுதலும் ஈ, எறும்பு மொய்ப்பதாய் தேனைப் போல் நிறம், மணம், ருசி, கனம் முதலியவைகளைப் பெற்றுக் காய்ச்சி ஞல் பாகுபோல் காணப்படின் மதுமேகமெனச் (Diabetes) சொல்லப் படும். சில மதுமேக நீர் பசுமையாகவும் மஞ்சள் நிறமாகவும் கடுத்தலுடன் அடிக்கடி இறங்கும் அந்த நீரைப்பிடித்துப்பார்த் தால், ஒரு வித வெண்மைப் பசையாகத் தோன்றினும் அது

மதுமேகந்தான். நீர் வெளிப்படும்போது, நாபியிலும், கோசத்திலும் கடுத்தலுடன் முன்சொன்ன குறிகளுடன் அடிக்கடி நீர் இறங்குவது முண்டு. இதற்கும் மதுமேக மென்றுதான் பெயர். இம்மது மேகத்தில் ஜீரண மதுமேகம், பூரண மதுமேகமென இருவகைப்படும்.

இவற்றுள் ஜீரண மதுமேகத்தின் குணம்:—ஜீரண மதுமேக மானது அதி சீக்கிரத்தில் சப்த தாதுக்களின் பலத்தையும் குறைத்து வாத, பித்த, சிலேஷ்ம சரீரங்களுக்குத் தக்கவாறு சிலருக்கு வாய்வு பராக்கிரமத்துடன் அதிகரித்து அதோகாயமான அடிவயிறுமுதல் பாதங்கள் வரைக்கும் உள்ள நரம்புகளைத் தடுத்து நோவையும், மலபந்தத்தையும் நீர் சிக்கலோடு வெகு உபத்திரவத்தையும் உண் டாக்கும்.

நடுக்கம், மார்பு நோய், மனச்சஞ்சலம், குத்தல், அரை நித்திரை, வாய் உலரல், இருமல், இரைப்பு, முதலிய குணங்களும், பல், நாவு, உதடு, தொண்டை இவைகள் கருத்தலும், படுக்கை பொருந்தாமல் புரளல், நாடி குணபேதமாய் நடக்குதல் முதலிய உபத்திரவங்களை உண்டாக்கி ரோகியைச் சீக்கிரத்தில் ஜீரணிக்கச் செய்வது இது, இதே ஜீரண மதுமேக ரோகமானது சிலருக்குக் கீழ்வயிறு, இவைகளில் வியர்வை, சரீரத்தில் காங்கையுடன் எரிச்சல் புளியேப்பம், மூர்ச்சை, பேதி, சரீரவாட்டம், சரீரத்திலும் கோசத்திலும் நீச்சுநாற்றம் வீசுதல், சீழ், கற்றுழை, ஜலம், தேன் இவைகளைப் போலவே நீர் இறங்குவதுந் தவிர கோசத்திலும் ஈரலிலும், நாபியிலும் ஓர் வித மான நோயும் ரணத்துடன், நாற்றம், சுரம் முதலியவைகளை உண் டாக்கி சரீரத்தை ஜீரணிக்கச் செய்யும்.

மேலும் ஜீரண மதுமேக ரோகம் மற்றுஞ் சிலருக்கு மந்தாக் கினி, அரோசகம், வாந்தி, மயக்கம், சோம்பலான நித்திரை, இருமல், மூக்கடைப்பு முதலிய உபத்திரவங்களை யுண்டாக்கி சரீரத்தை ஜீர ணிக்கச் செய்வதுமுண்டு.

பொதுவாகவே ஜீரண மதுமேகமானது நாளுக்குநாள் அதிசீக் கிரத்தில் கீழ்வயிற்றில் சங்கடம் தோன்றுதல், நீர் இறங்கினுல் ஆபா சங் காணுதல், வாயு பிரபலப்படுதல், வாதபித்த சிலேஷ்மங்கள் ஏக காலத்தில் அதிகரித்தல், சுக்கிலம் நசித்தல், அதிக தாகம் உண்டா குதல், அரோசிகமும் திரேக ஜாட்டியமும் உண்டாக்குதல், கட்டிகள் அல்லது ரணம் பிறக்குதல், கிருமிகள் சேருதலுடன், பேதி அதிகரிக் குதல் ஞாபக மறதியாகுதல் முதலிய இப் பத்துவித அவஸ்தைகளை யும் நாளுக்கு நாள் அதிகரிக்கச் செய்து ரோகியின் சரீரத்தைச் சீக் கிரத்தில் ஜீரணிக்கச் செய்யும். அதனுல் ஜீரண மதுமேக மெனப் பெயர் பெற்றது.

பாரதியும் சாரதியும்

“வரதன்”

என்னை எழுதத் தூண்டியவன் பாரதி. அவனை அழகு பெற எழுதத் தூண்டியவன் சாரதி. என் மனத்தைக் கொள்ளைகொண்டவன் பாரதி. அவனது மனதிலே வேரூன்றி விளங்கியவன் சாரதி. என்னை ஆட்கொண்ட தேவதூதன் பாரதி. அவனை ஆட்கொண்ட தேவதேவன் சாரதி. தமிழ் இலக்கியத்தேரின் சாரதி பாரதி. பாரதியின் ஞானரதமாகிய மனோரதத்தின் சாரதியும், அருச்சுனனின் அழகிய தேரை வெற்றியுடன் செலுத்திய சாரதியும் ஒருவனே!

‘அன்பெனும் தேனூறித் ததும்பும் புதுமலர்’ சாரதி. அம்மலருடன் கலந்து,அதன் உள்ளே இருக்கும் இனிய மதுவை அபரிமிதமாக அருந்தி, அகமகிழ்ந்து, ரீங்காரம் செய்து, பாரில் உள்ளவரைப் பரவசப்படுத்தும் வண்டு பாரதி. சூரியனது பேரொளியைப் போன்றவன் ஸாரதி. அவ்வொளியை அனுதினமும் பெற்றுப் பொலிவுறும் புஷ்பஜாதிக்கு ஒப்பு பாரதி. வண்மை பொருந்திய வான்மழை சாரதி. அவ்வருள் மழை ஜலத்தால் அழகுற்றுப் பலருக்கும் பயன் தந்துதவும் அரிய பயிர்வகை பாரதி.

பாரதியின் உளமறிந்து அவனது பருவம், விருப்பம் இவைகளுக்கிணங்க இன்ப துன்பம், ஏற்ற வீழ்ச்சி, வெற்றி தோல்வி என்ற இரட்டைகளில்—அறிவு வளர்ச்சிக்கு ஹேதுவாகிய இரட்டைகளில், இனிய கதைகள் கூறித் தன்வசப்படுத்திய தாயே சாரதி. பாரதியின் மனதை மதக் கொலைகளிலும், மூத்தவர் பொய்க் நடையிலும் இளமூடர் தம் கவலைகளிலும் சிறிதுகூடச் செல்லவிடாமல் தடுத்து ஆட்கொண்டு வெற்றியையும் வீரத்தையும் ‘உணர்வெ’னும் பாலின் மூலம் ஊட்டி வெகு திறம்பட வளர்ந்த வீரத்தாய் சாரதி.

நல்வழியிலேயே பாரதியை நடத்திச் சில நேரம் அவன் மனம் நையும் வரையில் சோதனையும் செய்து, இறுதியில் ஆறுதலும் அளித்திட்ட அப்பன் ஸாரதி. துன்பம் நெருங்கி வந்த காலத்தும் நெஞ்சிலே சிறிதும் தளர்ச்சி கொள்ளாதிருந்த பாரதிக்கு ஓங்குபுகழ்ச் செல்வம் உதவிய உயர் தந்தை சாரதி.

பாரதியின் மனமாகிய தோணி, வாழ்க்கையாகிய கடலில் பிரயாணம் செய்ய, விதியாகிய காற்றால் வருத்தி அலைக்கப்பட்ட

பொழுது, நடுநிலையிலே நின்று விதிச்செயலைக் கண்டு கலங்கா திருக்கும்படி கண்காட்டி அருளிய தனிநாயகன் சாரதி.

* * *

'காதல் பெரிதெனக்குக் காசு பெரிதில்லை' என்ற உயர்ந்த தொரு லக்ஷியம் கலந்த ஒப்பந்தத் தின்பேரில் பாரதியின் மனமாகிய வீட்டைக் காவல் காத்துவந்த கண்ணிய மான வேலையாள் சாரதி.

* * *

பண்பிலே தெய்வம் ஆகி பார்வையிலே சேவகனாய்த் தோன்றி பாரதியின் குற்றேவல் களைக் குறைவறச் செய்து ஆட் கொண்ட அருங்குணக் குன்றே சாரதி.

* * *

'திண்ணைவாயில் பெருக்கி நித் தச் சோறினுக்கு ஏவல் செய்ய வந்தவன்,' என்று கூறிக்கொள் ளும் பாரதியைத் தேசம் போற் றத் தன் மந்திரியாக்கி நிகரிலாப் பெரும் செல்வம் உதவிய உண்மை பூபதி சாரதி.

* * *

"ஆசையும் தாபமும் அகற்றி ஆவன புரிந்து வாழ்க" என்று அன்புடன் பாரதிக்குக் கற்றுக் கொடுத்தவன், சீடன் வேடம் பூண்டு அவனிடம் வந்தமர்ந்த அண்ணல் சாரதி. அண்டத்தில் தோன்றிய குமிழிகளில் வலு வடைந்தது பாரதி. அறிவான தனிச்சுடர் சாரதி. அது திரிந் தாடும் உலகு பாரதி.

* * *

பாரதியின் நெஞ்சிலே நேசத்தை நிலைநாட்டி, ஆனால் நினைவில் மாத்திரம் முகவொளி யைப் பூராவும் காட்டாமல் கணப் பொழுதுக்கு மட்டும் சிறிது கலங்க வைத்து, பின்னர் அவன் முன்னிலையில் தோன்றாமல் தோன்றி, அவனது உடலைத் தொடாமல் தொட்டுச் சுகம்பெறச் செய்யும் சுத்த வீரக் காதலன் சாரதி.

* * *

பாரதியின் கற்பனையிலே குழந்தை கண்ணம்மாவாகத் தோன்றி, ஆடிப்பாடி அகமகிழ் வித்த அழகன் சாரதி. தான் சொல்லும் மழலையில் பாரதியின் துன்பத்தைத் தீர்த்ததும் சாரதி. முல்லைச்சிரிப்பால் அவன் மூர்க்கத் தைப் போக்கினதும் சாரதியே.

பாரதி வாழ்க!

கலைஞான வரலாறு

(முன் கதைச் சுருக்கம்.)

[கருப்பூர் என்னும் கிராமத்தில் சிவஞான தேசிகன் என்னும் பிராமணன் தன் மனைவியோடு இல்லறம் நடத்திவர, தவத்தன்மையால் தக்க காலத்தில் ஓர் மகனைப் பெற்றனர். அம்மகனுக்கு சுவாமிநாதன் என்னும் பெயரிட்டு, கல்வி பயிற்றுவித்து அன்போடு வளர்த்து வந்தனர். சகல சாஸ்திரங்களிலும் தேர்ந்தோங்கிய அம்மறைமகன், பத்தொன்பதாம் வயதில் ஞான மேலீட்டினால், தாய் தந்தையர் செய்வித்த மண ஏற்பாடுகளை வெறுத்து, பெற்றோர் அறியாமல் முனிவர்க்கிடமான வனத்தையடைந்து, அங்கொரு முனிவரையடுத்து, ஞான உபதேசம் உபதேசித்தருளும்படி அவரை வேண்டினன். முதலில் முனிவர் அவனைத் தடுத்து இல்லறத்தினின்றும் நற்கதி அடைவதற்கு மார்க்கமுண்டு என பல உரைத்தும், துறவறத்தையே அம்மறைமகன் வேண்ட, முனிவரும் ஞானம் உதயமாகும் சில உபதேசங்கள் செய்து தனது இருப்பிடத்திற்கு அழைத்துச் சென்றார். இது இப்படியிருக்க, மகன் வரவைக் காணாத தாய் தந்தையர்கள், தவித்துத் துயரில் ஆழ்ந்து, தமது வீட்டுக்கோயிலில் உள்ள விக்ரக வடிவமான உமாதேவியாரின் பாதங்களில் வீழ்ந்து துதித்துப் பிரலாபித்துப் பின்னும் சில புகல்வராயினர்,

சிவஞான தேசிகரும் அவரது மனைவியாரும், தங்கள் மகனது பிரிவாற்றாமல் சோகமுற்றனர். எனினும் ஒருவாறு தேறி, தங்கள் இல்லத்தை விடுத்து, மகனைத் தேடி, வனவழி சென்றனர். வனவழியில் நெடுந்தூரத்தில், ஆசிரமம் ஒன்று அவர்களுக்குத் தென்படவே, அங்கு சென்றனர். அந்த ஆசிரமத்தில் எழுந்தருளியிருந்த முனிபுங்கவர், வந்தடைந்த சதிபதிகளின் மனதைத் தேற்றுவதற்காக, முனிவர் பெருமானான அகஸ்திய மாமுனி உபதேசம் செய்ததை, தேசிகருக்கும் அவரது மனைவியாருக்கும் எடுத்துச் சொல்ல விருப்பங் கொண்டு, சிலவற்றைச் சொல்லுகின்றார். தவத்திலிருந்த மலை மன்னன் முன் உமாதேவி மூன்று வயது குழந்தையாக உற்பவிக்கின்றாள். அதைக் கண்டு மலை மன்னன் மகிழ்ச்சி கொண்டு குழந்தையை எடுத்துக்கொண்டு வீடு போய் செல்வமாய் வளர்க்கிறான். ஐந்தாம் வயதில் பார்வதி என்று பெயர் வைத்தான். பதிமூன்று வயதான பொழுது பார்வதி பரமேசுவரனைக் குறித்துத் தவம் செய்ய வேண்டுமென்று தந்தையை வேண்டினள். தந்தையும் அதற்கிணங்கி அவளை மலைச்சாரலில் தவம் புரிந்த வசிஷ்ட முனிவரிடம் கூட்டிச் செல்லுகிறார். வசிஷ்டர் பார்வதிக்கு தவ முறையைச் சொல்லுவதிலிருந்து இன்று கதை.]

வசிஷ்ட முனிவர் பார்வதி தேவிக்குத் தவப்பயனால் பரமேசுவரனை அடைதல் முடியுமென்று தவத்தை முறைப்படி செய்யும் தன்மையைச் சொல்லத் தொடங்கும் சமயத்தில், தனதாசிரமத்தை அடுத்து, ஓர் கன்னிகை வருவதைக் கண்ணுற்றார். அம்மங்கையும் மிகுந்த சோகமுற்றவளாய், முனிவரும் தேவியாரும் அமர்ந்திருக்கும் ஆசிரமத்தை நெருங்கி, நமஸ்கரித்து நின்றனள்.

முனிவர் அம்மங்கையை நோக்கி, "மாதே, நீயார்? இங்கு வந்த காரணம் யாது? புகல்வாய்" என்றனர். அவ்வரிவையும் சில சொல்லத் தொடங்கினள்.

"முனி புங்கவ, அடியாளின் பெயர் ஜயவதி. நான் வேதபுரி என்னும் பட்டணத்தைச் சேர்ந்தவள். நான் சிறு வயதில் தாய் தந்தையர்களை இழந்தேன். பின், ஒருவர் உதவியால், பால்ய வயது மட்டும் வளர்ந்து வந்தேன். பிறகு ஓர் பெரிய குடும்பத்தில் பணி செய்து அவர்களிடம் உணவையுண்டு வாழ்நாளைக் கழித்து வந்தேன். வயதும் பதினொன்றாயிற்று. இடையில் விதிவசத்தால் ஓர் கிழவியின் துர்போதனையைக்கேட்டு ஆய்ந்தோய்ந்து பாராமல் மன மயக்கங்கொண்டு, என்னை ஆதரித்து வந்த குடும்பத்தினின்றும் பிரிந்து அவ்வூர் புரத்திலுள்ள லீலை என்னும் தாசிப்பெண் வீட்டை அடைந்தேன்.

"நான் சென்ற முன்னிரவு லீலை என்பவள் என்னுடன் நீண்ட நாள் பழகியவள்போல் உபசார வார்த்தைகள் பலபேசி, எனக்கு ஸ்நானம் செய்வித்து விலையுயர்ந்த பட்டாடைகளையும், நவரத்தினாபரணங்களையும் என் முன் வைத்து, "தங்காய் இவைகளை அணிந்து கொள்" என்று சொன்னாள்.

"அதற்கு நான்? 'அம்மா! தாழ்ந்த நிலையிலிருக்கும் எனக்கு இவ்வரிய அணிகள் எதற்கு' என்று தடுத்தும், லீலையின் சாமர்த்தியத்தால் கட்டுண்டு, அவ்வாடையாபரணங்களை அணிந்து கொண்டேன். பிறகு அன்றிரவு நடந்ததை என்னால் புகலவியலுமோ? நாவெழவில்லை. இவ்வரிய பூமியின்கண் உதித்த ஆடவர்களும், அரிய கற்புக்கரசிகளும் அந்த லீலையின் மாயா வலையிற் சிக்குண்டு அழியுந்தன்மையை என்சொல்வேன்"?

முன்னிரவில் நடந்தவைகளை நினைக்கின், உடல் பதறுகிறது. பாதகச் செயல்களையே தொழிலாக நடத்திவரும், அவ்வஞ்சகியை ஒழிக்க எனக்கு ஆவேசந் தோன்றுகிறது. ஆ... நானோ இளகிய

குறை மனத்தினையுடைய ஓர் பெண். என்னசெய்ய இயலும்? திடமனதையுடைய ஆடவனும் உதித்திருக்கக் கூடாதா? ஆம் திட மனதையுடைய ஆடவர்கள்தானே அப்பாதகியின் மாயவலையில் சிக்கி, கற்பிழந்து கர்ம மூட்டையைச் சுமந்து கொள்ளுகிறார்கள்? ஆ... நான் என்ன உளறுகிறேன்? பேதை மனமே! நீ இருக்குமிடம் எங்கென்று தெரியவில்லையோ?

உடனே முனிவரின் பாதத்தில் விழுந்து "சுவாமி, அடியாள் தெரியாமல் செய்த பிழை இருக்கின், மன்னிக்க வேண்டுகின்றேன். நான் கிழவியின் போதனைக்கிணங்கி, முன்னிரவு பெரிய ஆபத்தில் சிக்கினேன். ஆயினும் பரமேசுவரரின் கிருபையாலும், தாங்கள் போன்ற முனிபுங்கவர்களின் அருளினாலும், அவ்விபத்தினின்றும் தப்பித்து இன்று முழுமையும், பல இடங்களிலும் அலைந்து கடைசியாகத் தங்களுடைய அழகிய ஆசிரமத்தைக் கண்டு, இப்புண்ணிய வதிக்குத் தாங்கள் மனமிரங்கி அனுக்கிரகிப்பதைப் பார்த்து, திடங் கொண்டு எனக்கும் தங்கள் அருள்வாக்கு அமிர்தம் கிடைக்குமென நம்பி தங்களையே தஞ்சமடைந்துளேன். தங்கள் கிருபை யாதோ?" என்று பின்னும் துதித்து நின்றனள்.

அம்மங்கை, பதைப்புடன் நா உலரப்புகன்ற அனைத்தையும் ஆசனத்தில்அமர்ந்திருக்கும்பார்வதிதேவியார்கேட்டு,அப்பாவையின்மேல் பரிதாபமுற்று பலவாறுயச் சிந்திக்க, மலைமன்னன் புதல்விதான் என் றிருந்த மனம் நீங்க, தான் கைலைக்கு அரசி என்னும் நினைவெய்திய வுடன், மிகத் தாபமுற்றவராய், மதிபோன்ற முகம் மாறுதலடைய, புவியஞ்ச, அண்டங்களென்படுமோவென அஞ்ச, ஆதிசேடனின் சிரம் சிதைய ஆசனத்தினின்றும் எழுந்தனள்.

அக்காலையில் முனிவர் பெருமான், தேவியின் செயலை உணர்ந்து உடல் நடுங்க, ஆசனத்தினின்று உடனே எழுந்து, தேவியைப்போற்றிச் சில புகல்வராயினர்.

"மூவருக்கும் முதல்வியே! கிருபா சமுத்ரீ! மலையாசன் மகளாய் அவதரித்த என் மாதாவே! தயாபரி! உலகமெலாம் படைத்து உணவளிப்பவளே? நாக கங்கணியே! நின் தாபம் யார் பொறுப்பார்? இப்பெரிய அண்டம் அனந்தமும் பொறுக்குமோ? ஆதலின் அடியேன் மீது கிருபை கூர்ந்து சினத்தை யகற்றி அடியேனை ஆதரிப்பீராக" என்று முனிவர் போற்றி நின்றார்.

தேவியும் முனிவர்க்கிரங்கி, "நன்று முனிவ! இப்பேதையின் முழு விருத்தாந்தங்கள் யாவை யென்றறிய விரும்புகிறேன். தெரிவிப் பீராக!" என்றனர். பின்னும் முனிவர் வணங்கி, "தாயே, உம் மனம்போல் புகல்வேன். ஆசனத்தில் அமர்ந்தருள்வீரே"என வேண்டினர். தேவியும் சாந்தம் பொருந்திய மூர்த்திகரத்தோடு ஆசனத்தில் அமர்ந்தருளினர்.

பின்னர் முனிவரும் தன் ஆசனத்தில் அமர்ந்தனர். இச்சமயத்தில் ஜயவதி என்பாள் தேவியின் செயலையும் முனிவர் பயந்து வணங்கிய தன்மையாலும் துதிக்கும் முறைகளாலும் சொரூப தரிசனத்தாலும் பரமேசுவரியென ஒருவாறு அறிந்து இரு கால்களும் நடுங்க, இரு கரங்களையும் சிரமேல் அமைத்து, இரு கண்களினின்றும் நீர் விழ, மனத்துள் அநேக தியானஞ்செய்த வண்ணம் நின்றனள்.

பார்வதியம்மனும் தயவால் அவ்வரிவையை அழைத்து, ஓர் இடத்தைக் குறிப்பிட்டு, அங்கமரும்படி கட்டளையிட்டனர். அப் பாவையும் நடுக்கமுற்று, நடத்தற்கியலாமல் நிற்க, முனிவரும், "பேதாய் வா! இங்கு அமர்வாய்" என்றனர். அம்மங்கையும் ஒரு வாறு திடமுற்று அமர்ந்தனள். முனிவர் தேவியாரை நோக்கிச் சொல்லுவார்:—

"தாயே! இந்த ஜயவதி யென்பாள் முன் ஜென்மக் குறையால் சிறு வயதில் தாய் தந்தையர்களை இழக்க நேர்ந்தது. வினையுற்ற காலம் வரை, பணிகளைச் செய்து உடல் வளர்த்து வந்தனள். முன் ஜென்ம தோஷம் நீங்குங் காலம் நெருங்க, அக் கொடிய கிழவியைச் சந்தித்து, அன்னளின் போதனைப்படி லீலை யென்பாளின் இல்லத்தை அடைந் தனள். அங்கு இவள் கண்ட தீய செயல்களால், மனம் பதைத் தடங்க, கல்லறிவெய்தி, தீரம் மிக்க திரிபுர சுந்தரியான உம்மையும் காணும் பாக்கியம் பெற்றனள்.

"இவ்வரிவை, பின்னும் தங்களுடைய கிருபையால் முன்னிரவில் கண்ட குணபதி என்னும் ஆடவனை மணந்து, கற்புக்கரசியாய், தியா கம், சத்தியம், சம்பத்து முதலிய பதினறு பேர்களைப் பெற்று, லீலை யின் துர்ச்செயல்களையும் கண்டித்து, மாயையாலழியும் மானிடர்க்கு இல்லற தருமம் இதுவென நிரூபித்து உமதரிய பதத்தையும் பெறு வாள். ஆதலின் தாங்கள் சாந்தமுறுவதே தக்கது" என்றனர்.

உமாதேவியாரும் முற்றும் தாபமகன்று, மனமகிழ்ந்தனர். முனி வர் அவ்வரிவைக்கு ஆகாரம் கொடுக்கும்படி, தனது சிஷ்யர்களுக்குக்

கட்டளையிட, அம்மங்கை அதை உண்டு, வணங்கி தேவியாரின் பாத மமையும் பக்கமாய் அமர்ந்தனள்.

தேவியாரும் முனிவரை நோக்கித் தவச்செயலை உரைக்கும்படி வேண்ட, முனிவரும் தொடர்ந்து சொல்லி முடித்தனர். பின்னும் முனிவருரைப்படி, வசிஷ்டர் ஆசிரமத்தின் பக்கத்தில் ஓர் பெரிய பர்ணசாலையை அமைத்து தந்தை யுதவியால், தவத்திற்கு வேண்டியவை யாவும் சித்தம் செய்துகொண்டு, ஜயவதியைத் தன் தவத்தின் பணிக்குதவியாய் அமர்த்திக்கொண்டு, முனிபுங்கவரீந்த ஸ்படிக லிங்கத்தை சாலைபால் அமைத்து தவார்ச்சனை செய்யத் தொடங்கினர்.

தேவியார் செய்யும் தவத்தன்மையையும், லிங்கார்ச்சனை மகிமையையும் நம்மால் சொல்லவியலுமோ? சிவஞான தேசிகரே! கதையல்ல, கருத்தை யுணருங்கள். நன்மை விளங்கும். மாயை அகலும். தேசிகரே! தேவியார் தவஞ் செய்யும் தன்மையால் உஷ்ண மேலிட்டு, உலகெலாம் பரவ, தேவமுனிவரும் அஞ்சி நின்றனர்.

இக்காலையில் பரமேசுவீர ஜனகாதி நால்வரும் அண்டித் துதித்து மனமடங்கும் தன்மையை யோகவழியாய் காட்டியருளும்படி வேண்ட, ஈசனும் நால்வருக் கிரங்கி, நிஷ்டையிலமர்ந்தனர். தேசிகரே, மற்றும் நாளை புகல்வோம்" என்று முடித்தனர்.

மொழி பெயர்ப்பாளர்களுக்கு,

வாசகர்களுக்கு மதிப்பு வைக்கும் மொழி பெயர்ப்பு ஆசிரியர்கள் என்று நினைத்து உங்களுக்கு இந்தக் கடிதம் எழுதுகிறேன். பிற மொழிகளிலிருந்து தமிழுக்கு மொழி பெயர்க்கவேண்டும் என்று கொஞ்ச காலத்துக்கு முன் பாடி விட்டுச் செத்துப்போனாரே பாரதி, அதன்படி நீங்கள் எல்லோரும் பிற பாஷைகளிலிருந்து முக்கியமாக ஹிந்தி, வங்காளியிலிருந்து மொழி பெயர்த்துத் தமிழுக்குத் தந்துகொண்டிருக்கிறீர்கள்.

என்போன்ற பாமர வாசகர்களுக்கு இவை ரொம்ப உதவியாகத்தான் இருந்து வருகின்றன. அதற்காக உங்களைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

ஆனால் இவ்வளவிலேயும் உங்களைப்பற்றி இரண்டொரு வார்த்தைகள் சிறிது கடுமையாகச் சொன்னாலும் கோபித்துக் கொள்ள மாட்டீர்களே?

முக்கியமாக நீங்கள் சிறு கதைகளைத்தான் நிறைய மொழி பெயர்த்துக் கொடுத்திருக்கிறீர்கள். எனக்குக் கதைகள் என்றால் ரொம்பப் பிரியம். என்போல எத்தனையோ பேர்கள் இருக்கிறார்கள்.

சிறு கதை விஷயத்தில் தமிழ் இலக்கியம் ஐந்து வருஷங்களுக்கு முன் இருந்த நிலைமையில் இப்போது இல்லை என்று உங்கள் எல்லோருக்கும் தெரிந்திருக்கும்.

தமிழில், இந்த ஐந்தாறு வருஷங்களுக்குள், எனக்குத் தெரிய வெளிவந்திருக்கும் 500 கதைகளுக்கு மேற்பட்டவையில், (உங்களுக்கு ஆச்சர்யமாக இருக்கும்) நல்லவை என்று பொறுக்கி எடுக்கக்கூடியவை 200 வெளிவந்திருக்கின்றன. இதைத் தவிர்த்து, பல நூறுகள் இரண்டாம் பக்ஷமாக. முதல்தர சிறு கதை எழுத்தாளர்கள் ஒரு டஜனுக்குமேல் இருக்கிறார்கள் என்று நான் உங்களுக்கு தெரிவிக்க முடியும். அடுத்தபடி முன்னேறிக் கொண்டிருக்கும் கதை ஆசிரியர்களும் ஒரு டஜன் இருக்கிறார்கள்.

நீங்கள் மொழி பெயர்த்துத் தந்திருக்கும் நூற்றுக் கணக்கான கதைகளையும், தமிழனின் சொந்த கற்பனையில் எழுந்திருக்கும் நூற்றுக் கணக்கான சிருஷ்டிகளையும்

வாசித்து இருக்கிறவன் என்ற கர்வத்தில் சொல்கிறேன், உங்களில் அநேகம் பேருக்கு அவ்வளவாகத் தமிழ் சிறு கதை வளர்ச்சியைப்பற்றி சிரத்தையே இல்லையென்று.

இருந்தால், உங்களில் அநேகர் இன்னமும் இரண்டாந்தரம் மூன்றும்தரம், இன்னும் மட்டமான கதைகளை எல்லாம் மொழி பெயர்த்துக் குவித்துக்கொண்டிருப்பீர்களா? — குப்பை கூளங்களைப் போல்.

இதிலே இன்னொரு விஷயம். இப்போது ஹிந்தி படிப்புக்கு எல்லோரும் காட்டும் ஆர்வத்தில், முதல் இரண்டு சின்ன பரிகைஷகள் தேறின உடனேயே கத்துக்குட்டிகள் பலர், தங்கள் ஹிந்தி தேர்ச்சியைக் காட்டிக் கொள்வதற்காக, கன்னாப் பின்னாவென்ற கதைகளை, கைக்கு அகப்பட்டதை, தமிழாக்கி டஜன் கணக்கில் அனுப்பி விடுகிறார்கள்.

எதற்காகச் சொல்கிறேன்? இந்த மாதிரி மொழி பெயர்ப்புகளை நீங்கள் கூடுமானவரையில் நிறுத்திவிடவேண்டு மென்பதற்காக. தமிழின் நிலை இப்போது என்ன என்பதை தெரிந்து கொள்ள வேண்டும். ஒன்று அதற்குப் போட்டியாகவோ, சமமாகவோ இருக்கக்கூடியவை, அல்லது அதற்கு மேற்பட்டவை என்பதை நீங்கள் ஆராய்ந்து கொண்டு, மொழிபெயர்ப்பது உசிதம். அதுதான் நீங்கள் உபயோகமாகச் செய்யக்கூடியது.

ஹிந்தியில் பிரமாதமான எழுத்தாளர் என்பதற்காக மொழி பெயர்ப்பது லாபமில்லை; நஷ்டம். சமீப காலத்தில் அந்தமாதிரிக் கதைகள், தமிழ்க் கதைகளை படித்து ஒரு ஸ்தானம் ஏற்படுத்தியிருக்கும் என் போன்ற வாசகர்களுக்கு ரொம்ப கசப்பைத்தான் தருகிறது.

ஒன்று சொல்கிறேன். நீங்கள் மொழி பெயர்த்து இருக்கும் நாற்றுக் கணக்கில் தமிழ் கதைகளுக்குச் சமமாக இருக்கும்படியாக, ஒரு சில தான் விரல் விட்டு எண்ணக் கூடியவை. வல்லப பந்த், சதுர சேன சாஸ்திரி, சுதர்சன், உக்ர, சரதிந்து பானர்ஜி இவர்களுடையதில்தான். மற்றதெல்லாம் அப்படி அப்படித்தான். கன்னடம் மராட்டியிலிருந்து சில நல்ல கதைகள் கொடுத்திருக்கிறீர்கள்.

இன்னொன்று. தமிழுக்குச் சிறுகதையும், நாவலும்தான் வர வேண்டும் என்பதில்லை. இலக்கியத்தின் இதர அம்சங்களான கட்டுரை, வியாசம், கவிதை மற்றவைகளை முடிந்த மட்டுக்கு மொழிபெயர்க்கப் பாருங்களேன்!

ஏதாவது எழுதித் தள்ளுவது என்ற நினைவு இல்லாமல், தமிழ் இலக்கியத்துக்கு இந்த மொழி பெயர்ப்புக் கதைகளில் ரொம்ப அவசியமாகத் தெரிய வேண்டும் என்றவைகளை மட்டும் கொடுங்கள். தமிழில் வெளிவரும் இரண்டாந்தரக் கதைகளையாவது படித்துக் கொள்கிறோம்.

ஒரு பாமர வாசகன்

———

கிராமவாசிகளுக்கு,

நானும் ஒரு கிராமவாசிதான். சென்ற இருபது வருஷங்களாக, எவ்வளவோ முயற்சி செய்து, எங்கள் கிராமத்தை எப்படியாவது, சீர்திருத்தம் செய்ய வேண்டும் என்று நான் பார்க்கிறேன். என் ஆசை முழுதும் நிறைவேற வில்லை.

ஏன் நிறைவேற வில்லை என்று யோசித்து யோசித்துப் பார்த்தேன். காரணம் தெளிவாகத் தெரியாதபொழுது எப்படியாவது காரணத்தைக் கண்டு பிடித்து விடவேண்டும் என்று ஒரு பிடிவாதம் உண்டாகி விடுமல்லவா?

அந்த மாதிரி பிடிவாதம் பிடித்து, ஏதோ சில காரணங்களை தேடிப் பிடித்திருக்கிறேன். அவைகள் சரியான காரணங்களா என்று யோசனை செய்து பாருங்கள்.

எதையாவது, சீர்திருத்தம் செய்ய முயன்றால், "காலம் வரணும்" என்று நாம் எல்லோரும் சாதாரணமாகச் சொல்லுகிறோம். காலம் வருவது நமது கண்ணுக்குத் தெரியுமா? காலம் எவ்வாறு வரும் என்பதையாவது, நாம் தெரிந்து வைத்துக் கொண்டிருக்கிறோமா?

'காலம் வரணும்' என்றால், பிறர் அந்தக் காரியத்தை நமக்காகச் செய்து கொடுக்கவேண்டும் என்று அர்த்தமா? அல்லது நமக்கு முழுச்சோம்பல் என்று அர்த்தமா?

காலம் வந்துகொண்டே யிருக்கிறது, போய்க்கொண்டே இருக்கிறது. ஆனால், அது வருவதாக வாவது, போவதாகவாவது, நமது கண்ணுக்குத் தெரியாததுதான் அவஸ்தையாக இருக்கிறது.

இன்னு மொன்றும் நாம் சொல்லுகிறோம். குந்துமணி அளவாவது அதிருஷ்டம் இருக்கணும் என்கிறோம். எப்பொழுதுமே, அதிருஷ்டத்தை நம்பிக்கொண்டு இருக்க முடியுமா? அதிருஷ்டம் என்றால் என்ன? பிறன் தேடி, நமக்குக் கொடுப்பதுதானே அதிருஷ்டம்?

இந்த மாதிரி, அதிருஷ்டம் லேசிலே வந்து விடுமா? பிறன் தேடி, நமக்குக் கொடுக்கவேணும் என்ற அக்கரை, அவனுக்கு எதற்காக உண்டாகவேண்டும்? நமக்கு மற்றவர்கள், பாத காணிக்கை கொடுக்கும்படியாக, நம் இடத்தில், என்ன அபூர்வமான சரக்கு இருக்கிறது?

அதோடுகூட, நமக்கு எந்த விஷயத்திலும் யாரிடத்திலும் பயமும் அவநம்பிக்கையும் குடிகொண்டு இருக்கின்றன. ஒருவனிடம், பயமும் அவநம்பிக்கையும் நிறைந்து கிடக்குமாகில், அவனால் எந்தக் காரியத்தைச் சரியாகச் செய்ய முடியும்?

நம்பகிட்ட, அதிகமாகப் பணப் பழக்கம் இல்லை என்பது உலகம் அறிந்த உண்மை. நாம் ஏழைகள் என்ற காரணத்தாலேயே, நாம் எல்லாத் துறைகளிலும் உயர வேண்டும் என்ற பிடிவாதம் நம்மிடம் இருக்கவேண்டாமா?

பத்துப் பேர் சேர்ந்து உழைத்தால், பலிக்காத காரியம்கூட இருக்குமா? நம்முடைய பழைய

கிராமக் கட்டுப்பாட்டைப்பற்றி, ஏடுகள் சிலவற்றை நான் படிக்க நேர்ந்தது. அவர்கள், பழைய காலத்தில், கிராமக் காரியங்களை எவ்வளவு அழகாகவும் விதரணையுடனும் நடத்தி யிருக்கிறார்கள்!

இப்பொழுதோ, பத்துப் பேர் சேர்வது என்பது முடியாத காரியம் போலத் தோன்றுகிறது.

அன்றைக்கு, ஊருக்குப் பொதுவான குளத்தை வெட்ட வேண்டுமே என்று சொல்லிக் கொண்டிருந்தேன். "இவனுக்குத் தான் அக்கரை போலிருக்கிறது" என்று ஒருவர், எங்கள் ஊரில் சொல்லிக்கொண்டு போனார்.

எனக்கு அக்கரை இருக்க வேண்டாம். அவருக்காவது அக்க்ரை இருக்க வேண்டாமா? அவருக்கு அக்கரை வேண்டாம். அதிகாரம் செய்ய சந்தர்ப்பம் இருந்தால் போதும் என்பது அவருடைய எண்ணம்.

அவர் அதிகாரம் செய்வதில் எனக்குக் கொஞ்சம்கூட ஆட்சேபணையே இல்லை. பொதுக்காரியத்தை, யாராவது செய்து முடித்தால் போதும். பொதுக் காரியம் என்ற பொறுப்பே, கிராமவாசிகளிடமிருந்து போய் விட்டாற் போலத் தோன்றுகிறது.

மேலும், நாம், இனியும் கிணற்றுத் தவளைகளைப் போல இருப்பதில் பிரயோஜனம் இல்லை. வெளி உலகத்திலே என்ன நடக்கிறது என்பதைத் தெரிந்து கொண்டு, அதற்குத் தகுந்தபடி, நம்ம கிராம வாழ்க்கையையும் சீர் திருத்தம் செய்துகொண்டு வந்தால்தான், நாம் பிழைப்போம், இல்லாவிட்டால், நகரங்களும் யந்திர நாகரீகமும் நம்மை சாப்பிட்டுவிடும்.

ரொம்ப காலமாக யோசித்ததை உங்களிடம் சொன்னேன். நீங்களும் யோசித்துப் பாருங்கள்.

உங்கள் சகோதர,

கிராமவாசி.

நக்ஷத்திரங்களுக்கு ஆபத்து

"இளந்திறமைக்கு சந்தர்ப்பம் தரவேண்டும் என்ற சாக்கைச் சொல்லிப் பிரசித்திபெற்ற நக்ஷத்திரங்களுக்கு 'கல்தா' கொடுக்க சதி செய்கிறார்கள் பட முதலாளிகள்" என்ற திடுக்கிடும் செய்தி ஒன்று வெளியாகிறது.

குறிப்பிட்ட சில நக்ஷத்திரங்கள் நடிப்பதாலேயேதான் அந்தப் படத்திற்கு கிராக்கி ஏற்படுகிறது என்பது பெரும்பாலும் உண்மை. உதாரணமாக 'பரி டீட' யை விட ரொம்பவும் கீழ்த்தரமானது 'தெருப்பாடகன்' படம். அதில் நடித்த நக்ஷத்திரங்களின் பிரகாசத்தால் அது நாடு முழுவதும் விரும்பப்படுகிறது.

அனுபவம், திரைப்பட நடிகனுக்கு விலையில்லா பொக்கிஷம். எவ்வளவு கலையுணர்ச்சியுள்ளவனு யிருந்தாலும் அனுபவமுள்ள நக்ஷத்திரத்தைவிட வெற்றிபெற முடியாது. ஐந்து வருஷங்களுக்கு முன்பு வெறும் பாகவதராயிருந்த 'ஸைகால்' இன்று இப்படி நடிப்பார் என்று யார் எதிர்பார்த்தார்கள்? நக்ஷத்திரங்கள் மேல் உலகத்தவரல்ல. ஆனால் பல நாளைய பழக்கம் அவர்களைப் பக்குவமாக்கிவிட்டது. அதிலும் ஜகஜ்ஜோதி விளக்குகளுக்குமுன் கண் திறக்கப் பழகவே பல நாளாகுமே!

பழையவர்களை வைத்துக்கொண்டு அடையக்கூடிய உன்னத தசையே இன்று நாம் அடையவில்லையே. அதற்குள் புதுமோகம் ஏனோ! நம் நாட்டில் சிறந்த நடிகர்கள் இருக்கிறார்கள். பலர் ஹாலிவுட் நடிகர்களுக்கு சமம் மாத்திரமல்ல, மிஞ்சவும் செய்வார்கள். ஆனால் தேவை என்ன! புத்திசாலி டைரக்டர்களும் உயர்ந்த டெக்னிக் தெரிந்தவர்களும்தான். ஏகப்பட்ட பணத்தை வாரி இறைத்துத் தயாரிக்கும் நல்ல படத்தில் புதியவர்களுக்குப் பொறுப்புக் கொடுப்பது சூதாட்டந்தான். அது தொழில் முறையுமல்ல; கலையுமன்று.

"அதிகச் சம்பளம் கொடுக்கிறோம்" என்பது உண்மையல்ல. நடிகர்களின் திரைவாழ்வு மிகச் சில வருஷங்களே என்பதை ஞாபகத்தில் வைக்கவேண்டும். அவர்களுடைய தொழிலும் எளிதல்ல. எப்பொழுது கூப்பிட்டாலும் ஓடவேண்டும். விடுமுறை என்ற ஒன்று கிடையாது, பலருக்கு கண்கெட்டு விடுகிறது. மனோவிஞ்ஞானம் உணர்ச்சி, பாசாங்கு, இவைகளை இயற்கைக்கு விரோதமாக வருவித்துக்கொள்ள வேண்டியதால் ஏற்படும் துன்பம் வர்ணிக்கமுடியாதது. எல்லாவற்றிலும் மோசம், முதலாளிகள் நடிகரை நடத்தும் முறை. கலைக் கடவுளை வழிபடும் பூசாரிகள் வேறு வழியின்றி சகித்துக் கொள்ள வேண்டியிருக்கிறது.

எது சனாதனம்?

சனாதன தர்மம் என்ற பெயர் எப்படியெல்லாம் அர்த்தம் செய்யப்படுகிறது?

சனாதனமாக, அதாவது நிரந்தரமாக, ஒரு தர்மம் இருக்க வேண்டுமானால் அதனுடைய கொள்கைகள் கால தேசவர்த்தமானங்களின் மாறுதல்களுக்கு உட்பட்டிருக்க முடியாது.

வார்த்தை வித்தையில் என்ன உபயோகம் இருக்கிறது? சனாதனிகள் அவர்கள் அனுசரிப்பது (அதாவது பேசுவது) தான் சனாதன தர்மம் என்று ஸ்மிருதி ஆகமங்களை எல்லாம் ஆதாரமாகக் காட்டுவார்கள். சனாதன தர்மத்தை அரவிந்தர் எப்படி அர்த்தம் செய்திருக்கிறார்!

"ஈசுவரன் எல்லாவற்றிலும் எச்செய்கையிலும் இருக்கிறார்; அவருடைய ஆக்ஞைப்படி தான் நாம் செயல் செய்கிறோம், வாழ்கிறோம் என்று உண்மையை நமக்கு சதா அறிவுறுத்துகிறது சனாதன தர்மம். இந்த உண்மையை அறிவதும் நம்புவதும் மட்டுமல்ல; அதை நமது வாழ்க்கையிலேயே கண்டனுபவிப்பது என்பதுதான் சனாதன தர்மம். தர்மத்திற்கும் (மதத்திற்கும்) வாழ்க்கைக்கும் பிரிவினை கூடாது என்று வற்புறுத்துவது சனாதன தர்மம் ஒன்றுதான்......நமக்கு சனாதன தர்மம்தான் தேசீயம்."

உலகத்தையே உத்தாரணம் செய்யவேண்டுமென்று புனித புருஷர்கள் ஸ்தாபித்த தர்மத்தை இன்று சனாதனிகள் அநியாயமாக ஒரு சிறு வகுப்பாரின் மதமாக ஆக்க முயலுகிறார்கள். சுருதி புருஷர்களும் உபநிஷத் தர்சனங்களும் வகுத்த ஒரு மகத்தான மார்க்கத்தைத் தங்களுடையது என்று வேலிபோட்டு அடைக்கிறார்கள்.

ரிஷிகளின் மரபில் தோன்றினவர்கள் இப்படியா, இன்றுபேதைகள்போல, பெருந் தன்மையும் தீர்க்கதரிசனமுமின்றி நல்ல காரியத்துக்கு இடையூறாக நிற்க வேண்டும்?

பாமர மக்களுக் கல்லவா கோயில் முக்கியம்? இவர்கள் தான் வேத சாஸ்திரங்களைக் கற்றறிந்து ஞானம் முதிர்ந்தவர்களாயிற்றே! இவர்களுக்கு எதற்குக் கோவில்கள்?

சனாதனிகளின் ஆட்சேபணைக்கு அவர்கள் சொல்லும் காரணங்கள் உண்மையான காரணங்கள் அல்ல. அவர்கள் அந்தரங்க காரணங்கள் சுத்தமாகச் சொன்னால், அவைகள் வேறு. அவற்றைச் சொல்ல வெட்கப்பட்டுக் கொண்டு ஆகமங்களையும் சாஸ்திரங்களையும் முன்னே போட்டு பிரச்னையைக் குழப்புகிறார்கள்.

சனாதனிகள் இந்த வெளிக் கோவில்கள் சுத்தமாக இருக்க வேண்டுமென்று இ வ் வ ள வு போராடுகிறார்களே, அ வ ர் க ளுடைய உள்ளக் கோவில்களைக்

கொஞ்சம் சுத்தம் செய்து பார்க்கக்கூடாதா?

சனதன தர்மத்தின் தத்துவங்களை அறிந்த "அதிகாரிகள்" என்று பெயர் வைத்துக்கொண்டு அதன் கருத்துக்களை வார்த்தைகளுக்கும் பழக்க வழக்கங்களுக்கும் பலியிட்டுப் பிடிவாதம் பிடிப்பது அழகல்ல.

ஆங்கிலத்தில் "என் நண்பர்களிடமிருந்து என்னைக் காப்பாற்று" என்று ஒரு பழமொழியுண்டு. அதுபோல சனதன தர்மத்தின் நண்பர்களிடமிருந்து அதைக் காப்பாற்றவேண்டியிருக்கிறது!

சனதனிகள் உண்மையாகவே தாங்கள் சொல்லுவது போல் நினைக்கிறார்கள் என்று நம்புவது கஷ்டமாக இருக்கிறது. இவ்வளவு ஞானமும், புத்தியும் படைத்தவர்கள் இப்படியும் ஆலயப் பிரவேச விஷயமாக அர்த்தமின்றி வாதம் செய்ய முடியுமா என்று ஆச்சரியமாக இருக்கிறது.

இன்று சட்டென்று முன் வந்து அவர்கள் தங்கள் தாராள புத்தியைக் காட்ட மறுத்தால் இனி அவர்கள் தலையெடுக்க முடியாது. எந்த தர்மம் இதுவரையில் அவர்களைத் தலைகாத்ததோ, அது இனிமேல் அவர்களுக்கு உதவாமற் போய்விடும்.

எதற்கும் ஒரு வரம்பு உண்டு. சனதனம் என்று வெறும் வகுப்பு வாதத்தைக் கிளப்பிக் கொண்டிருப்பது பிசகு. தர்மத்தையே குறுக்கி சிறுமைப்படுத்துவதாகும் அது. அது தர்மத்திற்கும் கெடுதல்; அவர்களுக்கும் கெடுதல்.

ஹரிஜனங்கள் மனிதர்கள் என்பதை இப்பொழுதாவது ஒப்புக்கொண்டு வாழ்க்கையின் பொது ஸ்தலங்களில் அவர்களுக்கு நம்முடன் சம உரிமை கொடுக்க வேண்டாமா?

இந்த சந்தர்ப்பம் தவறினால் சனதனிகளுக்கு வாய் கிடையாது பேச!

ஆண்டையே மனது வைத்து நந்தனுக்கு அனுமதி கொடுத்துவிடுவது எல்லோருக்கும் நல்லது. ஆண்டை உள்பட. இல்லாவிட்டால் நந்தனுக்குக் கடவுளே அனுமதி கொடுத்து விடுவார். ஆண்டை பிறகு கௌரவம் கெட்டு, விழிக்க வேண்டியதுதான்.

சனதனிகள் ஆகம சாஸ்திரங்களோடு நிற்காமல், சட்டம் பேசுவதுதான் அவர்கள் கட்சியை இன்னும் கேவலப் படுத்துகிறது. அவர்கள் சட்டத்தைக் கொண்டு ஆதரவு தேட முயன்றால், சக்தியிருக்கும் பொழுது அவர்களை எதிர்ப்பவர்கள் சட்டத்தை மாற்றுவதில் என்ன தவறு இருக்கிறது? ஒருவருக்கு இருக்கும் உரிமை மற்றொருவருக்கும் இல்லையா, என்ன?

மறதி எதனல்?

(சதயம்) 18691

ஆமாம், சில விஷயங்களை நான் மறந்து விடுகிறேன்.

"நடேசனைக் கண்டால் நான் ரொம்ப விசாரித்தேன் என்று சொல்லுங்கள். அவர் என் கலியாணத்தன்று தாம்பூலத்திற்கு வர வில்லை? மிகவும் மனஸ்தாபப்பட்டேன் என்று சொல்லுகிறீர்களா?" என்று என் நண்பர் சதாசிவம் என்னிடம் சொல்லுகிருர்.

சதாசிவம் என்னை பீச்சில் கண்டவுடன் என்னுடன் ஏதாவது பேசியாக வேண்டுமே என்று இவ்வாறு எனக்கொரு வேலை கொடுக்கிறது போலப் பேசுகிருர். நான் ஆகட்டும் என்று ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனல் நடேசனைக் காணும்பொழுது கேட்பதில்லை, மறந்து விடுகிறேன். சதாசிவமே நடேசனைக் காண்கிருர். அவர்கள் ஏதாவது பேச வேண்டுமே!

"நேற்று கோபாலனைக் கண்டேன். உங்களிடம் ஒரு புகாரைச் சொல்லச் சொன்னேனே, சொன்னரா?" என்கிருர்.

"இல்லையே, என்ன அது?" என்று நடேசன் தூக்கி வாரிப் போட்டது போலக் கேட்கிருன்.

"ஒன்றுமில்லை. நீங்கள் ஏன்..." என்று கலியாணத் தாம்பூலத்தைப்பற்றிக் கேட்கிருர்.

அதற்குப் பதில், நடேசன் ஏதாவதொரு நிஜத்தையோ பொய்யையோ சாக்காகச் சொல்லுகிருன்.

சதாசிவன் என்னை மறுநாள் பீச்சில் காணுகிருர்.

"நீங்கள் நடேசனிடம் சொல்லவில்லையோ? நான் கண்டேன்—"

"ஓ, மறந்துவிட்டேன். அவனைக்கூடக் கண்டேன். ஞாபகமில்லை. உங்களைப் பார்த்த பிறகுகூட எனக்கு ஞாபகம் வரவில்லை. நீங்கள் கேட்ட பிறகுதான் நினைவு வருகிறது. மன்னிக்க வேண்டும். ஞாபகம் மறதி எனக்கு ஜாஸ்திதான்" என்று அவரிடம் சொல்லிவிடுகிறேன்.

என் மனைவி "சாயந்திரம் வருகிறபொழுது நிட்டிங் ஊசியும் நூலும் வாங்கிகொண்டு வாங்கோ மறக்காமெ" என்ருள், நான் அவசர அவசரமாக ஆபீஸிற்குக் கிளம்பும்பொழுது.

“ஆகட்டும்!” என்று சொல்லுகிறேன்.

சாயந்திரம் திரும்பும் பொழுது பேப்பரும் எழுதும் காகிதமும் வாங்கிக்கொண்டு வீட்டிற்குப் போகிறேன். மை போட ஒரு இங்க் பில்லருங்கூட.

“ஊசி?” என்று கேட்கிறாள் மனைவி.

“அடாடா! ஞாபகமே இல்லை!” என்கிறேன்.

“இதெல்லாம் வாங்கிக்கொண்டுவர நினைவிலிருக்கிறது. பர்ஸில் காசு குறைந்தால் எங்கே என்று கேட்கத் தெரிகிறது. அதற்கெல்லாம் ஞாபக மறதியே கிடையாது—” என்று அவள் அடுக்க ஆரம்பிக்கும்போது எனக்குக் கோபம் வருகிறது.

“நான் உன்னிடம் பொய்யா சொல்லுகிறேன்?” என்று சீறுகிறேன்.

“நான் சொல்லுகிறதை காது கொடுத்துக் கேட்டா என் ஞாபகம் இருக்காது? நான் சொல்லுவது ஒன்றுமே லட்சியம் இல்லை. நானும் இப்படி—” என்று என் மனைவி தன் பல்லவியை ஆரம்பிக்கிறாள்.

ஆனால் என் வாய் அடைபட்டுப் போகிறது. அவள் சொன்னதில் உண்மை இருக்கிறது. என் ஞாபக மறதியின் காரணத்தை அவள் சொல்லிவிட்டாள்.

ஞாபகத்தில் இருக்க வேண்டுவென்றால் ஒன்றைச் சரியாக மனதில் பதித்துக்கொண்டால் தானே இருக்கும்? இயற்கையாகவே, (பழக்கத்தால் என்று சிலர் சொல்லக்கூடும்) எனக்குச் சிலவற்றில் சிரத்தை கிடையாது. அவற்றை நான் மனதில் வாங்கிக்கொள்வதில்லை—வேண்டுமென்று அல்ல. அவை மனதில் பதிவதில்லை. என் மனதிற்கு ‘அவை தேவையில்லை’ என்று அந்தந்த நிமிஷம் தோன்றுகிறது போலிருக்கிறது.

நண்பர் சதாசிவம் என்னைக் கண்டதற்காக ஏதாவது பேசவேண்டுமே என்பதற்கு நடேசனை ஏதோ கேட்கும்படி சொன்னார். ‘நடேசனைக் கண்டால்’ என்று சொல்லியதாலேயே அவர் அதை வெறும் பேச்சாகத்தான் பேசினார் என்று எனக்குத் தோன்றியிருக்க வேண்டும். ஆகையால்தான் அது என் மனதில் தங்கவில்லை.

ஆனால் மனைவி சொன்னது வெறும் பேச்சல்ல. கட்டளை. அதை நிறைவேற்றுவதைப்பொறுத்திருந்தது எங்கள் இருவரிடையே இருக்கும் நல்லெண்ணம். அப்படியிருந்தும் அதை ஏன் நான் மறந்தேன்? அதில் ஏன் எனக்கு ஞாபக மறதி?

அது அவ்வளவு பெரிய விஷயம் என்று நான் அந்த நிமிஷம் எண்ணவில்லை. அதுதான் காரணமாயிருக்க வேண்டும் எனவே அதை என் மனது வாங்கிக் கொள்ளவில்லை. என் மனைவிக்கு அது பெரிய விஷயமாக இருக்கலாம். ஆனால் என்ன செய்வது?

எதை நான் சின்ன விஷயம் என்று கருதினேனோ அதை வைத்துக்கொண்டுதான் என் மனைவி என் அன்பைப் பரிட்சை செய்கிறாள்.

"இதிலேயே இவ்வளவு கவனம்?—" என்று ஆரம்பிக்கிறாள்.

"இதில்தான் கவனம் இல்லை, உன் சம்பந்தமான முக்கிய விஷயங்களில் நான் என்றாவது கவனமில்லாமல் இருந்திருக்கிறேனா?" என்று நான் பழைய சம்பவங்களிலிருந்து ஆதாரங்கள் எடுத்துக் காட்டினால்கூட அவள் கேட்பதில்லை.

"அதெல்லாம் என்ன பிரயோஜனம்? அதெல்லாம் பிரமாதம் இல்லை. அதையெல்லாம் எல்லோரும்தான் செய்வார்கள். நீங்கள் என்ன விபரீதமாகச் செய்து விட்டீர்கள். இந்தச் சின்ன விஷயம் தான் எனக்குப் பரிட்சை. இதில்—"

"ஒரு தடவை பிசகு செய்தால் —"

"ஒரு தடவையா, நேற்று பூ வாங்கிக்கொண்டு வரச் சொன்னேனே கடைத்தெருவிற்குப் போகும்போது? வாங்கிக்கொண்டு வந்தீர்களோ? முந்தா நாள்—"

"இதெல்லாம் என்ன பெரிய விஷயங்களா?"

"எதுதான் பெரிய விஷயம்? ஒன்றுமே இல்லை. சாப்பிடுவதும் தூங்குவதும்தானா பெரிய விஷயங்கள்?" என்று என் மனைவி தாக்க ஆரம்பித்தாள்.

"இல்லையே, அவை பெரியவை என்று நான் எப்பொழுது சொன்னேன்?"

"உங்கள் யோசனைகளும் எழுத்துக்களும்தான் பெரியவையோ — பின்?"

"எனக்குப் பெரியவையாக இருப்பவை எனக்குப் பெரியவை தான்!"

"பாக்கி யெல்லாம்?"

"அதைக் கேட்பானேன்?"

"அதிர்ஷ்டம்"

ரொம்ப பிரமாதமான
படமாக வரப்போகிறதென்று
பொது ஜனங்கள் பேசினார்கள்.
அவர்கள் பேசினதைக் காட்டிலும்
ரொம்ப ரொம்ப பிரமாதமாக இருக்கிறது.

●

அதிர்ஷ்டம்

(தமிழ்)

கெயிட்டி தியேட்டரில்

3-வது வாரம் 12-8-39 முதல்

●

★

நமது வாழ்க்கையில் நடக்கும்
சம்பவங்களை அப்படியே சித்த
- ரிக்கும் சமூக சித்திரம் -

மயூரா பிலிம்ஸ் வெளியீடு

இரு பிரமுகர்கள்

பன்னிரண்டு வருஷங்களுக்கு முன்னால் ரஷ்யாவோடு தனக்

குள்ள ராஜீய சம்பந்தத்தை அறுத்துக் கொண்டது பிரிட்டன். ஆனால் இன்றோ ஹிட்லருடைய பயமுறுத்தல்களுக்கு எதிராக ஸ்டாலினுடைய உதவி அவசியமென்பதை சேம்பர்லேன் உணர்ந்து இருக்கிறார்.

ஹிட்லர் மேலும் மேலும் ஐரோப்பாவில் கை வைக்காமல் செய்ய வேண்டுமானால், அதற்கு ஒரேவழி என்ன? பிரிட்டிஷ் ஏகாதிபத்தியமும், ரஷ்யாவும் இணைந்து கொள்வதுதான்.

ஸ்டாலின், சேம்பர்லேன் இந்த இருவர்களுக்கும், அவர்கள் பிரதிநிதிகளாக இருக்கும் ஜனங்களுக்கும் இடையே உள்ள கருத்து வித்தியாசம் ரொம்ப அதிகம்.

ஆனால் அந்த இரண்டு மனிதர்களுக்கும், இரண்டு தேசங்களுக்கும் ஒரு விஷயத்தில் மட்டும் பொதுவான ஆசை உண்டு. அது தான் சமாதானம்!

இந்த இரண்டு தனிமனிதர்களுக்குள் உள்ள வித்தியாசத்தை ஆராய்வோம். ஒருவர், பழக்கத்திலேயே ஊறிப்போய் இருக்கும் இங்கிலாந்தில் கன்சர்வேடிவ் வகுப்பைச்சேர்ந்தவர். இன்னொருவரோ வழக்கத்தை வெறுக்கும் புரட்சி மனப்பான்மை கொண்டவர்.

இந்த இரண்டு மனிதர்களும் ஒரு போதும் சந்திக்கவே போவ

தில்லே. வேலையையே விட்டோ, அல்லது சாகவோ தயாராக இருப்பாரே ஒழிய, சேம்பர்லேன் மாஸ்கோவுக்குப் போகவே மாட்டார் நிச்சயம்!

ஸ்டாலின் பிரதிநிதியாக விளங்கும் அதிகார வர்க்கம் தொழிற்சாலைகளில் வேலைசெய்யும் தொழிலாளிகளால் ஆகியது. அவர்கள் பிரிட்டனில் உள்ள முதலாளி வர்க்கத்துடன் சேருவது என்பது ஒரு புதிராக இருக்கும். அவர்கள் இயற்கை, அந்த விதமான சம்பந்தத்தை விரும்பாது தான்.

ஆனால் சேம்பர்லேன் பிரதிநிதியாக விளங்கும் அதிகார வர்க்கமோ பெருத்த பணக்காரர்களால் ஆகியது. பிரதம மந்திரி சேம்பர்லேனுடைய தந்தையும் அப்படித்தான். அவருடைய வகுப்பு ஆட்கள் யாவரும், தங்கள் தங்கள் சொந்த தன்மைகளில் மட்டும் கவனம் செலுத்துபவர்கள்.

அதே மாதிரி இருவருடைய வாழ்க்கை வளர்ச்சியும் ரொம்ப வித்தியாசம்.

பதினன்காவது வயதில் புரட்சிக்காரன் ஆனவர் ஸ்டாலின். அவர் தந்தை செருப்புத் தைப்பவர். அவர் ஸ்டாலினை பாதிரியாக்க விரும்பினர். ஆனல் ஸ்டாலினுக்கு அது பிடிக்காமல், அதை விட்டு வெளியேறி, இருபது வருஷகாலம் புரட்சி சம்பந்தமாக பிரசுரங்கள் தயாரிப்பதிலும், பேசுவதிலும், கைதியாகித் தப்புவதிலுமே கழித்து வந்தார்.

1905ல் ஸ்டாலின் லெனினேடு சதுரங்கம் விளையாடினராம்.

முப்பத்தினன்கு வயதாகும் போது சைபீரியாவிலிருந்து பதினறும் தடவையாக தப்பியோடி பிடிபட்டு ஆர்க்டிக்குக்கு அனுப்பப்பட்டார். அங்கே வாழ்க்கை, சுற்றுவதும், உணவுக்கு வேட்டையாடுவதும், தன் உடையை தானே தயாரிப்பதும், போதிய விறகு வெட்டுவதும் தான். அடுப்படியில் உட்கார்ந்து கொண்டு கார்ல் மார்க்ஸ், டார்வின் இவர்களுடைய தத்துவங்களை அவர் படிப்பதுண்டு. 1917ல் விடுதலையாகும்போது அவருக்கு வயது 38.

அவர் மனைவியிடமிருந்து பிரிந்திருந்த காலம் அதிகம். பணமோ, சுகமோ அவருக்குத் தெரியாது. நம்பிக்கையே இல்லாத நிலைமையில் இருந்தார். ஜாரின் ஆட்சியை தொலைக்க வேண்டும் என்ற ஒரு எண்ணம்தான் அவருக்கு.

இவ்வளவு தூரம் ஸ்டாலின் கஷ்டப்பட்டதற்கு நேர் எதிரிடையான வாழ்க்கை சேம்பர்லினி னுடையது. குஷாலான வாலிப வாழ்க்கை. பொழுதுபோக்குக்காக நரிவேட்டையாடும் வகுப்பைச் சேர்ந்தவர். கலாசாலைப் படிப்பு, ஒரு எஸ்டேட்டில் பிறகு சுகவாசம், வெற்றி பெற்ற முதலாளித் தொழில், திருப்தியான மணவாழ்க்கை எல்லாம் தொடர்ந்தது. தந்தையும், தமயனும் தன்னை அவ்வளவாக லக்ஷியம் செய்யவில்லை என்ற ஒரே குறை தான் அவருக்கு.

நாற்பத்திரண்டாவது வயதில் பெர்மிங்ஹாம் கவுன்சிலராக அவர் ஆனவரையில் பணம் சம்பாதிப்பதில் தான் கவனம் செலுத்தி

ஞரேதவிர வேறு ஒருவகையி லும் பிரக்யாதி பெறவில்லை.

அவருக்கு ஐம்பதாவது வயது ஆகும் வரையில் பார்லிமெண்ட் மெம்பராக இருக்கவும் இல்லை. ஐந்து வருஷம் கழித்து, 1924-ல் சுகாதார மந்திரியாக மந்திரி சபையில் ஸ்தானம் கிடைத்தது.

ஐரோப்பாவில் பெரும் பாகத்தை அவர் சுற்றிப் பார்த்திருக்கிறார். ஆனால் ஸ்டாலினோ ரஷ்யாவைவிட்டே ஒரே ஒருதரம் தான் வெளியேறி இருக்கிறார். முப்பத்தி நான்கு வருஷங்களுக்கு முன் ஜெர்மனியிலும், ஆஸ்டிரியா, ஹங்கேரியிலும் சில வாரங்கள் கழித்திருக்கிறார்.

புரட்சிக்காரர்கள் அடையும் சகல கஷ்டங்களில் ஒன்று, ஸ்டாலினுக்குக் குறைவில்லை. இருபது வருஷ காலம் தன் வாழ்க்கையை அவரால் பண்படுத்திக்கொள்ள முடியவில்லை. பிறகு ஒரு சர்க்கார் மந்திரியாகி, ஜெனரலாகி, பொதுவுடமைக் கட்சித் தலைவராகி, இறுதியாக ரஷ்யாவின் பலத்த சக்தியாகிவிட்டார்.

அவருக்குப் படிப்பு அதிகம் கிடையாது. அன்னிய பாஷைகள் தெரியாது. ரஷ்ய பாஷையைக் கூட தன் சொந்த மாகாண உச்சரிப்புடன் தான் பேசுகிறார்.

அன்னிய பாஷைகள் தெரியாததால் இங்கிலீஷ்காரருக்கு ஒன்றும் குடிமுழுகிப் போய்விடவில்லை. ஆனால் ரஷ்யர்கள் அதை முக்யமாகக் கருதுகிறார்கள். பல பாஷைகளிலும் அவர்கள் நல்ல பயிற்சி பெற்று இருக்கிறார்கள்.

ஸ்டாலின் கோர்வையாகப் பேசுவதில் சமர்த்தர். இங்கிலாந்தின் பெரிய ராஜதந்திரிகளிடம் காணும் விரிந்த ஞானம் சேம்பர்லேனிடம் கொஞ்சமும் கிடையாது.

புகை பிடிப்பது, சங்கீதம் கேட்பது இவை இரண்டும்தான் ஸ்டாலினுக்கு பொழுதுபோக்கு. அவர் லீவு எடுத்துக் கொள்கிறதே இல்லை. அன்னியர்களை பார்ப்பதும் கிடையாது. பார்க்க வருபவர்களை நேருக்கு நேர் பார்ப்பதும் கிடையாது. ஒரு சிகப்புப் பென்சிலால் கிறுக்கிக்கொண்டே பேசுவார்.

சேம்பர்லேனோ ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் தூண்டில் போடப் போகத் தவறுவதில்லை. வேலைநாள் காலை நேரங்களில் எல்லாம் அவர் ஹைட்பார்க்கில் உலாவப் போவதுண்டு. வாரக் கடைசியைதன் பிதுரார்ஜித அரண்மனை வாசமாக செக்கர்ஸில் கழிப்பார்.

அவர் ஆபீஸ் அறை அலங்காரமாக இருக்கும். ஆனால் ஸ்டாலின் அறை சாதாரணமாக இருக்கும். சுத்தமாக ஒரு டாக்டரின் ஆபீஸ் அறையைப்போல் இருக்கும். அவசரத்துக்குத் தயாராக இருக்க வேண்டும் என்பதற்கு அடையாளமாக மேஜைமீது டெலிபோன் இருக்கும்.

ஒல்லியான, உயர்ந்த, எழுபது வயதான சேம்பர்லேன் பணக்காரர். கையில் நிரந்தரமாக ஒரு குடை. அவர் போட்டிருக்கும் ஹாட்டோடேயே இந்த உலகத்தில் அவர் அவதரித்ததுபோலத் தோன்றும்.

சேம்பர்லேனுக்கும், ஸ்டாலினுக்கும் பிறரிடமிருந்து தெரிந்து கொள்வதில் விருப்பக்கிடையாது. தங்களுக்கு அதைவிட நன்றாகத் தெரியும் என்ற எண்ணம்.

அகத்தியன்

நட்சத்திர குணாதிசயங்கள்

(16) விசாகம்

ஜென்ம நட்சத்திரம் :	விசாகம்.
இதற்கதிபதி :	சனி.
இஷ்ட தேவதை :	சுப்ரமணியர்.
பகை :	ரோகணியில் பிறந்தவர்கள்.
உருவம் :	பெண்.
குணம் :	ராசதம்.
சுபப்பலன் தரும் வாரம் :	புதன்.
திசாதிபன் :	குரு.

குணாதிசயங்கள் :—முகத்தில் அழகிய மச்சமுள்ளவன், விசால மான நேத்திரமுள்ளவன், நெடியவன், நீதிமான், சுற்றத்தாருக்கும், அரசர்களுக்கும் இனியன். எதிலும் பெருமையுள்ளவன், அழகிய வசனன், தலை, மார்பு, இடுப்பு இவைகளில் வடுவுள்ளவன், தனவான், வேத சாஸ்திர அனுபவமுள்ளவன், தெய்வ, தரும சேவை செய்ப வன், இடர் வந்தாலும் அஞ்சாத தீரன், உத்தமமான களத்திர புத்தி ரரை பெறும் சிறப்புள்ளவன். குதிரை, யானை முதலிய மிருகங் களின்மீது சவாரி செய்யப் பிரியமுள்ளவனுமாவான்.

இத்துடன் முதற் பாகத்தில் பிறக்கின் வஞ்சகருக்கு வஞ்சகன். சோதிட முதலிய சாஸ்திரங்களறிய ஆசைப்படுபவன். சுகவான், வியாபாரப் பிரியன், அந்நிய தேசங்களுக்குச் சென்று நல்ல கீர்த்திகளை யடைபவன், தாய்தந்தையர்களுக்குப் பணி செய்ய விரும்புபவன், ஏதோ ஒன்றால் எப்பொழுதும் கிலேசப்படுபவனுமாவான்.

இரண்டாம் பாகத்தில் பிறக்கின், தன்னைத்தானே புகழ்ந்து கொள்ளுபவன், மந்திர தந்திர வகைகளில் ஆராய்ச்சி செய்யக் கருத் துள்ளவன், உண்மை பேசவும், நீதியோடு நடக்கவும் பிரியப்படுவன், மரக்கலப் பிரயாணம் செய்பவன், சகோதரத் துவேஷமுள்ளவன், நானாவித தொழில் செய்பவனுமாவான்.

மூன்றும் பாகத்தில் பிறக்கின் பலம் பொருந்திய தேகமுடைய வன், சத்துருக்களை ஜெயிக்கும் சாமர்த்தியவான், நல்ல காரியங்களைச் செய்ய எப்பொழுதும் பிரியப்படுபவன், பகைவரையும் வசியஞ்செய்து தன் காரியம் முடித்துக் கொள்ளுபவன், வாய்ச்சாலனுமாவான்.

நான்காம் பாகத்தில் பிறக்கின் எத்தொழிலையும் ஆராய்ந்து செய் பவன், யோக சாஸ்திர ஆராய்ச்சியுள்ளவன், ஞானிகளை அடுத்து உப தேசம் பெறப் பிரியப்படுபவன், இடை வயதில் அதிகமான தனத்தை அடைபவன், ஆதிமத்ய அந்தங்களில் அனுபவித்து லாபம் அடைபவ னும் ஆவான்.

---

(17) அனுஷம்.

ஜென்ம நட்சத்திரம் :	விசாகம்.
இதற்கதிபதி :	இராகு.
இஷ்ட தேவதை :	வாயுதேவன்.
பகை :	கார்த்திகையில் பிறந்தவர்கள்.
உருவம் :	பெண்.
குணம் :	தாமதம்.
சுபப்பலன் தரும் வாரம் :	புதன்.
திசாதிபன் :	குரு.

குணாதிசயங்கள் :—உத்தமமான குணமுள்ளவன், யாவராலும் புகழப்படும் கண்ணியவான், தெய்வ பக்தியுள்ளவன், எல்லாரும் துதிக் கத்தக்க நீதிவான், பரிசுத்த மனமுள்ளவன், சிவந்த நேத்திரமுள் ளவன், நராதிபன், அகன்ற மார்பினையுள்ளவன், மாதா பிதாக்களை ரக்ஷிப்பவன், ஆலோசனையில் வேகமுள்ளவன், ஒன்றை வர்ணிப் பதில் சாமர்த்தியமுள்ளவன், ஐசுவரியமுள்ளவன், தருமம் செய்பக் கருத்தற்றவன், அதிகாரத்துவமுள்ளவன், ஆண் சிங்கம் போன்ற புத்திரனைப் பெறுபவன், பெரிய சாலைகளை அமைத்து நடத்துபவன். ஏதேனும் நூதனமான காரியங்களைக் கண்டு பிடித்து பேர் எடுக்க வேண்டுமென்ற சிந்தனையுள்ளவன்.

இத்துடன் முதற் பாகத்தில் பிறக்கின் வனப்பு மிகுந்த கிரகங் களில் வாசம் செய்பவன், நீதிசபைத் தலைவன், சத்தியவான், தந்திர மாய்த் தன் காரியங்களை முடித்துக்கொள்ளுபவன், சுதந்திரப்பிரியன், பிறர்மேல் கோள் சொல்லும் குணமுடையவன்.

இரண்டாம் பாகத்தில் பிறக்கின் சங்கீத ஞானமுள்ளவன், வாய்ச் சாதுர்யவான், மேன்மையுற்ற புத்தியுள்ளவன், மானி, பிறர் சொற் கேளாதவன், சிலநாள் பரதேச சஞ்சாரம் செய்பவன், நீசர், மிலேச் சர்களால் பெரும் பாக்கியத்தை அடைபவனும் ஆவான்.

மூன்றும்பாகத்தில் பிறக்கின், பகுத்தறிவு உள்ளவன், அழகுடை யவன், மெல்லிய குரலுடையவன், வித்யா சாதுரியன், ராஜப் பிரபு

களின் நேசமுள்ளவன், தியாகம் செய்யப் பிரியப்படுபவன், எல்லோ ரின் நலத்தையும் விரும்புபவன், அரசர் காரியங்களில் தலையிட்டு ஆராய்ச்சி செய்பவன், மந்திரியுமாவான்.

நான்காம் பாகத்தில் பிறக்கின் சொற்சோர்வுடையவன், பிறரை வஞ்சிக்கும் சகோதரரையுடையவன், அல்லது சகோதரப் பகையுடை யவன், பழமையான பாக்கியத்தைக் கொண்டு வழக்குத் தொடர்ப வன், வடமேற் திசையில் தக்க கீர்த்தியும், தொழிலும், பாக்கியமும் பெறுபவன், களத்திர புத்திர சுக சௌக்கியமுடையவனுமாவான்.

---

(18) கேட்டை.

ஜென்ம நட்சத்திரம்:	கேட்டை.
இதற்கதிபதி:	கேது.
இஷ்ட தேவதை:	தேவேந்திரன்.
பகை:	பரணியில் பிறந்தவர்கள்.
உருவம்:	ஆண்.
குணம்:	சாத்மீகம்.
சுபப்பலன் தரும் வாரம்:	வியாழன்.
திசாதிபன்:	புதன்.

குணாதிசயங்கள் :—தாஷ்டீகன், துஷ்டரின் நேசமுள்ளவன், உபாய புத்தியுள்ளவன், இரக்கமுள்ளவன், மிகுந்த கோபி, கெர்ப்ப பிணியும், தந்த பிணியுமுள்ளவன், சோதரரை இரக்ஷிப்பவன், சிற் றுண்டிப் பிரியன், கேட்ட சொற்களைத் திறமாகக் கொள்ளமாட்டத வன், பொய்யை மெய்யாக மாற்றும் சக்தியுள்ளவன், பலருக்கு உப காரியாயு மிருப்பான்.

இத்துடன் முதற் பாகத்தில் பிறக்கின் 'எழுத்தறிவாளனும், தான் என்னும் அகம்பாவம் உள்ளவனும் பரிகாசம் செய்பவனும், விளையாட்டுச் செய்கையை உடையவனும், சந்தோஷமுள்ளவனும், கெர்ப்ப ரோகமுள்ளவனும், பிரபுக்கள் நேசமுள்ளவனும் முன்னோர் பாக்கிய பல முள்ளவனும் ஆவான்.

இரண்டாம் பாகத்தில் பிறக்கின் சங்கீதப் பிரியன், வாய்ச் சால கன், ஈகை யுள்ளவன், யோகி, திடமான மனத்தை யுடையவன், தந்த ரோகமுள்ளவன், இடை வயதில் அந்நியர் வகையால் பெரும் பாக்கி யத்தை யடைபவனும், அந்திய காலத்தில் சுய பூமி கட்டடாதிகளைப் பெறுபவனுமாவான்.

மூன்றும் பாகத்தில் பிறக்கின் கண் நோய் உள்ளவன், பால் பசு விருத்தியுள்ளவன், அந்நியர் தொழில்களை தன் தொழில் எனப் பாவித்துச் செய்பவன், சாது, பந்து மித்ர ரக்ஷகனுமாவான்.

நான்காம் பாகத்தில் பிறக்கின் அந்நியர்களுக்கே தன் செல்வங் களை அளிப்பவன், முன் கோபி, முரட்டுத்தனமுள்ளவன், தன் குல

மேன்மையை மெச்சுபவன், தந்தை சுகமற்றவன், தாய்க்கன்பன் புத்திர தோஷமுள்ளவன், யோசிக்காது காரியங்களைச் செய்து அதைச் சிந்தித்து வருத்தப்படுபவன்.

(19) மூலம்.

ஜென்ம நட்சத்திரம்:	மூலம்.
இதற்கதிபதி:	ஞாயிறு.
இஷ்ட தேவதை:	அசுரர்.
பகை:	அசுவனி, சித்திரையில் பிறந்தவர்கள்.
உருவம்:	ஆண்
குணம்:	ராசதம்.
சுபப்பலன் தரும் வாரம்:	செவ்வாய்.
திசாதிபன்:	கேது.

குணாதிசயங்கள்:—சித்திரைப் பிரியன், புறங்கால் அழகுள்ளவன், செய் காரியங்களில் வழுவில்லாமல் செய்பவன், பக்தி விசுவாசமுள்ளவன், கைத்தொழிலால் ஜீவிப்பவன், மேற்படி தொழிலால் கீர்த்தியடைபவன், தந்தை தாய்க்கினியன், இல்லறச் சுகமற்றவன், கண் சிறுத்துச் சிவந்திருப்பவன், இளமையில் கல்வியும் சுகங்களுமடைபவன், யௌவனத்தில் பல துன்பங்களையும் அனுபவிப்பவன், பந்துக்களைச் சேராதவனுமாவான்.

இத்துடன் முதற் பாகத்தில் பிறக்கின், கிழங்கு வகைகளில் பிரியமுள்ளவன். பாவத் தொழில்களைத் தெரியாமல் செய்பவன், பித்ததேகி, வேட்டகத்தில் கவலையுள்ளவன், பந்து மித்ர நிஷ்டூரன், அந்நிய தேச சஞ்சாரி, முன்யோசனை யற்றவனுமாவான்.

இரண்டாம் பாகத்தில் பிறக்கின் வித்வான், வயற்று நோயுள்ளவன், காரணமின்றி பொய் பேசுபவன், நல்லறிவுள்ளவன், யாரிடத்தும் இன்பமுள்ளவன், பலருக்கும் உபகாரி, இல்லற சுகம் குறைந்தவன், அபிமானியும் ஆவான்.

மூன்றும் பாகத்தில் பிறக்கின் மந்தர மாயாதிகளைக் கற்றுக் கொள்ளப் பிரியமுள்ளவன், அல்லது கண்ணுற்று சந்தோஷிப்பவன், அழகுள்ளவன், சோம்பலுள்ளவன், நல்ல பழவர்க்கங்களைப் புசிக்கப் பிரியப்படுபவன், பெற்றோர்களைப் பிரிபவன், சோதரர் பகையுள்ளவனுமாவான்.

நான்காம் பாகத்தில் பிறக்கின் நல்ல பல முள்ளவன், சகல காரியங்களையும் ஜெயம் செய்யத்தக்க வல்லவன், ஜனன காலத்தில் ஜன்ம லக்கினத்துக்கு சஷ்டம அஷ்டமாதிபதிகள் ஒன்று சேர்ந்து வலுக்கின் கண்டமாலை யென்னும் கொடிய பிணியையோ அல்லது பிளவை முதலிய பிணிகளால் இடை வயதில் வருத்தப்படுபவனுமாவான்.

பெண் முகம் கண்டு

(என். சுப்ரமண்யன்)

ஒரு சிறிய ஒட்டுவில்லை வீடு. அதில் ஒரு அறையில், பாண்டு ரோகத்தால் பீடிக்கப்பட்டு இளைத்த சரீரத்துடன் படுக்கையில் படுத்திருந்தான் ஓர் யுவன். அவன் அருகில் பதினெட்டு அல்லது பத்தொன்பது வயது மதிக்கக்கூடிய ஓர் யுவதி மிகுந்த கவலையுடன் உட்கார்ந்திருந்தாள். அவளுடைய அழகு எல்லையற்று சோபித்தது.

ரோகத்தாலும், மன வியாகூலத்தாலும் பீடிக்கப்பட்டு உலர்ந்த வாலிபன் ஈனஸ்வரத்தில், "போ! பூல் அதைத் தவிர வேறு வழியே எனக்குத் தோன்றவில்லை" என்றான்.

"வேறு வழி இல்லையென்பது எனக்குத் தெரியும். ஆனால் உங்களை இந்த நிராதரவான நிலையில் விட்டு"

"இந்த உதவியற்ற ஐசுவரியமற்ற நிலைமையில் இனி நீ என்ன செய்ய முடியும்? நீ திரும்பி வரும்வரையில் இப்படியே படுத்திருப்பேன். ஏதாவது தேவையிருந்தால் அடுத்த வீட்டு சக்குவின் தாயை அழைத்துக் கொள்ளுகிறேன். இப்பொழுது நீ சென்று வா......"

"நீங்கள் என்னை இவ்வாறு அடிக்கடி போகச் சொல்வதால் செல்லுகிறேன். உங்களுடைய தாழ்மையான வேண்டுகோளை யெல்லாம், அவர் உதறித் தள்ளியிருக்கிறார். அவ்வாறிருக்க அங்கு நமக்கு வெற்றி கிடைக்குமென்று என்ன உறுதி?

தன்னுடைய துக்கங்களை யெல்லாம் ஒரேயடியாக ஒழித்துவிட முயற்சிப்பது போல ஒரு பெருமூச்சுடன் அவன், "அதை நானும் அறிவேன். பூல், உங்களை யெல்லாம், அனாதைகளாக ஒரு பிடி அன்னத்திற்கு உன்னைப் பிச்சைக்காரியாக அலையவிட்டேனே என்ன துக்கம்! இந்த வருத்தம் என்னை மரணத்தருகில் இழுத்துச் சென்றும்கூட, உன் நிலைமை தான் என்னை மிகமிக வேதனைக்குள்ளாக்குகிறது" என்றான்.

இவ்வார்த்தைகளைக் கேட்டதும் அவள் மனதிளகி, கண்ணீர் மளமளவென்று வெளிப்பட்டது. ஆயினும் அதை யடக்கிக் கொண்டு, அவள், "நீங்கள் இவ்வளவு கவலையையும், அதைரியத்தையும் அடைந்தால். நிலைமை கவலைக்கிடமாய் விடும்... நான் போகிறேன். லல்லாவை உங்களிடமே விட்டுச் செல்லட்டுமா?"

"வேண்டாம், வேண்டாம், அவனையும் கூட எடுத்துச் செல். அவனுடைய முகத்தைப் பார்த்தாவது அவர் மனம் இளகாதா? அவருக்கு நம்மீது தயை பிறந்துவிட்டால் பிறகு...பிறகு." யுவனால் அதற்குமேல் பேசமுடியவில்லை. தொண்டை கம்மிற்று.

2

மூன்று வயதுக் குழந்தையை எடுத்துக்கொண்டு பூல்மதி, வீட்டை விட்டுப் போய்க்கொண்டிருந்தாள்,

அவள் மனம் துக்கத்தில் மூழ்கியிருந்தது. யுவனே அந்த நடு மத்தியான சமயத்தில், படுக்கையில் படுத்தவாறே தன் பழைய விஷயங்களை எண்ணினன். தாய் தன்னை எவ்வளவு தயவுடன் நடத்தி வந்தாள். பிதா தன்மேல் எவ்வளவு அன்பு வைத்திருந்தார். தங்கையின் பணிவையும் சிநேகத்தையும் இந்த ஜென்மத்தில் மறக்க முடியுமா? நண்பர்களின் ஹாஸ்ய ரஸம் பொருந்திய கோலாகலம் எவ்வளவு நாளைத்திருந்தன? ஹா! அந்த ஆனந்தங்கள் எல்லாம் இப்பொழுது எங்கே? ஏன் இப்படியாயிற்று? இப்பொழுது அவனது வாழ்வில் மறக்கமுடியாத ஓர் விஷயம் ஞாபகத்தில் பதிந்து விட்டது.

* * *

காலேஜிலிருந்து வீட்டுக்குத் திரும்பி வந்ததும் தந்தை அவனை அழைத்தார்.

"சுரேசா, வரதக்ஷிணை வாங்கிக்கொண்டு, கலியாணம் செய்துகொள்வதில் உனக்கு ஆக்ஷேபமுண்டா?"

"ஆம்!"

"நல்லது அப்படியானல் வரதக்ஷிணை வாங்காமல், ஓர் ஏழைப்பெண்ணைப் பார்த்துக் கலியாணம் செய்து விடுவதில் உனக்குத் திருப்திதானே?"

சற்றுநேரம் மௌனமாக இருந்தான் அவன். பிறகு ஈனஸ்வரத்தில் "இந்தக் கேள்விக்கு உடனே பதில் சொல்ல முடியவில்லை" என்றான்.

"சரி எப்பொழுது பதில் சொல்ல முடியும்?"

"நன்றாக யோசிக்க ஒரு நாள் சாவகாசம் கொடுக்கும்படி வணக்கத்துடன் கேட்டுக் கொள்கிறேன். நாளை நான் பதில் கொடுக்கமுடியும்."

"சரி போ..."

சுரேசன் திக்பிரமை பிடித்தவனைப்போல ஒன்றும் தோன்றாமல், இரண்டு மூன்று மைல் நடந்து சென்றிருப்பான். அப்பொழுது திடீரென்று ஒரு பூனை அவன் கால்களுக்கு நடுவில் வந்து நின்று கத்தியதும், நிற்க வேண்டியதாயிற்று.

சற்று தூரத்தில் பதினைந்து அல்லது பதினேந்து வயதுள்ள ஓர் அழகிய பெண் வருத்தத்துடன், "அதைப் பிடித்துக் கொள்ளுங்கள்" என்று கூறிக்கொண்டே அதை நோக்கி ஓடி வந்து கொண்டிருந்தாள்.

மந்திரத்தால் கட்டுண்டவன் போல சுரேசன் பூனையைப் பிடித்துக்கொண்டான். அவள் அருகில் வந்ததும் அவள் கையிலும் கொடுத்து விட்டான். பூனையை வாங்கிக் கொண்டு "எங்கே ஓடுகிறாய்?" என்று அதன் கன்னத்தில் அவள் அன்பாகத் தட்ட அது "மியாவ்!" என்று கத்திற்று.

"வெட்கமின்றி லஜ்ஜையின்றி குதித்து விளையாடுகிறாயே! என்று கூறிக்கொண்டே ஒரு கிழவி சுரேசன் நின்ற இடத்திற்கு வந்து கொண்டிருந்தாள். அருகில் வந்ததும், "நீங்கள் ஒன்றும் தவறாக எண்ணிவிடக் கூடாது. அந்தப் பைத்தியம் எப்பொழுதும் இப்படித்தான். போடி உள்ளே! உயிரை வாங்குகிறாயே!" என்றாள்.

லஜ்ஜையுடன் அவள் வீட்டினுள் சென்றுவிட்டாள். சுரேஷ் "இவள் உங்களுடைய பெண்ணா?" என்று கேட்டான். "இல்லையப்பா, மகளும் மருமகனும் எங்கே? உலகம் மாறிக்கொண்டும், இறந்து கொண்டும் போகிறது. நான் ஓர் அபாக்கியவதி என்றுதான் கூறவேண்டும். எனக்குச் சாவும் வருவதில்லை. இவள் பெற்றோர்கள், இவளை இரண்டு வயதில் என்னிடம் ஒப்படைத்துவிட்டு, அவர்கள் தங்கள் ஆயுளின் எல்லையை அடைந்து விட்டார்கள்." என்று

கூறிவிட்டு கிழவி ஒரு பெருமூச்சு விட்டாள்; கண்ணீரையும் உகுத்தாள்.

இருவரும் சிறிது நேரம் பல விஷயங்களைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்த பின், சுரேசன் தன் வீட்டை நோக்கிப் புறப்பட்டான். தன் தந்தையின் கேள்விக்குச் சரியான பதிலைத் தயார் செய்துவிட்டதாக எண்ணி மகிழ்ச்சியடைந்தான். "நான் கலியாணம் செய்துகொள்வதா யிருந்தால் இந்தத் தாய் தந்தையற்ற அனுதையான பெண்ணைத்தான் கலியாணம் செய்துகொள்ளுவேன். இல்லாவிடில் கலியாணமே வேண்டாம்" என்று நிச்சயித்துக்கொண்டான்.

அதற்குமுன் பலதடவைகள் அவ்வழியே சென்றிருக்கிறன். ஆனல் இதுவரை அவளைப் பார்த்ததேயில்லை. அப்பொழுதுதான் முதன் முதலாகச் சந்தித்தான். ஒரே தடவையில் பல விஷயங்கள் நிறைவேறின.

3

அடுத்த நாள் காலையிலேயே அவன் தன் தந்தையின்முன் சென்று நின்றான்.

"சுரேசா நீ என்ன நிச்சயத்திருக்கிருய் சொல்!"

"நீங்கள் நேற்று எப்படி விரும்பினீர்களோ அப்படியே...!"

"எப்படி?"

"முழுவதும் சொல்கிறேன். நேற்று உலாவப் போனேன். அப்பொழுது தாய்தந்தையற்ற ஒரு பெண்ணைப் பார்த்தேன். அவளையே நீங்கள் ஏற்பாடு செய்தால் மிகவும் சந்தோஷம்."

"நான்தான் முன்னமேயே உன்னிடம் சொல்லியிருக்கிறேனே! நீ பெண்ணைத் தேட வேண்டாம். பணம் முதலியவைகளுக்காகப் பெண்ணை வாங்க மாட்டேனென்றும், கலியாண விஷயத்தில் உன் கற்பனைகளையெல்லாம், மூட்டைகட்டி வைத்து விடு என்றும் எவ்வளவு தரம்......"

சுரேசன் உறுதியுடனும், சாந்தமாகவும், வணக்கமாகவும், தெளிவாக "அப்படி என்ருல் முடியாது" என்ருன். அவனுடைய தந்தை ஒரு நிமிஷம் ஸ்தம்பித்து நின்ருர். கம்பீரத்துடன் கூடிய அதட்டும் குரலில், "அப்படியானுல் என்னுடைய வெகு காலத்திய எண்ணங்களெல்லாம் வீண் தானு?" என்ருர்.

"மன்னியுங்கள்......நான்......"

"சரி, இனி என் வீட்டில் உனக்கிடமில்லை. எதேச்சையாகவும், சொன்னபடி கேட்காமலும் நடப்பவனை என் வீட்டில் வைத்துக்கொண்டிருக்க முடியாது. நீ போனுல்தான் இந்த வீட்டில் சந்தோஷம் நிலவும். போய் விடு."

"தங்களுடைய மன்னிப்புக்காகத் தலை வணங்குகிறேன். ஆனல் நீங்கள் மன்னிக்கவில்லை."

சுரேசன் தலை கவிழ்ந்தவண்ணம் நகர்ந்தான். இதற்குப் பிறகுதான், பெற்ருேரின் வீட்டைத் துறந்து ஒரு விதமான எண்ணமின்றி திரிந்தலைந்தது. அநேகவித உபாயங்களால் வாழ்க்கையை நடத்தினது, பூலமதியை விவாகம் செய்துகொண்டது, அவளுடைய கிழப்பாட்டியின் மரணம், குழந்தைப்பேறு, இம்மாதிரி சிறிய சிறிய சுகதுக்கங்களுக்குப் பிறகு, கடைசியாக வியாதியால் அல்லலுற்றது எல்லாம் அவன் மனக்கண்முன் நாடகமாடின.

புதுக்கலியாணத்தின் குதூகலமும், ஸ்வர்ண தேவனுகிய மனமோகன் பூலமதியின் மடியில் தவழ்ந்து விளையாடும் காக்ஷியையும் நினைத்தாலே அவனுடைய மனம் ஆனந்தத்தால் நிறம்பும்.

வர்ணிக்கமுடியாத ஆனந்தத்தையனுபவித்துக் கொண்டிருந்த தம்பதிகளுக்குத் தவிர்க்கமுடியாத தரித்திரமும் கொடிய நோயும், சதா துக்கப்படும்படி செய்துவிட்டது. எழுந்து உட்காரமுடியாத நிலைமைக்கு வந்தபிறகு பணம் சம்பாதிப்பது எங்ஙனம் இயலும்? பந்துக்களை இழந்து, தோழர்களைத் துறந்து, சுகம், சக்தி முதலியவைகளையுமிழந்து பார்ப்போர், கண்ணீர் பெருக்கிப் பெருமூச்செறியும் நிலைமைக்கு வந்து விட்டனர்.

ஆறு மாதங்களாகப் படுத்தபடுக்கையாய் விட்டான். அவன் தேடிச் சம்பாதித்திருந்த உத்தியோகமும் அதிக நாள் வியாதியுற்றிருந்த காரணமாகப்போய்விட்டது. பூலமதியின் கழுத்தில் சாஸ்திரோக்தமான தாலிதான் மிஞ்சியிருந்த நகை. அதையும் கூட அவர்களுடைய கொடும் தரித்திரத்திற்குப் பலியிட்டு விட்டார்கள். இவன் தானகவே தன் உயர்ந்த வாழ்வைக் கெடுத்துக் கொண்டான்.

யாதொருவழியும் தோன்றமல், பூரணமாக ஆறு வருஷங்கள் கழிந்தபின் இப்பொழுது ஒரு மன்னிப்புக் கடிதம் எழுதித் தன் தந்தைக்கு அனுப்பினன்.

நிராசை என்னும் பயங்கர அலைகளால் மோதுண்டு தவிக்கும் அதிர்ஷ்ட ஹீனனை சுரேசன் அபாக்கியவதியான பூலமதியையே தங்கள் வாழ்க்கை மேம்பட தந்தையிடம், தன் சார்பாக மனிப்புக் கேட்க அனுப்பிவிட்டான்.

அப்பொழுது அவன் வீட்டிற்கு வெளியே, யாரோ, "சுரேச பாபு இருக்கிறாரா?" என்று கேட்டார். சுரேசன் ஈனஸ்வனத்தில் "யாரது?" என்று கேட்டான்.

அவர் உள்ளே வந்து நமஸ்கரித்தார். அவர்தான் தன் சகோதரி சகுந்தலாவின் கணவர் என்று உடனே அறிந்துகொண்டான் சுரேசன்.

4

சகுந்தலா திண்ணையில் நின்றுகொண்டு, முன்பக்கமுள்ள புஷ்பச் செடிகளின் அழகைக் கண்டு களித்திருக்கும்பொழுது, ஒரு மெலிந்த இளமங்கை கந்தைத்துணியைக் கட்டிக்கொண்டு, கையில் குழந்தையை ஏந்தி வாசலில் வந்து நின்றாள்.

சகுந்தலா, கீழேயிறங்கி, லச்சையுடனும், சங்கோஜத்துடனும், சந்தோஷமற்று நிற்கும் உருவத்தினிடம் வந்து, "நீ யார்?" என்று கேட்டாள்.

தன்னுடைய முக்காட்டைச் சிறிது விலக்கிக்கொண்டு, "துக்கத்தால் பீடிக்கப்பட்ட ஒருவள்" என்றாள்.

இளம் புன்முறுவலுடன் சகுந்தலா, "உன்னைப்பார்த்ததும் அது தெரிகிறது. உன் இருப்பிடம் எது?" என்று கேட்டாள்.

"ஏழைகளுக்குப் பெயரும் இருப்பிடமும் ஏது?"

"என்ன? ஏழைகளுக்குப் பெயரும் இருப்பிடமும் இருக்கக் கூடாதா? சரி இங்கே எதற்காக இங்கே வந்தாய்? சாக்குப் போக்குச் சொல்லாமல் உண்மையைச் சொல்."

இப்படி அற்புதமாகப்பேசும், யுவதியின், கேள்விகளால் மயங்கி விடாமல், "இந்த வீடு பலபிரத பிரஸாத்ஜீ யுடையதுதானு என்பதை மட்டும், தெரிவியுங்கள்" என்றாள் பூலமதி.

"ஆம் அவருடையதுதான்" என்றாள் அவள்.

"அவர் வீட்டிலிருக்கிறாரா?"

சகுந்தலா கம்பீரமாக "அதைச் சுலபமாகச் சொல்லமுடியாது நிலைமை எப்படி யிருக்கிறதோ அப்

படியே அவர் நடந்து கொள்கிறார். யாராவது சொந்தக் காரியமாக வந்தால், அவர் வீட்டில் இருந்தாலும் இல்லாதது போல்தான். அவசியம் ஏற்படும்பொழுது அவரில்லாவிட்டாலும் வந்துவிடுவார். உன்னுடைய பெயர், இருக்குமிடம், வந்த காரியம் முதலியவற்றைக் கூறினுல் சரியான பதில் சொல்லுகிறேன்" என்றாள்.

அவள் பெரும் சங்கடத்தில் சிக்கிக் கொண்டாள். அவளுக்கு ஒரு யோஜனையும் தோன்றவில்லை. கடைசியாக ஒரு நெடு மூச்செறிந்து, "அவரைச்சந்திக்க விரும்புகிறேன்" என்றாள்.

"யார் வந்திருக்கிறதாக அவரிடம் கூறட்டும்?"

யுவதி திடமனதுடன், "சரி நானே போகிறேன். உங்களுடைய கிருபைக்கு நமஸ்காரம்" என்று கூறிக்கொண்டே வீட்டினுள் போக வாரம்பித்தாள்.

சகுந்தலா, ஓடிச்சென்று இடைமறித்து, "சகோதரி, மறுபடியும் ஏன் பெயரைக் கூறுமல் மறைக்கிறாய்?" என்று கேட்டாள். யுவதி சற்று தடுமாறினாள். ஆனுல் சமாளித்துக்கொண்டு, "ஏன் இப்படி ஏழை எளியவர்களிடத்தில் விளையாடுகிறாய்?"

"யார் ஏழை எளியவர். நீங்கள் என்ன அன்னியரா?" என்றாள். அவைகள் எல்லாம் இருக்கட்டும். நீங்கள் தந்தையின் பெயரை அறிந்து வைத்திருக்கிறீர்கள். என் பெயரும் தெரிந்திருக்க வேண்டும். உங்களை எனக்குத் தெரியாது என்றெண்ணுகிறீர்கள். ஒருநாள் அண்ணனுடன், சினிமாவில் பார்த்தேன். அப்பொழுது அறிந்து கொண்டேன்.. துர்ப்பாக்கிய வசத்தால் உங்கள் பெயரை மட்டும் அறியும் பாக்கியம் எனக்குக் கிடைக்கவில்லை. அதை தெரிந்து கொள்ளவும், சற்றுப் பேசவுமே இப்படி மறிக்கிறேன். அண்ணி! வீட்டிற்குள் வாருங்கள். தந்தை வீட்டிலேயே இருக்கிறார். தமையனின், நிலைமை எனக்குத் தெரியும். பிதா அறியாமல் ரூபாய் என் கணவர்வசம் அனுப்பியிருக்கிறேன். தந்தையோ அவர் விஷயத்தில் இன்னும் பிடிவாதமாகவே இருக்கிறார்? கோபமாகவும் இருக்கிறார். அவரிடம் மிக ஜாக்கிரதையாகப் பேசுங்கள். அதிருக்கட்டும். அண்ணனின் உடம்பு எப்படியிருக்கிறது?"

"அவர் உடம்பு சரியில்லை."

"இக்குழந்தை தங்கள் பையனு?"

"ஆம்."

"பெயர் என்ன?"

"மனமோகன்."

"உங்கள் பெயர்?"

"பூலமதி."

5

பாபு பலபிரத பிரஸாத், சாய்மான நாற்காலியில் படுத்துக் கொண்டு, ஒரு புஸ்தகத்தைப் படித்துக் கொண்டிருந்தார். சகுந்தலா சந்தடியின்றி அருகில் வந்து "அப்பா!" என்றாள்.

"ஏன்?" என்று கேட்டுக்கொண்டே அவள் பக்கம் திரும்பினார். சகுந்தலா உட்கார்ந்துகொண்டு அவருடைய கால்களைப் பிடித்துக் கொண்டு, "நான், பிச்சை கேட்கிறேன்" என்றாள்.

ஆச்சரியத்துடன் "பைத்தியமே, என்ன இது? கால்களை விடு, என்ன வேண்டும் கேள்" என்றார் அவர்.

"கேட்டால் அவசியம் கொடுப்பீர்களா?"

"கொடுக்ககூடியதா யிருந்தால் கொடுப்பேன். எந்தவஸ்துதேவை?"

"அப்பா, அண்ணி வந்திருக்கிறாள். அண்ணன் அதிக ஆபத்தான நிலையிலிருக்கிறார். அவர் நம்மை ஒரு முறை பார்க்க விரும்புகிறாராம்.

இதுதான் அவருக்கு வேண்டிய கடைசிப் பிச்சையாம்."

இதைக் கேட்டதும், அவர் கோபத்துடன் எழுந்தார். உரத்த குரலில், இந்த விஷயத்தைப்பற்றி நீ பேசக் கூடாதென்று தடுத்திருக்கிறேனல்லவா? இனி அக்குலத் துரோகியும், பெற்றோர் துரோகியுமான, அவன் பேச்சையே என் முன் எடுக்கக்கூடாது. எவன் தன் தந்தையின் சொல்லை மீறுகிறானே, அந்தப் பையனால், தந்தைக்கு உபத்திரவமும், அவமானமும் ஏற்படுகிறதோ அவன் அதே தந்தையின் கால்களில் விழுந்தாலும்கூட அத்தந்தைக்குப் பாபந்தான் உண்டாகும். நீ அவனைப்பற்றிப் பேசாதே."

" அப்பா ! ...."

"போய்விடு. இங்கிருந்து போய் விடு......"

சகுந்தலா கண் கலங்கிய வண்ணம் " அண்ணன் சாகும் தருவாயிலிருக்கிறார். புத்திரன் என்னும் தோஷத்திற்காக—உத்தம சந்ததி என்னும்தோஷத்திற்காக—அவரை மன்னித்துவிடுங்கள் " என்றாள்.

தந்தை சீற்றத்துடன், " முடியாது. நீ போய்விடு சகுந்தலா " என்றார். சகுந்தலா கொஞ்சமும்பயப் படவுமில்லை. லஜ்ஜைப்படவுமில்லை.

" இன்று உங்கள் பேச்சைக் கேட்கமாட்டேன். இப்பொழுதே அண்ணியைக் கூட்டிக்கொண்டு வரப் போகிறேன். நாங்களிருவரும் உங்கள் பாதங்களில் விழுகிறோம். அப்பொழுதாவது உங்கள் கல் நெஞ்ச

மிளகாதா?" என்று கூறிக்கொண்டே வெளியே சென்றுவிட்டாள்.

அவர் ரௌத்ராகாரமான கோபத்தால் பல்லை நற நற வென்று கடித்தார். மீசை துடித்தது. கண்கள் பார்க்க முடியாத கோரத்தைக் காட்டின. இந்நிலைமையில், பூலமதியையும், குழந்தையையும் எடுத்துக் கொண்டு, சகுந்தலா அவர் முன் வந்து நின்றாள்.

"போய்விடு, போய்விடு!" என்று உரக்கக் கத்தினார் அவர்.

ஒன்றுமறியாத குழந்தையை அவர் பாதங்களில் வைத்து சகுந்தலாவும், பூலமதியும், அவர் பாதங்களில் தங்கள் தலையை வைத்துக்கொண்டு, "அப்பா, அப்பா" என்று கதறினார்கள்.

கோபத்தால் சிவந்த கண்களோடு கூடிய அவர் குழந்தையையும், பூலமதியையும் கண்டதும் திடுக்கிட்டு, இரண்டடி பின்வாங்கினார். பார்க்கச் சகியாமல் இரு கைகளாலும் முகத்தை மூடிக் கொண்டார். அவரை யறியாமலே அவர் வாயிலிருந்து கீழ்க்கண்ட வார்த்தைகள் நழுவின.

"என்ன இது? நான் என்ன காண்கிறேன்! சொப்பனம் காண்கிறேனா? நீ தானா என் மருமகளான ராணி......?"

இந்த எதிர்பாராத சம்பவத்தைக் கண்டு, சகுந்தலா ஆச்சரியத்தால் ஸ்தம்பித்து நின்றாள். அவருடைய மனது—கல்மனது—எப்படி இவ்வளவு விரைவில் இளகியது? உண்மையில் பூலமதியும் தடுமாற்றமடைந்தாள். அவளையும், அவள் கருணை ததும்பிய முகத்தையும் பார்த்த கிழவரின் கர்வம், மமதை முதலியயாவும் பறந்துவிட்டது.

அவருடைய இந்த மாறுதலானது மழை காலத்தில் காட்டாறுகள் பிரவாக வேகத்தில், முன்னிருப்பவைகளை லக்ஷியம் செய்யாமல் அல்லோகல்லோலப் படுத்துவதுபோலிருந்தது.

"ஒரு காலத்தில் என்னுடைய ஆருயிர் குமாரனை வீட்டை விட்டுத் துரத்திவிட்டேன். இன்று உன் முகத்திற்காக அவனை மன்னித்து விடுகிறேன்" என்று கூறிக்கொண்டே, வெறிகொண்டவர் போல, குழந்தையை எடுத்துக் கொண்டு வெளியே சென்றார்.

பதுமைகள் போல இரு பெண்களும் அவரைப் பின்தொடர்ந்து நடந்தனர்.

(மொழிபெயர்ப்பு)

இந்தியன் பாங்க் லிமிடெட்

இந்தியன் பாங்க் பில்டிங்ஸ், நார்த் பீச் ரோட், மதராஸ்

தென்னிந்தியா வெங்கும் கிளை ஆபீசுகள்

அதிகார மூலதனம்	60,00,000—0—0
வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம்	47,92,800—0—0
செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 100 ஷேர்களில் ரூ. 50 வீதம் செலுத்தப்பட்ட 20,000 ஷேர்கள்	10,00,000—0—0
ரூ. 100 ஷேர்களில் 10 வீதம் செலுத்தப்பட்ட 27,928 ஷேர்கள்	2,79,280—0—0
ரிஸர்வ் பண்டும், இன்னும் மற்ற பண்டுகளும்	18,60,147—0—0

செக்ரடரி: N. கோபால அய்யர்

அணையாத தீ

(சி. ரா. சே.)

ஜெக்கோஸ்லேவேகியா சுற்றுப் பிரயாணத்தை முடித்துக் கொண்டு வந்ததும், "நாஸி கஸ்டாபோ" ரகசியப் படைத் தலைவர் ஹெர் ஹிம்லர் கூறினர், "'மேபியா'வை உடனே கலைத்து விட வேண்டும்" என்று. ஹிம்லருடைய கோபத்துக்கு பாத்திரமான 'மேபியா' என்பது என்ன?

அது ஒரு ரகசிய புரட்சி இயக்கம். மகா யுத்தத்தின் போது ஜெர்மனியருடன் சண்டை செய்வதற்காகவே ஸ்தாபிக்கப்பட்டது. இதன் தலைவர்கள் உலகத்தில் பிரசித்தி பெற்ற மஸாரிக் பினேஷ் என்ற செக் அரசியல் வாதிகள் இருவர். 'செக்' சுதந்திரமடைந்த வுடனே, இவ்வியக்கம் கலைக்கப்பட்டு விட்டது.

இன்று மறுபடியும் ஜெக்கோஸ்லேவேகியா ஜர்மனியருடைய அடக்குமுறை ஆட்சிக்கு அடிமையாகி விட்டது. இந்த நெருக்கடியில் அதை புனருத்தாரணம் செய்யவேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டது. ரகசியச் சுரங்கங்களிலும், இருட்டு வீடுகளிலும், ஆள் நடமாட்டமற்ற சந்து பொந்துகளிலும், நடுநிசியிலும், உலகமறியாது ஜெர்மனியருடன் செய்த சண்டை அனுபவங்களோடு ஹென்லியன் நாஸிகள் செக், நாட்டைப் பிடிக்க கையாண்ட முறைகளையும் இன்று மேபியா ரகசியப்படை தன தாக்கிக் கொண்டிருக்கிறது.

மேபியாவில் உள்நாட்டு ரகசியச் சங்கம், வெளிநாட்டு ரகசியச் சங்கம் என இரண்டு பிரிவுகள் இருக்கின்றன. இவை இரண்டிற்கும் தலைவர்கள் பினேஷும் அவருடன் நாட்டைவிட்டு வெளியேறியவர்களும்தான்.

இதற்கு அங்கத்தினர்கள் முதலாளிகள், தொழிலாளிகள், போலீஸ் அதிகாரிகள், போர் வீரர்கள், குமாஸ்தாக்கள் கூலிகள், ஏன், செக்நாடு முழுவதுமேதான். ராஜீய விஷயங்களில் அபிப்பிராய பேதமுள்ள தொகுதிகள்கூட தேசத்தின் பொது லக்ஷ்யத்திற்காக தங்கள் வித்தியாசங்களை மறந்து ஒன்று சேருகிறார்கள்.

'பாரிஸி'லும் 'சிகாகோ'விலும் இதற்குக் கிளை ஸ்தாபனங்கள் இருக்கின்றன. அமெரிக்காவில் தான் அதிகமாக நிதி திரட்டுகிறார்கள், இன்று உள்நாட்டிலேயே ஒரு ரகசிய நிதி சேர்க்கப் படுகிறது.

இவர்கள் பாரிஸுக்கும், பிரேக் நகருக்கும் ஒரு ரகசியப் போக்குவரத்து மார்க்கம் வைத்துக்கொண்

டிருக்கிறார்கள். இதன் மூலம் பணமும், பிரசாரத்திற்கு வேண்டிய சாதனங்களும் அனுப்பப்படுகின்றன. உள்நாட்டு நிலையும், செய்திகளும் பாரிஸுக்கு தெரிவிக்கப் படுகின்றன.

இதன் முதல் நோக்கம் 'செக்' நாட்டுக்கு சுதந்திரம் பெறுவது தான். தக்க தருணம் வாய்க்கும் வரை அது புரட்சியை ஆரம்பிக்காது. ஆனால் அது எதிர்பாராத படி திடீரென ஏற்படக்கூடுமாதலால் அதற்காக சுதந்திரத் தீயை தூண்டிவிட்டுக் கொண்டே ஜனங்களைத் தயாராக்குகிறது.

இப்பொழுது அவர்கள் தீவிரமாக ஈடுபட்டிருப்பது நாஸி பிரசாரத்திற்கு எதிர்ப் பிரசாரம் செய்வதில்தான். நாட்டின் மூலை முடக்குகளிலெல்லாம் இவர்கள் நுழைந்து வேலை செய்கிறார்கள்.

ஒரு அங்கத்தினன் ஆறு உண்மை தேசபக்தர்களை சேர்த்து ஒரு சிறு சங்கத்தை ஆரம்பிக்கிறான். அங்கு ஜெர்மனிக்கு விரோதமாக துண்டு பத்திரிகைகள் தயாரிக்கப்படுகின்றன. சில தினங்களுக்குமுன் ஆயிரக்கணக்கான செக் குடும்பங்களுக்கு 'மேபியா' சங்கத்தாரால் கடிதம் அனுப்பினார்கள்.

"நீங்கள் நிரந்தரமான சத்தியத்திலும் நீதியிலும் நம்பிக்கை வைக்கவேண்டும். கடைசியில் உண்மைதான் வெற்றியடையும். என்றும் நம் தேசக் கொள்கையை மறந்து விடாதீர்கள். பினேஷை நம்புங்கள்" என்று அதில் கண்டிருந்தது.

எல்லா மக்களுக்கும் எட்ட வேண்டுமென்று அவர்கள் சங்கிலிக் கடிதமுறையை அனுஷ்டிக்கிறார்கள். தனக்கு தெரிவிக்கப் பட்ட விஷயத்தை தன் கூட்டாளிகளுக்கு தெரிவிப்பது தன் கடமை என ஒவ்வொருவனும் எண்ணுகிறான்.

ஒவ்வொரு அச்சுச்சாலையிலிருந்தும் அநாமதேயத் துண்டுபிரசுரங்கள் வெளியிடப் படுகின்றன. இதற்கு அச்சுச்சாலை முதலாளிகளும் உளவுதான்.

மெசாரிக் பாதையை நாஸிகள் ஹிட்லர் ரோடாக மாற்றினார்கள்.[3] அன்றிரவே, மேபியா தன் ஆட்களைக் கொண்டு புதிய பெயரை அழித்து பழைய பெயரை எங்கும் எழுதிவிட்டது. பிறர் அறியாதபடி இரண்டு 'ரேடியோ' ஸ்தாபனங்களை அவர்கள் நடத்துகிறார்கள். அங்கிருந்து நாஸிகளுக்கு விரோதமாகப் பிரசாரச் செய்திகள் விளம்பரப்படுத்தப்படுகின்றன.

நாஸிகளுக்கு கையாட்களாயிருந்த பாசிச, மனப்பான்மையுடைய நாட்டுத் துரோகிகளைக் கண்டுபிடித்து அவர்கள் செல்வாக்கை குலைந்துவிட்டது.

மேபியாவுக்கு செய்தி திரட்டுபவர் வேலைதான் அற்புதமானது. அரசாங்கங்களில்கூட அவர்களுடைய பிரதிநிதிகள் இருக்கிறார்கள். அரசாங்கத்திற்கு செய்தி கிடைப்பதற்குமுன்பே இவர்களுக்கு கிடைத்துவிடும். இன்னும் செக் நாட்டில் அமைதியை நிலைநாட்ட நாஸிகளால் முடியவில்லை. ஆங்காங்கு மறைவாக சண்டைகள் நடந்து கொண்டு தான் இருக்கின்றன.

உயிர்பெறாத சித்திரம்

(அ. கி. ஜெயராமன்)

1

பௌர்ணமி. எங்கும் ஒரே நிசப்தம். நடுநிசிக்குமேல் ஆகிவிட்டது. நாடகம் பார்த்துத் திரும்பிவரும் ஜனங்களின் அரைகுறை வார்த்தைகள் தூரத்தில் அர்த்தமில்லாமல் கேட்டது.

அப்பொழுதும் விஜயன் விழித்துக்கொண்டிருந்தான். அவனுக்குத் தூக்கமில்லை. அன்றல்ல. ஒரு மாதமாக. நிலா வெளிச்சத்தில் ஓய்ந்து படுத்துக் கொண்டிருந்தான் அவன். வாழ்க்கையில் அடித்த பெரும் புயலுக்குப் பிறகு வந்த ஓய்வு அது.

அந்தச் சூறாவளிக்குப்பின் உலகில் எதிலும் அவனுக்கு மனம் செல்லவில்லை. உயிருக்குயிரான அவன் சித்திரக்கலையிலும் அவனுக்கு ஒரு வெறுப்பு ஏற்பட்டிருந்தது. அந்தப் புயலோடு அவன் மனம், கலைவன்மை எல்லாம்போய் விட்டதா?

அந்தக் காட்டுவெள்ளம் அவன் கலைச்சம்பத்தையும் அடித்துக் கொண்டுபோய் விட்டதா? அது அவனுக்கே தெரியாது.

மல்லாந்து படுத்திருந்தான் அவன். கண்களுக்கு அப்பொழுது தான் சந்திரன் தென்பட்டான். பிறகுதான் அன்று பௌர்ணிமை என்ற ஞாபகமும் வந்தது. ஞாபகமா? அல்ல! அவன் உள்ளத்தில் மறைந்துபோன அந்தக் கனவு மீண்டும் தோன்றியது.

2

அதே இடத்தில் அதே பௌர்ணிமையன்று, மேனகையை எவ்வளவு நேரம் அழவைத்தான்? எவ்வளவு நேரம் அவளுடன் பேசாமலிருந்தான்? அவள் எவ்வளவு கண்ணீர் விட்டாள்! பிறகு விஜயன் அவளை எவ்வளவு கெஞ்சினான். பிறகு எத்தனை கனவுகள்! எத்தனை இன்பங்கள்! அவன் கண்கள் கண்ணீரைச் சொறிந்தன.

வாஸ்தவம். சென்ற பௌர்ணமியன்று அவன், விஜயன், சித்திரக்காரன். அவள் மேனகை. அழகுக்குத்தெய்வமென்றுதான் அவளை அவன் நினைத்துக் கொண்டிருந்தான். அவனுடைய கலைக்கே அவள்தான் ஜீவனென்பது அப்பொழுது அவனுக்குத் தெரியுமா? தெரியாமலென்ன?

இந்த உலகில் அவனுக்கு இரு துணைகள். ஒன்று மேனகை, மற்றொன்று அவன் சித்திரக்கலை. இவை இரண்டிற்கும் ஒரு இணை பிரியாத ஒற்றுமை இருப்பதாகவே அவன் எண்ணினான்.

மேனகை இல்லாமல் சித்திரமில்லை; சித்திரமில்லாமல் மேனகை இல்லை. இந்த நினைவு அவன் மனதில் வேரூன்றி இருந்தது. அது உண்மையாகும் காலமும் வந்துவிட்டதா? மேனகையுடன் அவன் கற்பனை மழுங்கி விட்டதா? கலை வன்மை குன்றி விட்டதா?

அதற்குமேல் அவனால் அந்த நிலவில் படுத்திருக்க முடியவில்லை. அந்த நிலவின்மேலேயே ஒரு வெறுப்பு. எழுந்து உள்ளே போய் படுத்தான். அங்கு நிலவு இல்லை. ஒரே அந்தகாரம். உள்ளே இருந்து வெளியே பார்த்தான். அவனை அந்தகாரத்தில் தள்ளிய, அவன் கனவை அந்தகாரமாக்கிய, அந்த நிலவு சிரித்துக்கொண்டிருந்தது வெளியே. படாரென்று கதவைச் சாத்திவிட்டு படுத்துக்கொண்டான். மீண்டும் அதே நினைவு! அதே தோற்றம்! அந்தக் குவிந்த இருளின் மத்தியில் தோன்றி புன்னகை செய்தது மேனகையின் தளிர்முகம்.

'என்னைப் பரிகசிக்கிறாயா? ஜீவனற்ற வெறும் உடல் என்று என்னை ஏசுகிறாயா?' என்று எண்ணியது விஜயனின் மனம்.

ஆயினும் ஏங்கிக் கிடந்த அவன் ஹிருதயத்தில் ஒரு ஆசைக் கனலை மூட்டியது அது. உணர்ச்சியற்றிருந்த அவன் மனம் அந்த முகத்தின் புன்னகையினால் ஒரு புத்துணர்ச்சி பெற்றெழுந்தது. சீ! என்ன கனவு? சட்டென்று எழுந்து உட்கார்ந்தான் விஜயன்.

"மேனகா! நீ உலகின் முன் மறைந்தாய். என்முன் மறையவில்லை. உயிரோடுதான் இருக்கிறாய்! நான் சைத்திரிகன். உன்னை மீண்டும் சிருஷ்டிக்கிறேன். என் கை வலிமை பெற்றுவிட்டது. இதோ ஆரம்பிக்கிறேன் என் பணியை" என்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டான்.

3

ஒரு பெரிய அகல் விளக்கு எரிந்துகொண்டிருந்தது. விஜயன் கையில் சலாகையுடன் உட்கார்ந்திருந்தான் படத்தின் முன். வர்ணத்தைக் குழைத்துப் படத்தருகில் கொண்டுபோனான். பிறகு கீழே வைத்தான் சித்திரக் கோலை.

நிமிஷத்தில் ஆயிரம் கற்பனைகள் மலரும் அவன் உள்ளத்தில் அன்று கற்பனையின் ஒளிப் பிழம்புகூட எழவில்லை. தொட்டதெல்லாம் சித்திரமாகும் அவன் கை வன்மை அன்று ஒரு கோடிழுக்கவும் சக்தியற்றதாக இருந்தது.

வர்ணத்தை எல்லாம் ஒரு முறை பார்த்தான். அர்த்தமற்ற ஒரு வெறியின் சாயை அவன் முகத்தில் படர்ந்திருந்தது.

மீண்டும் முயற்சி செய்தான். மீண்டும் அதே ஓய்வு. அதே தோல்வி. சிறிது நேரம் சும்மா இருந்தான்.

பற்களைக் கடித்தான் விஜயன். ஆவேசத்தால் அவன் கை பதறியது. மீண்டும் அதே முயற்சி. இந்தத் தடவை அவன் கை பரபரப்பாக வேலை செய்தது. அவன் முகத்தில் நிறைவற்ற அற்ப சந்தோஷத்தின் நிழல் தேங்கியது. 'ஆச்சு! இன்னும் சிறிது நேரத்

தில் முடித்து விடுவேன்' என்ற ஆவல் அவன் உள்ளத்தில் ஒரு பரவசத்தை உண்டாக்கிற்று.

தூரத்தில் ஒரு கோழி கூவிற்று. சிறிது பொறுத்து கீச், கீச் சென்று பக்ஷிகள் கத்தின. காகம் ஒன்று பின்னேடே அலறிற்று. காலத்தை எதிர்த்துப் போராடும் சைத்திரிகனுக்குப் பொழுது விடிந்தது தெரியவில்லை.

அவன் கலையிலேயே லயித்திருந்தான். இந்த உலகமே அவன் கண்முன் ஒரு பொருளாகத் தோன்றவில்லை. அவன் ஓவியம் தீட்டினன். தன் உயிருக்குயிரான் ஒரு ஜீவனை சிருஷ்டித்தான். அவளில்லாமல் தன் கலைக்கு ஜீவனுண்டு என்ற ஒரு எண்ணம் அவனையறியாமலே அவன் மனதி லுதித்தது. அவன் சூரியன் உதித்ததை கவனிக்கவில்லை.

ஜீவனற்ற இவன் கலையைக் கேலி செய்பவோ அல்லது அவளுக்குப்பின் அவன் கலையில் ரஸனை போய்விட்டதென்பதை அவன் உள்ளத்தில் பதிய வைக்கவோ சூரியன் தன் கிரணங்களை ஜன்னல் வழியாக அந்தச் சித்திரத்தின்மேல் வீசினன். அப்பொழுதுதான் தெரிந்தது விஜயனுக்கு. சித்திரத்தை ஒரு முறை ஏற இறங்கப்

பார்த்தான். அவன் முகம் விகாரமடைந்தது. அவன் கிழித்த கோடுகளெல்லாம் சித்திரமாகத் தோன்றும் அவன் சித்திரத்தில் அவன் முயன்றும் இன்று ஜீவகளையை அளிக்க முடியவில்லை. மேனகையின் ஜீவனுடன் அவன் கலையின் ஜீவனும் போய்விட்டதா?

4

அகல் விளக்கு எண்ணெய் வற்றி அணைந்து புகைந்தது. சித்திரத்தை வெறித்துப் பார்த்தான். வெட்கமும், தோல்வியும் அவன் மனதில் ஒரு புதிய கலக்கத்தையும் சோர்வையும் உண்டாக்கின.

முதல் நாளிரவு அவன் கண்ட மேனகைக்கும், இப்பொழுது அவன் வரைந்திருந்த மேனகைக்கும் எவ்வளவு வித்தியாசம்?

அந்தப் புன்சிரிப்பு! அந்த வசீகரக் கண்கள்! சுருண்ட கேசம், அவையெல்லாம் இதில் விழவில்லையே! ஒரே ஏக்கத்துடன் சித்திரக் கோலை கீழே வைத்து கால்களைக் கட்டிக்கொண்டு உட்கார்ந்தான் விஜயன்.

சைத்திரிகன் வாழ்க்கையில்இரண்டாவது தோல்வி இது.மேனகை சென்றதே அவன் ஒரு தோல்வி யடைந்தான்; இன்று இது இரண்டாவது பரீக்ஷை ஆயிற்று. மணி பத்தாயிற்று. பனிரண்டும் ஆயிற்று. விஜயன் அந்த இடத்தை விட்டு அசையவே இல்லை. தலை குனிந்தபடியே அதே இடத்தில் உட்கார்ந்திருந்தான். மணி மூன்றடித்தது. சட்டென்று தலை நிமிர்ந்தான் விஜயன். அவன் முகத்தில் மீண்டும், ஒரு உற்சாகத்தின் ஒளி. மனதில் ஒரு ஆவல்.

"இதோ தருகிறேன் இந்தச் சித்திரத்திற்கு ஜீவன்" என்றான். அவன் வர்ணக்கோல் சிறிது நேரம் பரப்பரப்பாக வேலை செய்தது. ஆச்சு, இனி கண்களுக்கு விழி எழுதவேண்டியதுதான் பாக்கி. தன் கலையில் தனியே வெற்றி பெறுகிறேம் என்ற ஆவல் அவனுக்கு ஒரு புதிய ஊக்கத்தை அளித்தது. விழி தீட்டினல் அது ஜீவன் பெற்று விடும். "மேனகா, உனக்கு ஜீவனளிக்கிறேன்!" என்று பொங்கி எழும் தன் கலைக்கர்வத்தோடு வர்ணக்கோலை எடுத்து அவள் இரு கரு விழிகளையும் தீட்டினன்.

தோல்வி! மீண்டும் தோல்விதான்! அவன் மனம் சாந்தியடையவில்லை. சித்திரத்தை ஓர் முறை ஏறிட்டுப் பார்த்தான். அதில் ஜீவனில்லை. அது வெறும் பொம்மையாகத்தான் இருந்தது. அவன் முகம் விகாரமடைந்தது. கைகள் நடுங்கின. வெறித்துச் சித்திரத்தைப் பார்த்தான். வெறும் பொம்மை! வெறும் பொம்மை! அவன் கைகள் பதறின. சித்திரம், வர்ணம், யாவற்றையும் வெறுப்புடன் தூக்கி எறிந்தான். அவன் உடல் நடுங்கியது. அவளுடன், என் கலைத் தெய்வத்துடன்! என் கலையின் ஜீவனும் போய்விட்டது என்று அவனுடைய உடைந்த ஹிருதயம் கதறிற்று. தோல்வியின் வெறித்த கண்களுடன் மேற்றிசையை நோக்கினன். சூரியாஸ்தமனம் ஆகிக் கொண்டிருந்தது.

பகீரதப் பிரயத்தினம்

(கரிச்சான்)

சமீபத்தில் ஸ்ரீ எஸ். ஸ்ரீனிவாச அய்யங்கார் வேலையில்லாத் திண்டாட்டம் ஒழிவதற்கு ஒரு யோசனை கூறினர். கங்கையிலிருந்து காவேரிக்கு ஒரு வாய்க்கால் வெட்டி இரண்டு ஜீவ நதிகளையும் சேர்த்து விட்டால் பல காரியங்களுக்குச்சௌகரியமாகும் என்று அவர் சொன்னர்.

முதலில் இவ்வளவு பெரிய வேலையைக் கைக்கொண்டால் எவ்வளவு பேருக்கு வேலை கிடைக்கும் — இன்ஜினீர்களென்றும், ஓவர்ஸியர்களென்றும் மேஸ்திரிகளென்றும், கூலியாட்கள் என்றும்!

இரண்டாவது, இப்பேர்ப்பட்ட ஒரு பெரிய கால்வாய் இருந்தால் உள்நாட்டு வியாபாரத்திற்கு ரொம்ப உதவி என்றார். ஜல மூலமாக எளிதாக எல்லாவற்றையும் ஓரிடமிருந்து மற்றோரிடத்திற்குக் கொண்டுபோகலாமல்லவா?

* * *

கங்கையை ஆகாயத்திலிருந்து சிவன் முடியில் இறக்கி பூமிக்குக் கொண்டு வரப்பட்டபாடே பகீரதப்பிரயத்தினமாகி விட்டது. அதை வடக்கேயிருந்து தெற்கே கொண்டு வருவதென்றால் அதை எந்தப் பிரயத்தினம் செய்து கொண்டு வரவேண்டுமோ?

பகீரதன் கங்கை கொண்டு வந்த கதை எல்லோரும் அறிந்தது தானே! அவன் ஒரு காலால் நின்று அப்படி முயன்றதனல்தான் அவன் பிரயத்தினம் வெற்றி பெற்றது. நடுவில் அவனுக்கு எவ்வளவு தடங்கல்கள், ஆபத்துகள்! வழியோடே வந்து கொண்டிருந்த கங்கையை ஜன்னு மகரிஷி ஆசமனம் செய்து விட்டார். பகீரதன் அதற்காகப் படாதபாடுபட்டு அவளை அவர் காதுவழியாக வெளியேற்ற வேண்டியதாயிற்று.

* * *

பகீரதன்போல முயற்சி செய்தால் தான் நினைத்தது கைகூடும் என்றால் எவ்வளவு கஷ்டமிருக்கிறது? லட்சியத்தை லேசாக அடைய முடியாதென்றால் சலிப்பு வாராதா? தயக்கம்வாராதா? சோர்வு வாராதா?

பகீரதனுக்கு வரவில்லை. எந்த உயர்ந்த லட்சியத்திற்கும் அவன் செய்தது போன்ற பிரயத்தினம் தான் செய்ய வேண்டும். அதாவது அப்பேர்ப்பட்ட பிரயத்தினம் செய்தால் செய்து முடிக்கக் கூடாதது ஒன்றுமில்லை. ஸ்ரீ ஸ்ரீனிவாச அய்யங்கார் சொல்லுகிறபடி கங்கையைத் தெற்கே கொண்டு வருவதுதானா பிரமாதம்? வங்காளிகளுடைய

ஆட்சேபணை எவ்வளவுதான் இருக்கட்டுமே, அதனுல் என்ன?

பிரயத்தினம் என்ருல் "லௌகிகம்" அதில் சேரவில்லை. எவ்வளவோ செலவாகுமே என்பது கேள்வியல்ல. பகீரதன் சிவனுக்கு எவ்வளவு லஞ்சம் கொடுத்தான்? ஜன்னு மகரிஷியை எப்படிச்சரிப்படுத்தினுன்? செலவு என்பது பிரயத்தினத்தின் அம்சமே அல்ல எப்பொழுதும்.

பிரயத்தினம் என்பது தீர்மானம், உறுதி. எந்தக் காரணத்தைக்கொண்டும் சோர்வடையாமல் கொண்ட காரியத்தைச் செய்து முடிப்பதுதான் பிரயத்தினம். முயற்சி என்பதே முடிவு செய்து விடுவோம் என்று உறுதியில் முளைப்பதுதான்.

* * *

'பிரம்ம பிரயத்தினம்' என்று ஒன்று சொல்லுகிறீர்களே அதென்ன? பகீரதப் பிரயத்தினத்திற்கும் அதற்கும் என்ன வித்தியாசம்? பிரம்ம பிரயத்தினம் என்பதில் செயல் கிடையாது என்று தோன்றுகிறது.

பிரம்மத்தைக் காண செய்யப்படும் பிரயத்தினம் சமாதி தானே! அதில் 'செயல்' என்று சொல்லுவதற்கு ஒன்றும் இல்லையே! எனவே பிரம்ம பிரயத்தினம் என்பது பகீரதப் பிரயத்தினத்திற்கு நேர் எதிரிடையான முறையோ?

இல்லை; எதிரிடை இல்லை. இரண்டும் ஒரு பிரம்மாண்டமான பிரயத்தினத்தின் பகுதிகள்தான். இச்சையும் ஞானமும் சேர்ந்தது பிரம்ம பிரயத்தினம்; கிரியை பகீரதப் பிரயத்தினம். இரண்டும் செயல் சக்தியின் அம்சங்கள் தான். சிவ சக்திகளைப் போல இரண்டும் சேர்ந்தால்தான் சிருஷ்டி.

* * *

பகீரதப் பிரயத்தினம்செய்தால் கங்கையைத் தெற்கே கொண்டு வருவது மட்டுமல்ல. 'இந்திரனுலகினிலே இருக்குது' என்கிறார்களே 'நல்லின்பம்', 'அதனை இங்கே கொண் டெய்தி' டலாம்.

ஆனல் ஒரே ஒரு பயம்தான். ஆரிய கங்கை திராவிடத் தெற்கில் வருவதை சிலர் ஆட்சேபிக்கலாம். அப்பொழுது பகீரதப் பிரயத்தினம் வெறும் சூழ்ச்சியாகிவிடும் அவர்கள் கண்களில்.

ஆனல் அந்த ஆட்சேபணையையும் தகர்த்தெறிந்துகொண்டு பாயும் அன்பு வெள்ளமாகக் கங்கை வந்தாளானல் அவளை யாரால் தடுக்க முடியும்? காடு மலை வனந்தரங்யும் துளைத்துக்கொண்டு லட்சிய உருவாக வரும் அன்பை எதிர்த்து நிற்க யாராலும் முடியாது.

ஆழ் கடல்

(பு. வே. சு.)

மனித வர்க்கத்தோடு, இயற்கை ஆத்மீக பரிபாஷையில் பேசுகிறது; உணர்ச்சிகளை வாரி இறைத்துக்கொண்டு பாஷையற்ற வகையில் அது ஏங்கி நிற்கிறது. எல்லையற்ற ஏக்கம்!

கனவு உலகத்தின் கரைகளில் மோதும் அலைகள் மனிதனின் இன்ப துன்பங்களுக்கு ஒரு சாந்தியை அளித்து, எல்லை கட்ட முயலுகின்றன.

"ஏனம்மா, இங்கே இவ்வளவு அலைகள் அடிக்கின்றன? சமுத்திரத்திற்குள்ளே ஒன்றையும் காணோமே!" என்ற கேள்விக்கு குழந்தையின் தாய், "குறைக் குடம் தளும்பும், நிறை குடம் தளும்புமா?" என்று பதில் சொல்லுவது நம் காதில் விழுகிறது.

ஆம்! ஆழம் அதிகமாக அதிகமாக, அலைகள் குறைந்து விடுகின்றன. சாந்தம் பயங்கரம், நிறைவு எல்லாம் பிறகு தென்படுகின்றன. உள்ளத்தைக் கிளறி விடும் ஆழ்ந்த மௌனம் — மகரிஷியின் தவத்தைப் போல! அங்கே — அவரிடத்தில் — என்ன இல்லை? ஞானம், தவநிறைவு, சாந்தி எல்லாவற்றையும் அது எவ்வளவு நன்றாகச் சித்தரிக்கிறது?

அது மாத்திரமில்லை. எலும்பெடுத்து, வற்றிப் போயிருக்கும் உடம்பிலிருந்து வரும் தீனமான தளர்ந்த குரலுக்கு எவ்வளவு மரியாதை; என்ன பணிவு; என்ன பயம்! அமைதி நிலவும் அந்த வாழ்க்கையில், கடலின் ஆழத்தை நமக்குக் காட்டி எவ்வளவு பக்தியை நம்மிடமிருந்து அவர் வரவழைக்கிறார்? இன்ப துன்பங்கள் எல்லாம் அவருக்குள்ளேயே அடங்கிவிடுகின்றன.

அலைகளின் போராட்டத்திற்குக் கால அளவுண்டா? இல்லை. உலகத்து இன்ப துன்பங்களுக்கும் இல்லை. அவைகளுக்குக் கரை கட்டிவிட்டால் மனிதனின் கனவு மலர்ந்துவிடுகிறது. மதாசாரியார்களுடைய ஆசை, புத்தரின் தியாகம் — எல்லாமே சாபல்யமடைந்து விடுகிறது — பூர்த்தியாகி விடுகிறது. அதற்கு இயற்கை காட்டும் வழியென்ன? அதையே நாமும் ஏன் பின்பற்றக்கூடாது?

காலம் போகட்டும். தைரியம், விடாமுயற்சி, திட நம்பிக்கை இவைகளை நாம் ஏற்றுக்கொள்வோம். அதுதானே அலைகள் சொல்

ஆம் செய்தி? வெற்றி வேண்டியதில்லை. அந்த வெற்றிக்காக நாம் செய்யும் போரில், — அதில் வரும் தியாகத்தில் — நாம் ஆனந்தத்தைக் காணுவோம். கடல் இதுவரையில் அடைந்த வெற்றிகள் எத்தனையோ! வாழ்க்கையின் வெற்றியை நிர்ணயிக்க நாம் யார்?

வாழ்க்கையின் நிர்ணயத்தையும், அயர்ச்சியையும் எவ்வளவு கொடூரமாகப் பரிகசித்துக் கொண்டிருக்கிறது சமுத்திரம்! "அவ்வளவு தான். இனிமேல் எங்கே நம்மால் முடியப்போகிறது!" என்று முடிவு கட்டி விடுபவனைப் பார்த்து கடல் சிரிக்கிறது. வாழ்க்கையின் முடிவு இதுவல்ல. இதைவிடப் பெரிய வாழ்க்கை வேறு இருக்கிறது. அதற்காகப் போராடுவோம்.

ஏன்? ஆழ் கடல், வாழ்க்கையின் கொந்தளிப்பைத்தான் காட்டுகிறது. எவ்வளவு வெற்றிச் சிகரங்களுக்கும் மேல், அமுங்கிக் கிடக்கும் பாறைகளுக்குமேல், அது இன்னும் தடமாடிக் கொண்டிருக்கிறது? பாறைகளைவிட வெற்றிகள் பெரியனவா?

வெற்றி பெரியது; வாழ்க்கை பெரியது; பெரிய வாழ்க்கையில் சிறிய வெற்றியைக் கண்டு மயங்கிக் கிடக்கும் மனிதன் மூடன். கடலின் அக்கரைக்குப் போய்ச் சேரும்போது, மனிதன் பூர்ண வெற்றியையும் அடைந்து விடுவான். அது வரையில் அது நிரந்தரமான போராட்டம்தான்.

எது வெற்றி, எது தோல்வி? பிச்சைக்காரனுக்கு உணவு கிடைப்பது வெற்றியா? மிகச் சிறிய வேலைக்காரனுக்கு பெரிய பதவி கிடைப்பது வெற்றியா? யுத்தத்தில் ஜெயித்த அரசன் பூரண வெற்றியைக் காண்கிறானா? எதுதான் வெற்றி?

வாழ்க்கையின்மேல் மிதந்துகொண்டு எவனும் எதையும் அடைய முடியாது. வெற்றி, நிச்சயமாய் அவனுக்குக் கிடையாது. அதன் அடியில் போய், முத்துக் குளிக்கவேண்டும். அங்கே செல்வமிருக்கிறது. ஒரு எல்லைவரைக்கும் வெற்றியையும் அங்கே நாம் பார்க்க முடியும்.

அவ்வளவுதான், அந்த நிமிஷத்தோடு வெற்றியின் வெறி கலந்த களி ஓய்ந்து விடுகிறது. எதிலும் நிமிஷ சுகத்தைத்தான் காண முடியும். அதற்குமேல் போக மனம் எப்பொழுதும் ஏங்கி நிற்கிறது. ஆழ் கடலின் அடியிலேயே வாசம் செய்ய முடியுமா?

வாழ்க்கையின் ஆழத்தில் நாம் காணும் முடிவே காலமெல்லாம் நாம் பார்க்கத் தவிக்கும் ஆனந்தம்; சத்து, சித்து இரண்டும் ஒன்றாக லயித்த ஆனந்தம். ஏழைக்கு முத்துக் கிடைத்துவிட்டால், பிறகு அவனுக்கேது தரித்திரம்?

———

காரியம் செய்!

சொல்லப் போனால் இயற்கையின் மேதைதான் செய்கையாகும்.

* * *

மனிதனுடைய தலை விதி, அதிர்ஷ்டம், எல்லாம் செய்கையில் தான் இருக்கிறது. அவன் என்னென்ன செய்து கொண்டிருக்க வேண்டியவன் என்ற யூகத்திலேயே, அவன் வாழ்வதற்கான நிபந்தனைகள் எல்லாம் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

மனிதனுடைய தேக அமைப்பிலேயே அப்படித்தான். இழுத்துக் கொடுக்கும் அவன் பாதம் வேகத்துக்காக. பொறுத்துக் கொள்வதற்காக உறுதியான உதடுகள். வேலை செய்வதற்காகக் கைகள். பார்த்துக் கேட்டு உற்சாகம் அடைவதற்காகக் கண், காதுகள்.

நம் மனதின் அமைப்பிலும் இப்படியேதான். கடவுள் நமக்கு அளித்திருக்கும் சக்திகளை சுருசுருப்பாக உபயோகித்து, பொருள்களை பகுத்து அறிவதுடன், உண்மையையும் கண்டறிகிறோம். வித்யாசம் கண்டு பிடிக்கிறோம், புதிசு கண்டு பிடிக்கிறோம். ஒப்பிட்டுப் பார்க்கிறோம்; ஒன்று சேர்க்கிறோம்.

நம் இயற்கை குண அமைப்பிலும் இப்படியேதான். நல்லது, கெட்டது இரண்டுக்கும் நாம் வித்தியாசம் அறிவதற்கான சக்தி, வழிபடுவது என்ற ஒரு இயற்கை குணம்—அதை எவ்வளவு மிருகத்தனமானதாக நாம் ஆக்கிக் கொண்டாலும் சரி—இவைகளும், சிரிய வாழ்க்கைக்கு ஆவல்—அதையும் தீய ஒழுக்கமோ, கொலையோ கொன்றுவிட முடியாது—இவைகள் அத்தனையும், எல்லா நன்மைகளையும், பூரண சம்பத்தையும், நமக்கு கொடுத்திருக்கும் அந்த புருஷனால் நமக்குள் ஏற்றப்பட்டிருக்கின்றன.

* * *

செய்கை இயற்கையானதாகவும், மேன்மையானதாகவும் இருக்கும்போது, ரொம்ப சிலாக்யமான அளவுக்கு அது வீறு கொண்டதாகவும் இருக்கிறது.

* * *

நினைவுகளின் முடிவே செய்கை, ஆனால் நியாயமாகவும், சிலாக்ய

மாகவும் செய்வதற்கு, நீ புத்தி சாலித்தனமாக நினைக்கவேண்டும்.

* * *

கணத்தில் தோன்றும் நினைப்பை எவனொருவன் உடனே செய்கையில் காண்பித்து விடுகிறானோ அவன் சந்தோஷம் அடைபவன்!—அவனுடைய நித்யப்படியான வாழ்க்கையில் புதுப் புது உறுதிகள், நினைவுகள், புதிசான வகையில் பிறக்கின்றன. 'எழுந்திரு' என்று சொல்லும் கடவுளின் காலடிச் சத்தத்தின் எதிரொலி அவனுடைய கால்களில் கிளம்புகிறது.

* * *

ஒரு வாசாலகனின் முதல், இரண்டாவது, மூன்றாவது தன்மைகள் என்ன என்று பிரபல கிரேக்க வாசாலகனான டெமாஸ்தனீஸைக் கேட்டபோது அவர் பதில் கூறினது என்ன தெரியுமா?—செய்கை!

* * *

உண்மை என்னவென்றால், இந்த உலகத்தில் செய்யவேண்டியது ஏதாவது இருக்கிறது என்று தோன்றி, செய்ய விரும்பினால், கரையிலேயே நின்று 'குளிருகிறதே' என்று நடுங்கிக்கொண்டு இருப்பதில் பிரயோசனம் இல்லை.

அபாயத்தையும், குளிரையும் பற்றி யோசிப்பதும் வீண். குதித்துவிடு அதில். முடிந்த மட்டிற்கு எகிறிப்போ.

நல்ல சந்தர்ப்பம் வரும், ஆபத்து இருக்குமே, என்று கணக்குப் பார்ப்பது கூடாது. அதெல்லாம் பிரளயகாலத்திற்கு முந்தின காலங்களில் சரி. அப்போது ஒரு புஸ்தகப் பிரசுரத்தைப்பற்றி நூற்றைம்பது வருஷங்கள் சிநேகிதர்களோடு கலந்து கலந்து யோசனை பண்ணிவிட்டு, அதன் வெற்றியை ஐந்தாறு நூற்றாண்டுகள் கழிந்த பின்பு அநுபவிக்கவாவது உயிரோடு இருந்திருக்கலாம்.

இப்போது அப்படி இல்லை. மனிதன் காத்து இருக்கிறான்; சந்தேகப்படுகிறான்; யோசிக்கிறான்; அண்ணா, பெரியப்பா, சிநேகிதர்களோடு கலந்து கொள்கிறான். ஒரு காரியம் செய்வதற்கு இப்படி ஆகும்போது, ஒரு நாள் காலையில் அவனுக்கு திடீரெனத் தோன்றுகிறது, தனக்கு 65 வயது ஆகிவிட்டதென்று!

அப்போது தான், இந்த மாதிரி யோசனை செய்ததில், எவ்வளவு காலம் வீணாகிப்போய் விட்டது, இனிமேல் அவர்கள் யோசனைப்படி நடப்பதற்கு காலம் இல்லையே, என்று அவனுக்குப் படுகிறது.

* * *

கெட்ட செய்கைகளின் விளைவு, என்ன தெரியுமா? அவை இன்னும் நம்மைக் கெட்டவனாக ஆக்கி விடுகின்றன.

* * *

புகழ் தரும் செய்கைகளிலே தான் அவனுக்குக் கருத்து! ஆனால் தன்னடக்கம் என்ற பீடத்தின் முன் வணங்கி நிற்பவன் அவன்! அகம்பாவப் பீற்றுதல்களை அவன் துச்சமாக நினைக்கிறான்! ஆனால் தன் தீரச்செயல்களே தன்னுடைய மதிப்பைப் பேசும் என்று அவன் கருதுகிறான்!

எல்லா ஆறுகளும் கடலில் கலப்பது போல, எல்லாக் கோடுகளும் மத்தி ஸ்தானத்தில் வந்து சேருவதுபோல, நமது எல்லா செயல்களும் கடவுளிடம் போய் முடிந்து விடுகின்றன.

* * *

உண்மையான செயலுக்கான காரணத்தைப்பற்றிய நமது சிறந்த யூகங்கள் எல்லாம் ஸ்திரம் அற்றதாகவே இருக்கின்றன. அதென்னவோ, நடந்துபோன செயலைப்பற்றிச் சரித்திரத்திலிருந்து அறிந்து கொண்டதாகத்தான் நாம் பாசாங்கு செய்ய வேண்டும்.

இருபத்திநான்கு சதியாலோசனைக்காரர்களால் ஜூலியஸ் ஸீசர் கொல்லப்பட்டான் என்பதைப் பற்றி நான் சந்தேகப்படவில்லை. ஆனால் அவர்களுடைய சுதந்திர ஆசைதான் அந்தச் செய்கைக்குத் தூண்டுதலாக இருந்த ஒரே நினைப்பு என்பது மட்டும் எனக்கு ரொம்ப சந்தேகம்.

* * *

தெய்வீக அன்பு நினைவுகளின் தெளிந்த ஊற்றிலிருந்துதான் மனிதனின் புனிதச் செயல்கள் அருவிகளாக ஓடுகின்றன.

* * *

பிரமாதமான, வலுவான தீர்மானங்களிலிருந்துதான் எப்போதும் பிரமாதமான செயல்கள் கிளம்பி வரும் என்பதில்லை. துணிவான முயற்சியும் அந்த முயற்சிக்குச் சமமான செயல்களைக் கொண்டுவரும் என்பதும் இல்லை. சில சமயம் தவறி விடுகின்றன. அதிர்ஷ்டமும், கோழைத்தனமும் கூட அதற்குப்பதில் வெற்றி பெற்று விடுகின்றன.

ஒன்று புகழ் அல்லது இழிவு. இவை இரண்டில் எதிலாவது ஒன்றில் சிரஞ்சீவித்தன்மை ஏற்படவேண்டும் நமது செய்கைகளால்!

* * *

ஹிருதயத்தின் உத்தம நினைவிலிருந்து வரவேண்டியதாக இருக்க வேண்டும் செயல்கள்.

* * *

ஒரு காரியத்தைச் செய்வதற்கு எனக்கு சுதந்திரம் இருக்கிறது, இல்லை என்ற உள் உணர்ச்சியே ஒரு மாய்கை. நம் செயல்களுக்கான உண்மைக் காரணங்களை ஆராய்ந்து பார்த்தால், நம் சக்திக்கு மீறின ஒரு ஆசை, ஆவலின் விளைவாக அந்த செய்கை ஏற்படுகிறது என்பது தெரிய வரும்.

* * *

நீ உனக்காக வாழ்வதில்லை, முடியவும் முடியாது. ஓராயிரம் நரம்புகள் உன்னை உன் சகாக்களோடு பிணைத்து இருக்கின்றன. அந்த நரம்புகள் வழியே உன் செய்கைகள் காரணங்களாக ஓடுகின்றன. அந்தக் காரணங்களின் முடிவான ஒரு பலனோடு உன்னிடம் அந்த செய்கைகள் திரும்புகின்றன.

* * *

எங்கெங்கோ, காட்டிலும் மேட்டிலும் சிதறிக் கிடந்து, அநேக பழங்கள் வீணாகும் ஒரு மரத்தைப்போல் இல்லை, செய்கையில் ஈடுபட்டிருக்கும் மனிதன். தோட்டத்திலே பண்படுத்தி, நன்றாக வளர்ந்து, பழங்கள் உபயோகத்துக்கு ஆகும்படியாக பயன்படும் மரங்களைப் போன்றவன்!

நாடோடி

"மணி"

சித்திரைமாதத்து வெய்யில். அப்பா! என்ன தாபம்! எனக்குப் பொழுது போகவில்லை. வெளியில் எங்கேயாவது போவோமென்றால் இயற்கையின் அக்னி ஜ்வாலை. 'சிவனே' என்று முழங்காலைக் கட்டிக் கொண்டு திண்ணையில்உட்கார்ந்திருந்தேன். மெல்லிய காற்றால் அலைக்கப்பட்ட சருகுகள், வீதியில் ஒன்றையொன்று ஓடிப் பிடித்து, சிருஷ்டியின் தத்துவத்தை சித்திரித்துக் காட்டிக்கொண்டிருந்தன. ஒன்றையும் லட்சியம் செய்யாமல் ஒரு எருமை அன்னநடை போட்டுக் கொண்டு போயிற்று, அந்த வெய்யிலில்! எங்கு பார்த்தாலும் ஒரே அற்புதமயம்!

ஒன்றுமில்லை. கேவலம், பைராகிதான். ஆஹா! அவன் களைத்த முகம்! நீண்டு தொங்கும் முண்டாசு; பயமற்ற பரிசுத்தமான மனம்......

அடாடா! நானும் ஒரு பைராகியாக இருந்தால்......

அவனோ, 'திக்கு வேறில்லை, உன் திருவடியில் புகுந்தேன்' என்று ஏதோ ஒரு பைத்தியக்காரப் பாட்டைப் பாடிக்கொண்டே வந்தான். எங்கள் வீட்டுத் திண்ணையருகில் வந்ததும், 'அப்பா! என்ன உஷ்ணம்!' என்று சொல்லிக்கொண்டு அதில் உட்கார்ந்தான். முகத்தில் நல்ல தெளிவு. "ஐயா நீங்கள் யார்?" என்றேன்.

"தட்டுக்கூடை முண்டத்தில், தட்டுக்கெட்ட முண்டம்!" என்றான். "ஆயிரத்தோடு, ஆயிரத்தோராவது பக்கிரி!"

எனக்குத் தூக்கிவாரிப் போட்டது! அவனுடைய பேச்சில் நாடோடியின் வெலவெலப்பில்லை. கவர்ச்சி தரும் கம்பீரம் இருந்தது.

"கொஞ்சம் குளிர்ந்த ஜலம் வேண்டும், குடிக்க. கொடுக்க முடியுமா?" என்றான்.

"அப்பா—ராஜம்! கொஞ்சம் தீர்த்தம் கொண்டுவாம்மா!" என்றேன் நான்.

குழந்தை ராஜம் தண்ணீரைக் கொண்டு வந்து கொடுத்துவிட்டு நின்றாள். அவள் என்னுடைய ஒரே செல்லக் குழந்தை.

அந்த பைராகி சொன்னான்—"சார்! இப்பொழுதுதான் சந்நியாசி, பிச்சைக்காரன், எவனுக்குமே உயிர் இருக்கிறதாகவே நினைப்பு இல்லையே! அவன் ஒரு ஆடு, மாடு இவைகளுக்கு சமானமாகத்தானே எண்ணப்படுகிறான்? எனக்கும் இதுமாதிரி ஒரு குழந்தை இருந்தது ஸார்! என்றான் தளர்ந்த குரலில்.

அவன் மனதில் என்னென்ன எண்ணங்கள் வந்தனவோ, என்னமோ? தனக்கும் ஒரு வீடு,—குடிசையாகஇருக்கலாம்—மனைவி, ஒரு சின்ன ராஜம்......

"அவள் இறந்து போய்விட்டாளா—அந்தக் குழந்தை?" என்று கேட்டேன். எனக்கே வேதனையாக இருந்தது.

அவன் திடுக்கிட்டுப் போனான். "நமஸ்காரம். அப்படிச் சொல்லாதீர்கள். அவள் தீர்க்காயுசாக இருக்கவேண்டும்" என்றான்.

எனக்குக் கண்களில் ஜலம் வந்துவிட்டது.

"ரொம்ப மன்னிக்க வேண்டும் 'இருந்தாள்' என்று சொன்னீர்களே என்று எண்ணி, தவறிப் போய்ச் சொல்லிவிட்டேன்," என்று மனம் விட்டுச் சொன்னேன்.

"அதெல்லாம் ஒன்றுமில்லை. நான் உங்களை மன்னிக்கவாவது? நீங்கள் எண்ணிக் கொண்டதில் உண்மை முக்கால் பங்கிருக்கிறது. என்னைப் பொறுத்த வரையில் அவள்......இறந்து தான் போய்விட்டாள். ஆனால் அவள் உயிருடனிருக்கிறாள்.

நான் புதிர் போடவில்லை. விகடம் செய்ய எனக்குத் தெரியாது, உண்மையை நான் சொல்லுகிறேன்.

உங்களுக்குக் காரிய மிருக்குமோ, என்னமோ..."

வாரத்துக்கு ஒரு முறை லீவு என்று எட்டில் எழுதி ஆபீஸில் வைத்திருக்கிறது. ஆனால் அன்றைக்கும் ஆபீஸில் போய் ஒரு குரல் அழுதுவிட்டு வந்தால்தான் அந்த தலைமை அதிகாரிக்கு திருப்தி. ஆனால், அன்று அத்தி பூத்தது போல் உண்மையாகவே லீவு கிடைத்திருந்தது. எனவே "இல்லை. இன்றைக்கு ஒரு வேலையுமில்லை" என்றேன்.

"என்னுடைய இருபத்தெட்டாவது வயதிலேயே........அது போகட்டும், ஸார், ஊர்க்கதை எல்லாம் உங்களுக்கென்னத்திற்கு... ...என்னுடைய மனைவி இறந்து போனதிலிருந்து சொன்னாலே உங்களுக்குப் போதும். ஒரு சின்னப் பெண் குழந்தையை விட்டு விட்டு அவள் போனாள். என்னமோ ஆசை, பைத்தியக்கார ஆசை! குலுங்கக் குலுங்க நகைகளைப் போட்டு அந்தக் குழந்தையைப் பார்ப்பதில் எனக்கு திருப்தி; ஒரு ஆசை! மூன்று வயதுக் குழந்தை! கிளியைக் கூட்டிலடைத்து வைப்பதுபோல், குழந்தைகளை விட்டிற்குள் அடைத்துப் போடும் வழக்கம் எனக்கில்லை. ஆனால்......

அந்த வழக்கம் எனக்கு இருந்திருக்கப்படாதா?......

ஒருநாள் உடல் கொள்ளாமல் நகைகளைப் போட்டுக் கொண்டு திண்ணையில் விளையாடிக் கொண்டிருந்த குழந்தையைக் காணோம்.

எனக்குப் புல்லரித்துப்போயிற்று. ஊரெல்லாம் தேடினேன். அவளைக் காணோம். ஒரு தினம், இரண்டு, மூன்று..........அவள் போய் விட்டாள். திரும்பி வரவே இல்லை.

என்னை உலக வாழ்க்கையில் சேர்த்துக் கட்டியிருந்த கயிறு எப்பொழுது அறுந்ததோ, அதற்குப்பிறகு அந்த ஊரில் இருக்க

எனக்குக் கஷ்டமாகப் போய் விட்டது, எதிலும் ஒரு வெறுப்பு.

ஊர் ஊராக, தேசம் தேசமாகச் சுற்றிக்கொண்டு வரும்போது, ஒரு ஊரில் ஒரு இரவு தங்க நேரிட்டது. அங்கே, மஹானுபாவர்கள், எவரும் அவரவர்கள் வீட்டுத் திண்ணையில் கூடத் தங்கக்கூடாது என்று சொல்லி விட்டனர்.

பெரிய புல்வெளி! நிர்மலமான ஆகாயம். எங்கிருந்தோ புஷ்பித்ததுபோல் ஒரு வெண் தாமரை வானத்தில் மிதந்தது. மெல்லிய பூங்காற்று! படுத்துக் கொண்டேன்.

எதனாலென்று தெரியவில்லை. தூங்கிக்கொண்டிருந்தவன் திடுக்கிட்டு எழுந்து உட்கார்ந்தேன்.

தூரத்திலிருந்து சங்கீத சப்தம் வந்து கொண்டிருந்தது....சார், நான் ஒரு சங்கீதப் பைத்தியம் ...பிறகு வெகு நாழிவரையில தூக்கமே வரவில்லை. அந்தப் பாட்டு வந்த திக்கை நோக்கிப் போனேன்.

கூத்தாடிகளின் கூட்டம். ஏதோ 'தெருக்கூத்து' நடந்து கொண்டிருந்தது! நான்போய், ஒரு நிமிஷம்கூட நிற்கவில்லை! திடீரென்று இருந்த விளக்குகளெல்லாம் அணைந்து விட்டன. என் அதிருஷ்டத்தைப் பார்த்து நானே சிரித்துக்கொண்டு வெளியில் போவதற்காகத் திரும்பினேன்.

யாரோ என்மேல் தடுக்கி விழுந்தார்கள்! தூக்கிவிடலா

மென்று கீழே குனிந்தேன். ஒரு பெண்!

"யாரம்மா நீ?" என்றேன், என்னை அறியாமலே.

அவள் கொச்சையாகத்தான் தமிழ் பேசினாள்! அந்தக் கூத்தாடிகள், அவளைத் திருடிக் கொண்டு வந்து விட்டார்களாம், அவள் சிறு குழந்தையாக இருக்கும் போது.... கடைசியில் அவளை நான் கண்டு பிடித்து விட்டேன்! என் குழந்தையை! அவள் என் குழந்தைதான். நிச்சயம்! அந்த நிலாவில் எனக்கா அடையாளம் தெரியாது?

அவள், அவர்களை விட்டுவிட்டு ஓடிப் போய்விட வேண்டும் என்று என்னை அதற்கு உதவி செய்யச் சொன்னாள். உதவி என்ன? அவளும் ஓடினாள், நானும் ஓடினேன். அவர்களிடமும் தப்பித்துக் கொண்டோம்!

நான்தான் அவளுடைய தகப்பனார் என்று எவ்வளவோ தடவைகளில், அவளுக்குச் சொல்லி விட வேண்டும் என்று நினைத்தேன். ஒரு தடவை சொல்லியும் விட்டேன். ஆனால்... ஆனால் ...அவள் சிரித்தாள். 'அப்படியிருந்தால் — நான் எவ்வளவோ சந்தோஷமாக இருப்பேனே?' என்றாள்.

கண்காணாச் சீமைக்கு வந்து சேர்ந்தோம். அவளே ஒரு வீட்டை வாடகைக் கமர்த்தினாள்.

அவளைப் பார்த்துக்கொண்டிருப்பதில், அவள் என் அருகில் இருக்கிறாள் என்ற எண்ணத்தில் எனக்கு ஒரு சாந்தி! ஆனால், எங்கள் ரத்த பாசம் இவ்வளவு விலகிவிட்டதே என்றதுக்கம் என் நெஞ்சை அடைத்தது. சொல்லியும் அவள் என்னை ஏற்றுக் கொள்ளவில்லையே என்ற ஏக்கம் ஒரு பக்கம்.

எப்படி இருந்தாலென்ன? அவள் என்னுடையவள். இனி மேல், என்னைவிட்டுப் போகமாட்டாள், என்ற எண்ணம் எனக்கு!

அந்த எண்ணத்திலும் மண் விழுந்தது!

ஒரு நாள் சாயங்காலம் வெளியிலிருந்து வந்தேன். உள்ளே எவனோ அவளோடு பேசிக் கொண்டிருப்பது, கேட்டது! சப்த சமுத்ரத்தின் அலைகளும் ஒன்றாகத் திரண்டுவந்து என் நெஞ்சில் மோதின! ஏனோ?

என்ன இருந்தாலும் அவளல்லவா எஜமானி! நான் பரதேசி தானே! அவள்தான் என்னை ஏற்றுக்கொள்ளவில்லையே!

அவன் போனதும், அவள் என்னிடம் வந்தாள். அவளுடைய முகம் மிகவும் களங்கமுற்றிருந்தது. என் மனக் கொந்தளிப் பெல்லாவற்றையும்கூட அடக்கிக் கொண்டு 'அம்மா! அவன் யார்?' என்றேன்.

அவள் தயங்கினாள். ரோஜா புஷ்பத்தின் புதுமை அப்பொழுது அவள் இதழ்களில் இல்லை. வெளுத்து வாடிய, முகத்தில் அவள் உள்ளத்தின் போராட்டம் நன்றாகத் தெரிந்தது. துடிக்கும் உதடுகளின்றும் வார்த்தைகள் தடுமாறி வந்து விழுந்தன.

'தந்தைக்குச் சமானமானவர், நீங்கள்' என்றாள்.

அந்தக் கூத்தாடிக் கூட்டத்திலிருந்து என்னைக் காப்பாற்றியதில் என் உயிரையே திருப்பி எனக்குக் கொடுத்திருக்கிறீர்கள். அதற்கு நான் எவ்வளவோ நன்றியுடையவளாக இருக்கிறேன்...'

அவள் அதற்குமேல் ஒன்றும் சொல்லத்தான் இல்லையோ; அல்லது சொல்லி, என் காதில்தான் விழ வில்லையோ தெரியவில்லை.

'நான் உன் நன்றியை வேண்டவில்லை. நீதான் எனக்கு வேண்டும்..நீ என்றைக்கும் என் குழந்தையாக இருக்கவேண்டும்..'

அவளுக்குக் கண்களில் ஜலம் தளும்பி நின்றது. 'உங்கள் அன்பிற்கு நான் எவ்வளவு செய்தாலும் போதாது. ஆனால் நான் வாழவேண்டும். முதலில், வாழ்க்கையில் நான் ஊன்றிக்கொள்ள வேண்டும். பிறகுதான் என் கடமைகளை நிறைவேற்ற முடியும். இல்லையா? நீங்களே சொல்லுங்கள்' என்றாள்.

ஆம்! அவள் வாழ்க்கையில் நான் வன் தலையிடவேண்டும்? அவள் என் குழந்தையாகவே இருக்கலாம். ஆனால் அவளை இழக்க எனக்கு உரிமை கிடையாது. இழந்த பிறகு, திரும்பத் திரும்ப உரிமை கொண்டாடுவதிலும் அர்த்தமில்லை.

அவள் என்னை விட்டுப் பிரிந்து போவதை என் கண்களால் பார்க்க முடியாது. அவளுக்கு ஊன்றுகோல் கிடைத்துவிட்டது. எனக்கு இருந்த ஊன்றுகோல், என்னையும் விட்டுப் போகிறது.

அன்று இரவே நான் புறப்பட்டுவிட்டேன். இமாசலத்திற்குப் போகிறேன்'' என்று சொல்லி முடித்தான் அப்பைராகி போன்றவன்.

அப்பொழுது வெய்யில் கொஞ்சம் தாழ்ந்துவிட்டது.



'சத்தியவாணி'யில் வஸந்தா

அஸ்வத்தம்மா (சக்குபாயில்)

மிஸ். தவமணி தேவி

‘அதிர்ஷ்டம்’ அடிக்கிறது!
(சடகோபனும் செல்லமும்)

நட்சத்திர பலா பலன்கள்

(1) அசுவனி-மகம்-மூலம்.

12-8-39 இரவு 8-2 முதல்
13-8-39 மாலை 5-33 முதல்

சங்கடம், அலைச்சல், எத்தொழிலினும் பிசகுறுதல், தேக அசௌக்கியம், இஷ்டர் அல்லது மேலதிகாரிகளால் மனஸ்தாபம், உறவினரால் சிலுகு, வாகனத்தால் இடருறுதல், பதைபதைப்பு, சோம்பல். இத்தினத்தில் எதினும் முன்ஜாக்கிரதையாய் நடக்கின் நலம்.

13-8-39 மாலை 5-33 முதல்
14-8-39 பகல் 2-42 வரை.

இந்நாள் எக்கவலையுமின்றி விதிப்படி தொழில் நடக்கும். எதினும் ஊக்கமுண்டாகும். சாதுர்யம் பலிக்கும். தொழிலில் லாபம் அல்லது சீர்த்தி. நூதன நேசரால் மனமகிழ்ச்சி, குடும்பாரோக்கியம். சுகம். நாலா காரிய சிந்தனை. அதனால் பின்நலம். இடையில் சிறு சங்கடங்கள் எய்திடினும் விலகிப்போம். உத்தமம்.

14-8-39 பகல் 2-42 முதல்
15-8-39 பகல் 11-39 வரை.

நற்சிந்தனை, பல நாளெண்ணம் கைகூடும், கணக்குக் காரியம் சீர்திருத்தம் செய்யின் நலம், எதிரியிடமிருந்து தன் காரியம் முடிக்க எத்தனிக்கின் ஜெயந்தரும், சாது பிரசங்கக் கேள்வி மனத்தமைதல், இஷ்ட காரியசித்தி, ஆதிமத்தியந்தங்களில் சிறு கலகமுறினும் பின் நலமாம், உத்தமம்.

15-8-39 பகல் 11-39 முதல்
16-8-39 காலை 8-35 வரை.

தொழிலில் தாமதமாய்க் காரியம் முடியும், பின் ஆகுங்காரியங்களைக் குறித்துச் சிந்தனை, கொடுக்கல் வாங்கலில் மனஸ்தாபம், அல்லது சேதியால் கலக்கம், மறதி, பொதுவில் சம சௌக்கியம், புதிதாகக் காரிய ஆரம்பம் செய்யின் விக்கினமுண்டாகும்.

16-8-39 காலை 8-35 முதல்
16-8-39 இரவு 5-43 வரை.

பொருள் வரத்து, மனமகிழ்ச்சி, இஷ்டார்த்த காரிய ஜெயம், குடும்ப மகிழ்ச்சி, நல்லோர் இணக்கம், எக்காரியம் தொடரினும் பின்பலிதமுறும்,

பிறர்கையிற்சிக்கிய தனத்தை மீட்க எத்தனிக்கின் ஜெயந்தரும், இத்தினம் சுகமாய் நடக்கினும் இடைகடையில் அடுத்த வாரம் மன வருத்தம், மனோதாபமுற்று அகலும்.

16-8-39 இரவு 5-43 முதல்
17-8-39 இரவு 3-16 வரை.

மதிமயக்கம், திடுக்கிடுதல், குடும்ப மனஸ்தாபம், ஆள் அடிமையர்கள் செய்தகுற்றத்தால் மனஸ்தாபமடைதல் அல்லது தான் தெரியாது பிச கியற்றி பின்வருந்துதல், அகால போஜனம், அலேச்சல், இந்நாளில் எதினும் முன் ஜாக்கிரதையாய் நடக்கின் நலம்.

17-8-39 இரவு 3-16 முதல்
18-8-39 இரவு 1-22 வரை.

சுகசௌக்கியம், மன மகிழ்ச்சி, நூதன பொருள் கிடைத்தல், ஆடை ஆபரண வருத்து, தொழிலில் உத்சாகம், லாபம் பெருதற்கான எத்தனம் செய்யின் பின் பலிதந்தரும், தன் காரியத்திற்காக ஒருவரைக் காணினும் ஜெயம். சுகப்பலன் தரும் தினமாம்.

18-8-39 இரவு 1-22 முதல்
19-8-39 இரவு 12-6 வரை.

முக்கிய காரியங்களில் தடங்கலுண்டாகுதல், சாதாரண தொழில் களில் நலம், புத்திரர்களால் மனக்கலக்கம் அல்லது குடும்ப சங்கடம், பிர யாணச்சேதி, நேசரால் மனமகிழ்ச்சி, மறதி, ஆதிமத்யங்களில் சிறிது அலேச்சலுண்டாகும்.

(2) பரணி-பூரம்-பூரட்டாதி

12-8-39 இரவு 8-2 முதல்
13-8-39 மாலே 5-33 வரை.

நல்லோரிணக்கம், சர்வகாரிய வெற்றி, வியாபாரத்தில் தக்க லாபம், தொழிலில் மனமகிழ்ச்சி, அனுமத்து லாபம்பெற எத்தனிக்கின் ஜெயம், நூதன காரியமெதைத் தொடரினும் பின் தக்க பலன்தரும், இடையில் சிறுபகைதாப முற்றகலும், வீண் சிந்தனை ஆயினும் இந்நாள் மிக நன்மை யானதாம்.

13-8-39 மாலே 5-33 முதல்
14-8-39 பகல் 2-42 வரை.

சங்கடம், அலேச்சல், எத்தொழிலிலும் பிசகுறுதல், தேக அசௌக் கியம், இஷ்டர் அல்லது மேலதிகாரிகளால் மனஸ்தாபம், உறவினரால் சிறுகு, வாகன நடை செய்யின் இடருதல், சோம்பல் உண்டாகும், இத் தினத்தில் எதினும் முன்ஜாக்கிரதையாய் இருக்கின் நலம்.

14-8-39 பகல் 2-42 முதல்
15-8-39 பகல் 11-39 வரை.

இன்னுன் எக்கவலையுமில்லாமல் விதிப்படி தொழில் நடக்கும். எதினும் ஊக்கமுண்டாகும், சாதுர்யம் பலிக்கும், தொழிலில் லாபம், அல்லது கீர்த்தி, நூதன நேசரால் மனமகிழ்வு, குடும்ப ஆரோக்கியம், சுகம், நல்ல காரிய சிந்தனை, அதனுல் பின்ஜெயம், இடையில் சிறு சங்கடங்கள் எய்திடினும் விலகிப்போகும், உத்தமம்.

15-8-39 பகல் 11-39 முதல்
16-8-39 காலை 8-35 வரை.

நற்சிந்தனை, சில நாளெண்ணம் முடிதல், கணக்குக் காரிய சீர்திருத்தம் செய்யின் நலம், எதிரியிடத்திலிருந்து தன் காரியம் முடிக்கத்தொடரின் ஜெயந்தரும், சாது பிரசங்கக் கேள்விமனத் தமைதல், இஷ்டகாரிய சித்தி, ஆதிமத்ய அந்தங்களில் சிறு கலக்கமுறினும் சோர்புறினும் பின் நலமாம். உத்தமம்.

16-8-39 காலை 8-35 முதல்
16-8-39 இரவு 5-43 வரை.

தொழிலில் தாமதமாய்க் காரியமுடிதல், பின் ஆகுங்காரியங்களைக் குறித்து சிந்தித்தல், கொடுக்கல் வாங்கலில் மனஸ்தாபம். அல்லது சேதியாற் கலக்கம், நேசரின் மனஸ்தாபம், ம்றதி, பொதுவில் சம சௌக்கியமுண்டு, நூதன நல்ல காரியம்தொடரின் விக்கினமுண்டாகும்.

16-8-39 இரவு 5-43 முதல்
17-8-39 இரவு 3-16 வரை.

பொருள் வரத்து அல்லது மனமகிழ்ச்சி, இஷ்டார்த்த காரியஜெயம், குடும்ப மகிழ்ச்சி, நல்லோரிணக்கம், எக்காரியம் தொடரினும் பின் பலிதமுறும், பிறர் கையிற்சிக்கிய தனத்தை மீட்க எத்தனிக்கின் ஜெயந்தரும், இத்தினம் சுகமே நடக்கினும் இடைகடையில் அடுத்தவர் மனவருத்தம், மனோதாபமுற்றகலும்.

17-8-39 இரவு 3-16 முதல்
18-8-39 இரவு 1-22 வரை.

மதிமயக்கம், திடுக்கிடல், குடும்ப மனஸ்தாபம், ஆள் அடிமையர் செய்த குற்றத்தால் மனத்தாபமடைதல் அல்லது தான் தெரியாது பிசகியற்றி பின் வருந்துதல், அகால போஜனம், அலைச்சல், இந்நாளில் எதினும் முன்ஜாக்கிரதையாய் இருக்கின் நலம்.

18-8-39 இரவு 1-22 முதல்
19-8-39 இரவு 12-6 வரை.

சுக சௌக்கியம், மனமகிழ்ச்சி, நூதன பொருள் கிடைத்தல், ஆடை ஆபரண வருத்து, தொழிலில் உற்சாகம், லாபம் பெறுதற்கான எத்தனம்

செய்யின் பின்தங்க பலிதந்தரும், தன் காரியத்திற்காக ஒருவரைக்காணி னும் ஜெயம், சுபப் பலன்தரும் நாளாம்.

(3) கார்த்திகை-உத்திரம்-உத்திராடம்.

12-8-39 இரவு 8-2 முதல்
13-8-39 மாலை 5-33 வரை.

முக்கிய காரியங்களில் தடங்கலுண்டாகும், சாதாரணத் தொழில் களில் நலம், புத்திரர்களால் மனக்கலக்கம், அல்லது குடும்பசங்கடம், பிர யாணச் சேதி, நேசரால் மனமகிழ்ச்சி, மறதி, ஆதிமத்தியத்தில் சிறிது அலைச்சலுண்டாகும்.

13-8-39 மாலை 5-33 முதல்
14-8-39 பகல் 2-42 வரை

நல்லோரிணக்கம், சர்வகாரிய வெற்றி, வியாபாரத்தில் தக்கலாபம், தொழில் புரியின் மனமகிழ்ச்சி, அனுமத்து லாபம் பெற எத்தனிக்கின் ஜெயம், நூதனகாரிய மெதைத்தொடரினும் பின் தக்கபலன் தரும். இடை யில் சிறுபகை யுற்றகலும், வீண்சிந்தனையாயினும் இந்நாள் மிக நன்மை.

14-8-39 பகல் 2-42 முதல்
15-8-39 பகல் 11-39 வரை ·

சங்கடம், அலைச்சல் எத்தொழிலினும் பிசகுறுதல் தேகஅசௌக்கியம், இஷ்டர் அல்லது மேலதிகாரிகளால் மனஸ்தாபம், உறவினரால் சிலுகு, வாகன நடைசெய்யின் இடருறுதல், பதைபதைப்பு, சோம்பல் உண்டாகும். இத்தினத்தில் எதிலும் முன்ஜாக்கிரதையாய் இருக்கின் நலம்.

15-8-39 பகல் 11-39 முதல்
16-8-39 காலை 8-35 வரை

இந்நாள் எக்கவலையுமில்லாமல் விதிப்படி தொழில் நடக்கும், எதிலும் ஊக்கமுண்டாகும், சாதுர்யம் பலிக்கும், தொழிலில் லாபம் அல்லது கீர்த்தி, நூதன நேசர்களால் மகிழ்வு, குடும்பாரோக்கியம், சுகம், நற்காரிய சிந்தனை, அதனுல் பின்நலம். இடையில் சிறு சங்கடங்கள் எய்தினும் விலகிப்போம், உத்தமம்.

16-8-39 காலை 8-35 முதல்
16-8-39 இரவு 5-43 வரை.

நற்சிந்தனை, சிலநாளெண்ணம் கைகூடும், கணக்கு காரிய சீர்திருத்தம் செய்யின் நலம். எதிரியிடத்திலிருந்து தனது காரியம் முடிக்க எத்தனிக் கின் ஜெயந்தரும். சாதுப் பிரசங்க கேள்வி மனத்தமைதல், இஷ்டகாரிய சித்தி, ஆதிமத்தியங்களில் சிறுகலகமுறினும், சோர்வுறினும் பின் நலமாம், உத்தமநாள்.

16-8-39 இரவு 5-43 முதல்
17-8-39 இரவு 3-16 வரை.

தொழிலில் தாமதமாய்க் காரியம் முடியும், பின் ஆகும் காரியங்களைக் குறித்துச் சிந்தித்தல், கொடுக்கல் வாங்கல் மனஸ்தாபம், அல்லது சேதியால் கலக்கம் நேசரின் முகத்திருப்பம், மறதி, பொதுவில் சம சௌக்கியமுண்டு. நூதன நல்ல காரியம் தொடரின் விக்கினம் உண்டாகும்.

17-8-39 இரவு 3-16 முதல்
18-8-39 இரவு 1-22 வரை.

பொருள்வரத்து, அல்லது மனமகிழ்ச்சி, இஷ்டார்த்த காரியசித்தி, குடும்பமகிழ்ச்சி, நல்லோரிணக்கம், எக்காரியம் தொடரினும் பின்பலித முறும். பிறர் கையிற்சிக்கிய தனத்தை மீட்க எத்தனிக்கின் ஜெயந்தரும், இத்தினம் சுகமே நடக்கினும் இடைகடையில் அடுத்தவரால் மனவருத்தம், மனோதாபமுற்று அகலும்.

18-8-39 இரவு 1-22 முதல்
19-8-39 இரவு 12-6 வரை.

மதிமயக்கம், திடுக்கிடல், குடும்ப மனஸ்தாபம், ஆள் அடிமையர் செய்த குற்றத்தால் மனஸ்தாபமடைதல், அல்லது தான் தெரியாத பிசகியிற்றி பின் வருந்தல், அகால போஜனம், அலேச்சல், இந்நாளில் எதிலும் முன் ஜாக்கிரதையாய் நடக்கின் நலம்.

(4) ரோகிணி-அஸ்தம்-திருவோணம்.

12-8-39 இரவு 8-2 முதல்
13-8-39 மாலை 5-33 வரை.

சுகசௌக்கியம், மனமகிழ்ச்சி நூதனபொருள் கிடைத்தல், ஆடை ஆபரண வருத்து, தொழிலில் உற்சாகம், லாபம் பெருதற்கான எத்தனம் செய்யின் பின் தக்க பலிதந்தரும், தன்காரியத்திற்காக ஒருவரைக் காணினும் ஜெயம், சுகப்பலன் தரும் தினம்.

13-8-39 மாலை 5-33 முதல்
14-8-39 பகல் 2-52 வரை.

முக்கிய காரியங்களில் தடங்கலுண்டாதல், சாதாரண தொழில்களில் நலம், புத்திரர்களால் மனக்கலக்கம் அல்லது குடும்பசங்கடம், பிரயாணச்சேதி, நேசரால் மனமகிழ்ச்சி, மறதி, ஆதிமத்தியத்தில் சிறிது அலேச்சலுண்டாகும்.

14-7-39 பகல் 2-42 முதல்
15-8-39 பகல் 11-39 வரை.

நல்லோரிணக்கம், சர்வகாரியவெற்றி, வியாபாரத்தில் தக்கலாபம், தொழில் புரியின் மனமகிழ்ச்சி. அனுமத்து லாபம் பெற எத்தனிக்கின் ஜெயம், நூதனகாரியம் எதைத்தொடரினும் பின் தக்க பலன்தரும். இடையில்சிறுபகை தாபமுற்று அகலும், வீண்சிந்தனை, ஆயினும் இந்நாள் மிக நன்மை யானதாம்.

15-8-39 பகல் 11-39 முதல்
16-8-39 காலை 8-35 வரை.

சங்கடம், அலைச்சல், எத்தொழிலிலும் பிசகுறுதல், தேக அசௌக்கியம், இஷ்டர் அல்லது மேலதிகாரிகளால் மனஸ்தாபம், உறவினரால் சினுகு, வாகன நடை செய்யின் இடறுதல், சோம்பல், இத்தினத்தில் எதிலும் முன் ஜாக்கிரதையாய் இருக்கின் நலமாம்.

16-8-39 காலை 8-35 முதல்
16-8-39 இரவு 5-43 வரை.

இந்நாள் எக்கவலையுமில்லாலல் விதிப்படி தொழில் நடக்கும், எதிலும் உற்சாகம் உண்டாகும், சாதுரியம் பலிக்கும், தொழிலில் லாபம் அல்லது கீர்த்தி, நூதன நேசரால் மனமகிழ்வு, குடும்பாரோக்கியம், சுகம், நற்காரிய சிந்தனை, அதனால் பின் நலம், இடையிற் சிறுசங்கடங்கள் எய்தினும் விலகிப் போம், உத்தமம்.

16-8-39 இரவு 5-43 முதல்
17-8-39 இரவு 3-16 வரை.

நற்சிந்தனை, சில நாளெண்ணம் முடிதல், கணக்குக் காரிய சீர்திருத்தம் செய்யின் நலம், எதிரியிடத்திலிருந்து தன் காரியம் முடிக்க எத்தனிக்கின் ஜெயந்தரும், சாதுப்பிரசங்கக்கேள்வி மனத்தமைதல், இஷ்டகாரியசித்தி ஆதிமத்தியந்தங்களில் சிறு கலக்கமுறினும், சோர்புறினும் பின் நலமாம். உத்தமம்.

17-8-39 இரவு 3-16 முதல்
18-8-39 இரவு 1-22 வரை.

தொழிலில் தாமதமாய் காரியம் முடிதல், பின் ஆகுங்காரியங்களைக் குறித்துச் சிந்தித்தல், கொடுக்கல் வாங்கலில் மனத்தாங்கல், அல்லது சேதியால் கலக்கம், நேசரின் முகத்திருப்பம், மறதி, பொதுவில் சம சௌக்கியமுண்டு. நூதன நல்லகாரியம் தொடரின் விக்கினமுண்டாகும்.

18-8-39 இரவு 1-22 முதல்
19-8-39 இரவு 12-6 வரை.

பொருள்வரத்து அல்லது மனமகிழ்ச்சி, இஷ்டார்த்த காரியசித்தி, குடும்ப மகிழ்ச்சி, நல்லோரிணக்கம், எக்காரியம் தொடரினும் பின் பலிதமுறும், பிறர்கையிற்சிக்கிய தனத்தை மீட்க எத்தனிக்கின் ஜெயந்தரும். இத்தினம் சுகமே நடக்கினும் இடைகடையில் அடுத்தவரால் மனவருத்தம், மனோதாபமுற்று அகலும்.

(5) மிருகசிரம்-சித்திரை-அவிட்டம்.

12-8-39 இரவு 8-2 முதல்
13-8-39 மாலை 5-33 வரை.

மதிமயக்கம், திடுக்கிடல், குடும்பமனஸ்தாபம், ஆள் அடிமையர் செய்த குற்றத்தால் மனஸ்தாப மடைதல், அல்லது தான் தெரியாது

பிரயெற்றிப் பின் வருந்துதல், அகால போஜனம், அலேச்சல், இந்நாளில் எதிலும் முன் ஜாக்கிரதையாய் நடக்கின் நலமாம்.

13-8-39 மாலே 5-33 முதல்
14-8-39 பகல் 2-42 வரை.

சுக சௌக்கியம், மன மகிழ்ச்சி, நூதன பொருள் கிடைத்தல், ஆடை ஆபரண வரத்து, தொழிலில் மகிழ்ச்சி, லாபம் பெருதற்கான எத்தனஞ் செய்யின் பின்தக்க பலிதந்தரும், தன் காரியத்திற்காக ஒருவரைக் காணினும் ஜெயம், சுகப்பலன் தரும் நாளாம்.

14-8-39 பகல் 2-42 முதல்
15-8-39 பகல் 11-39 வரை.

முக்கிய காரியங்களில் தடங்கலுண்டாகும், சாதாரணத் தொழில்களில் நலம், புத்திரர்களால் மனக் கலக்கம், அல்லது குடும்ப சங்கடம், பிரயாணச் சேதி, நேசரால் மன மகிழ்ச்சி, மறதி, ஆதிமத்யங்களில் சிறிது அலேச்சலுமுண்டாம்.

15-8-39 பகல் 11-39 முதல்
16-8-39 காலே 8-35 வரை.

நல்லோரிணக்கம், சர்வகாரிய வெற்றி, வியாபாரத்தில் தக்க லாபம், தொழிலில் உற்சாகம், அனுமத்து லாபம் பெற எத்தனிக்கின் ஜெயம், நூதன காரியம் எதைத் தொடரினும் பின் தக்க பலன் தரும், இடையில் சிறுபகை தாபமுற்று அகலும், வீண் சிந்தனேயாயினும் இந்நாள் மிக நன்மையாம்.

16-8-39 காலே 8-35 முதல்
16-8-39 இரவு 5-43 வரை.

சங்கடம், அலேச்சல், எத்தொழிலிலும் பிசகுதல், தேக அசௌக்கியம், இஷ்டர் அல்லது மேலதிகாரிகளால் மனத்தாபம், உறவினரால் சிலுகு, வாகனநடை செய்யின் இடருறுதல், சோம்பல், இத்தினத்தில் எதிலும் முன் ஜாக்கிரதையாய் இருக்கின் நலமாம்.

16-8-39 இரவு 5-43 முதல்
17-8-39 இரவு 3-16 வரை.

இந்நாள் சுக்கவலேயுமின்றி தொழில் நடக்கும், எதிலும் ஊக்கமுண்டாகும், சாதுர்யம் பலிக்கும், தொழிலில் லாபம் அல்லது கீர்த்தி, நூதன நேசரால் மன மகிழ்வு, குடும்பாரோக்கியம், சுகம், நற்காரிய சிந்தனே, அதனல் பின் நலம், இடையில் சிறு சங்கடங்கள் எய்தினும் விலகிப்போம், உத்தம நாள்.

17-8-39 இரவு 3-16 முதல்
18-8-39 இரவு 1-22 வரை.

நற்சிந்தனே, சிலநாளெண்ணம் முடிதல், கணக்குக் காரிய சீர்திருத்தம் செய்யின் நலம், எதிரியிடத்திலிருந்து தன் காரியத்தை முடிக்க

எத்தனிக்கின் ஜெயந்தரும், சாதுப் பிரசங்கக் கேள்வி மனத்தமைதல், இஷ்டகாரிய சித்தி, ஆதிமத்தியங்களில் கலக்கமுறினும் சோர்வுறினும் பின் நலமாம்.

18-8-39 இரவு 1-22 முதல்
18-8-39 இரவு 12-6 வரை.

தொழிலில் தாமதமாய்க் காரியம் முடிதல், பின்னும் காரியங்களைக் குறித்து சிந்தித்தல், கொடுக்கல் வாங்கல் மனத்தாங்கல் அல்லது சேதியால் கலக்கம், நேசரின் முகத்திருப்பம், மறதி, பொதுவில் சம சௌக்கியம், நூதன நல்ல காரியங்களைத் தொடரின் விக்கினமுண்டாகும்.

(6) திருவாதிரை-சுவாதி-சதயம்.

12-8-39 இரவு 8-2 முதல்
13-8-39 மாலை 5-33 வரை.

பொருள்வரத்து, அல்லது மனமகிழ்ச்சி, இஷ்டார்த்த காரிய ஜெயம், குடும்ப மகிழ்ச்சி, நல்லோரிணக்கம், எக்காரியம் தொடரினும் பின் பலித முறும், பிறர் கையிற்சிக்கிய தனத்தை மீட்க எத்தனிக்கின் ஜெயம் தரும், இத்தினம் சுகமே நடக்கினும் இடைகடையில் அடுத்தவரால் மனவருத்தம், மனோதாபமுற்றகலும்.

13-8-39 மாலை 5-33 முதல்
14-8-39 பகல் 2-42 வரை.

மதிமயக்கம், திடுக்கிடல், குடும்ப மனஸ்தாபம், ஆள் அடிமையர் செய்த குற்றத்தால் மனத்தாப மடைதல், அல்லது தான் தெரியாது பிசகியற்றிப் பின் வருந்துதல், அகால போஜனம், அலைச்சல், இன்னுளில் எதினும் முன் ஜாக்கிரதையோடு நடத்தல் நலம்.

14-8-39 பகல் 2-42 முதல்
15-8-39பகல் 11-39 வரை.

சுகம், சௌக்கியம், மனமகிழ்ச்சி, நூதன பொருள் கிடைத்தல், ஆடை ஆபரண வருத்து, தொழிலில் மகிழ்ச்சி, லாபம் பெருதற்கான எத்தனம் செய்யின் பின் தக்க பலிதந்தரும், தன் காரியத்திற்காக ஒருவரைக் காணி லும் ஜெபம், சுகப்பலன் தரும் தினமாம்.

15-8-39 பகல் 11-39 முதல்
16-8-39 காலை 8-35 வரை.

முக்கிய காரியங்களில் தடங்கலுண்டாகுதல், சாதாரண தொழில் களில் நலம், புத்திரர்களால் மனக்கலக்கம், அல்லது குடும்ப சங்கடம் பிரயாணச் சேதி, நேசரால் மனமகிழ்ச்சி, மறதி, ஆதிமத்தியத்தில் சிறிது அலைச்சலுமுண்டாம்.

16-8-39 காலை 8-35 முதல்
16-8-39 இரவு 5-43 வரை.

நல்லோரிணக்கம், சர்வகாரிய வெற்றி, வியாபாரத்தில் தக்கலாபம், தொழில் புரியின் மனமகிழ்ச்சி, அனுமத்து லாபம் பெற எத்தனிக்கின் ஜெயம், நூதன காரியம் எதைத் தொடரினும் பின் தக்க பலன் தரும், இடையில் சிறு பலகை தாபமுற்றகலும், வீண் சிந்தனையாயினும் இந்நாள் மிக நன்மையானதாம்.

16-8-39 இரவு 5-43 முதல்
17-8-39 இரவு 3-16 வரை.

சங்கடம், அலைச்சல், எத்தொழிலும் பிசகுதல், தேக அசௌக்கியம், இஷ்டர் அல்லது மேலதிகாரிகளால் மனத்தாபம், உறவினரால் பிணக்கு, வாகன நடைசெய்யின் இடருறும், சோம்பல், இத்தினத்தில் எதிலும் முன் ஜாக்கிரதையாய் இருக்கின் நலமாம்.

17-8-39 இரவு 3-16 முதல்
18-8-39 இரவு 1-22 வரை.

இந்நாள் எக்கவலையுமின்றி தொழில் நடக்கும், எதிலும் ஊக்கமுண்டாகும், சாதுர்யம் பலிக்கும், தொழிலில் லாபம் அல்லது கீர்த்தி, நூதன நேசரால் மன மகிழ்வு, குடும்பாரோக்கியம், சுகம், நற்காரிய சிந்தனை, அதனால் பின் ஜெயம், இடையில் சிறு சங்கடங்கள் எய்தினும் விலகிப் போகும்.

18-8-39 இரவு 1-22 முதல்
19-8-39 இரவு 12-6 வரை.

நற்சிந்தனை, சிலநாளெண்ணம் முடிதல், கணக்குக் காரிய சீர்திருத்தம் செய்யின் நலம், எதிரியிடத்திலிருந்து தன் காரியம் முடிக்க எத்தனிக்கின் ஜெயந்தரும், சாது பிரசங்கக் கேள்வி மனத்தமைதல், இஷ்டகாரிய சித்தி, ஆதிமத்திய அந்தங்களில் சிறு கலக்கமுறினும் சோர்வுறினும் பின் நலமாம்.

(7) புனர்பூசம்-விசாகம்-பூரட்டாதி.

12-8-39 இரவு 8-2 முதல்
13-8-39 மாலை 5-33 வரை.

தொழிலில் தாமதமாய் காரியம் முடிதல், பின் ஆகும் காரியங்களைக் குறித்துச்சிந்தித்தல், கொடுக்கல் வாங்கலில் மனத்தாங்கல், அல்லது சேதியாற்கலக்கம், நேசரின் முகத்திருப்பம், மறதி, பொதுவில் சமசௌக்கியமுண்டு, நூதன நல்ல காரியம் தொடரின் விக்கினமுண்டாகும்.

13-8-39 மாலை 5-33 முதல்
14-8-39 பகல் 2-42 வரை.

பொருள் வரத்து, அல்லது மனமகிழ்ச்சி, இஷ்டார்த்த காரிய ஜெயம், குடும்ப மகிழ்ச்சி, நல்லோரிணக்கம், எக்காரியம் தொடரினும் பின்

பலிதமுறும், பிறர் கையிற் சிக்கிய தனத்தை மீட்க எத்தனிக்கின் ஜெயந் தரும், இத்தினம் சுகமே நடக்கினும் இடைகடைவ்யி அடுத்தவரால் மன வருத்தம், மனோதாபமுற்றகலும்.

14-8-39 பகல் 2-42 முதல்
15-8-39 பகல் 11-39 வரை.

மதிமயக்கம், திடுக்கிடல், குடும்ப மனஸ்தாபம், ஆள் அடிமையர் செய்த குற்றத்தால் மனத்தாபமடைதல் அல்லது தான் தெரியாது பிசகி யற்றிப் பின்வருந்துதல், அகால போஜனம், அலேச்சல், இந்நாளில் எதிலும் முன் ஜாக்கிரதையாக நடக்கின் நலமாம்.

15-8-39 பகல் 11-39 முதல்
16-8-39 காலே 8-35 வரை.

சுக சௌக்கியம், மன மகிழ்ச்சி, நூதன பொருள் கிடைத்தல், ஆடை ஆபரணவருத்து, தொழிலில் மகிழ்ச்சி, லாபம் பெறுதற்கான யத்தனம் செய்யின் பின் தக்க பலிதமுண்டாகும், தன் காரியத்திற்காக ஒருவரைக் காணினும் ஜெயம், சுகப்பலன் தரும்தினம்.

16-8-39 காலே 8-35 முதல்
16-8-39 இரவு 5-43 வரை.

முக்கிய காரியங்களில் தடங்கலுண்டாகுதல், சாதாரணத் தொழிலில் நலம், புத்திரர்களால் மனக்கலக்கம், அல்லது குடும்ப சங்கடம், பிரயாணச் சேதி, நேசரால் மனமகிழ்ச்சி, மறதி, ஆதிமத்தியத்தில் சிறிது அலேச்ச லுண்டாகும்.

16-8-39 இரவு 5-43 முதல்
17-8-39 இரவு 3-16 வரை.

நல்லோரிணக்கம், சர்வகாரிய வெற்றி, வியாபாரத்தில் தக்க லாபம், தொழிலில் உற்சாகம், அனுமத்து லாபம் பெற எத்தனிக்கின் ஜெயம், நூதன காரியம் எதைத் தொடரினும் பின் தக்க பலன்தரும், இடையில் சிறுபகை தாபமுற்றகலும், வீண் சிந்தனேயாயினும் இந்நாள் மிக நன்மை யானதாம்.

17-8-39 இரவு 3-16 முதல்
18-8-39 இரவு 1-22 வரை.

சங்கடம், அலேச்சல், எத்தொழிலிலும் பிசகு நேருதல், தேக அசௌக் கியம், இஷ்டர் அல்லது மேலதிகாரிகளால் மனஸ்தாபம், உறவினரால் சிலுகு, வாகனநடை செய்யின் இடறுருதல், சோம்பல், இத்தினத்தில் எதிலும் முன் ஜாக்கிரதையாய் நடக்கின் நலமாம்.

18-8-39 இரவு 1-22 முதல்
19-8-39 இரவு 12-6 வரை.

இந்நாள் எக்கவலேயுமின்றி தொழில் நடக்கும், எதினும் ஊக்கமுண் டாகும், சாதுர்யம் பலிக்கும், தொழிலில் லாபம் அல்லது கீர்த்தி, நூதன

நேசரால் மனமகிழ்வு, குடும்பாரோக்கியம், சுகம், நற்காரிய சிந்தனை, அதனுல் பின்நலம், இடையிற் சிறு சங்கடங்களெய்தினும் விலகிப்போம், உத்தம நாள்.

(8) பூசம்-அனுஷம்-உத்திரட்டாதி.

12-8-39 இரவு 8-2 முதல்
13-8-39 மாலை 5-33 வரை.

நற்சிந்தனை, சில நாளெண்ணம் முடிதல், கணக்கு காரிய சீர்திருத்தம் செய்யின் நலம், எதிரியிடமிருந்து தன் காரியம் முடிக்க எத்தனிக்கின் ஜெயந்தரும், சாது பிரசங்கக் கேள்வி மனத்தமைதல், இஷ்ட காரிய சித்தி, ஆதி மத்யந்தங்களில் சிறு கலக்க முறினும் சோர்வுறினும் பின் நலமாம், உத்தமம்.

13-8-39 மாலை 5-33 முதல்
14-8-39 பகல் 2-42 வரை.

தொழிலில் தாமதமாய், காரியம் முடிதல், பின் ஆகுங்காரியங்களைக் குறித்துச் சிந்தித்தல், கொடுக்கல் வாங்கல், மனத்தாங்கல், அல்லது சேதியால் கலக்கம், மறதி, பொதுவில் சமப்பலன், நல்லகாரியம் தொடரின் விக்கின முண்டாகும்.

14-8-39 பகல் 2-42 முதல்
15-8-39 பகல் 11-39 வரை.

பொருள் வரத்து, அல்லது மன மகிழ்ச்சி, இஷ்டார்த்த காரிய ஜெயம், குடும்ப மகிழ்ச்சி, நல்லோரிணக்கம், எக்காரியம் தொடரினும் பின் பலித முறும், பிறர் கையிற் சிக்கிய தனத்தை மீட்க எத்தனிக்கின் ஜெயந்தரும், இத்தினம் சுகமே நடக்கினும் இடைகடையில் அடுத்தவரால் மனவருத்தம், மனோதாப முற்றகலும்.

15-8-39 பகல் 11-39 முதல்
16-8-39 காலை 8-35 வரை.

மதிமயக்கம், திடுக்கிடல், குடும்ப மனஸ்தாபம், ஆள் அடிமையர் செய்த குற்றத்தால் மனஸ்தாபமடைதல், அல்லது தான் தெரியாது பிசகியற்றிப் பின் வருந்தல், அகால போஜனம், அலைச்சல், இந்நாளில் எதிலும் முன் ஜாக்கிரதையாய் நடக்கின் நலமாம்.

16-8-39 காலை 8-35 முதல்
16-8-39 இரவு 5-43 வரை.

சுக சௌக்கியம், மன மகிழ்ச்சி, நூதன பொருள் கிடைத்தல், ஆடையாபரண வரத்து, தொழிலில் மகிழ்ச்சி, லாபம் பெருதற்கான யத்தனஞ் செய்யின் பின் தக்க பலிதந்தரும், தன் காரியத்திற்காக ஒருவரைக் காணினும் ஜெயம், சுகப்பலன் தரும் தினம்.

16-8-39 இரவு 5-43 முதல்
17-8-39 இரவு 3-16 வரை.

முக்கிய காரியங்கள் தடைபடுதல், சாதாரண தொழிலில் நலம், புத்திரர்களால் மனக் கலக்கம் அல்லது குடும்ப சங்கடம், பிரயாணச் சேதி, நேசரால் மன மகிழ்ச்சி, மறதி, சிறிது அலைச்சலு முண்டாம்.

17-8-39 இரவு 3-16 முதல்
18-8-39 இரவு 1-22 வரை.

நல்லோரிணக்கம், சர்வகாரியவெற்றி, வியாபாரத்தில் தக்கலாபம், தொழில் புரியின் மன மகிழ்ச்சி, அனுமத்து லாபம் பெற எத்தனிக்கின் ஜெயம், நூதன காரியம் எதைத் தொடரினும் பின் தக்க பலன் தரும், இடையில் சிறு பகை தாபமுற்று அகலும், வீண் சிந்தனையாயினும் இந்நாள் மிக நன்மையானதாம்.

18-8-39 இரவு 1-22 முதல்
19-8-39 இரவு 12-6 வரை.

சங்கடம், அலைச்சல், எத்தொழிலிலும் பிசகு நேருதல், தேக அசௌக்கியம், இஷ்டர் அல்லது மேலதிகாரிகளால் மனஸ்தாபம், உறவினரால் பிணுகு, சோம்பல், இத்தினத்தில் எதிலும் முன் ஜாக்கிரதையாய் நடக்கின் நலமாம்.

(9) ஆயில்யம்-கேட்டை-ரேவதி.

12-8-39 இரவு 8-2 முதல்
13-8-39 மாலை 5-33 வரை.

இந்நாள் எக்கவலையுமில்லாமல் தொழில் நடக்கும், எதிலும் ஊக்க முண்டாகும், சாதுர்யம் பலிக்கும், தொழிலில் லாபம், அல்லது கீர்த்தி, நூதனநேசரால் மனமகிழ்வு, குடும்பாரோக்கியம், சுகம், நற்காரிய சிந்தனை அதனால் பின்நலம், இடையில் சிறு சங்கடங்களெய்திடினும் விலகிப்போகும், உத்தம நாள்.

13-8-39 மாலை 5-33 முதல்
14-8-39 பகல் 2-42 வரை.

நற்சிந்தனை, சிலநாளெண்ணம் முடிதல், கணக்குக் காரிய சீர்திருத்தம் செய்யின் நலம், எதிரியிடத்திலிருந்து தன் காரியம் முடிக்க எத்தனிக்கின் ஜெயந்தரும், சாதுபிரசங்ககேள்வி மனத்தமைதல், இஷ்டகாரிய சித்தி, ஆதிமத்தியங்களில் சிறு கலக்கமுறினும் சோர்வுறினும் பின் நலமாம், உத்தமம்.

14-8-39 பகல் 2-42 முதல்
15-8-39 பகல் 11-39 வரை.

தொழிலில் தாமதமாய்க் காரியம் முடிதல், பின் ஆகும் காரியங்களைக் குறித்து சிந்தித்தல், கொடுக்கல் வாங்கலில் மனஸ்தாபம், அல்லது சேதியால்

கலக்கம், மறதி, பொருளில் சமப்பலன், புதிதாய் காரியம் தொடரின் விக்கினமுண்டாகும்.

15-8-39 பகல் 11-39 முதல்
16-8-39 காலை 8-35 வரை.

பொருள் வரத்து, மனமகிழ்ச்சி, இஷ்டகாரிய சித்தி, குடும்ப மகிழ்ச்சி, நல்லோரிணக்கம், எக்காரியம் தொடரினும் பின் பலிதமாகும், பிறர் கையிற் சிக்கிய தனத்தை மீட்க யத்தனிக்கின் ஜயந்தரும், இத்தினம் சுகமே நடக்கினும் இடைகடையில் அடுத்தவரால் வருத்தம், மனோதாபமுற்றகலும்.

16-8-39 காலை 8-35 முதல்
16-8-39 இரவு 5-43 வரை.

மதிமயக்கம், திடுக்கிடல், குடும்ப மனஸ்தாபம், ஆளடிமையர் செய்த குற்றத்தால் மனஸ்தாபமடைதல், அல்லது தான்தெரியாது பிசகியற்றி பின்வருந்தல், அகால போஜனம், அலைச்சல், இந்நாளில் எதிலும் முன் ஜாக்கிரதையாய் நடக்கின் நலம்.

16-8-39 இரவு 5-43 முதல்
17-8-39 இரவு 3-16 வரை.

சுக சௌக்கியம், மனமகிழ்ச்சி, நூதன பொருள் கிடைத்தல், ஆடையாபரண வரத்து, தொழிலில் மகிழ்ச்சி, லாபம் பெருதற்கான எத்தனஞ் செய்யின் பின் தக்க பலிதமுண்டாம், தன் காரியத்திற்காக ஒருவரைக் காண நேரினும் ஜெயம், சுபப்பலன் தரும் தினம்.

17-8-39 இரவு 3-16 முதல்
18-8-39 இரவு 1-22 வரை.

முக்கிய காரியங்களில் தடங்கலுண்டாகுதல், சாதாரணத் தொழில்களில் நலம், புத்திரர்களால் மனக்கலக்கம், அல்லது குடும்ப சங்கடம், பிரயாணச்சேதி, நேசரால் மனமகிழ்ச்சி, மறதி, சிறிது அலைச்சலுமுண்டாம்.

18-8-39 இரவு 1-22 முதல்
19-8-39 இரவு 12-6 வரை.

நல்லோரிணக்கம், சர்வகாரிய வெற்றி, வியாபாரத்தில் தக்க லாபம், தொழிலில் மன உற்சாகம், அனுமத்து லாபம்பெற எத்தனிக்கின் ஜெயம், நூதன காரியமெதைத்தொடரினும் பின் தக்க பலன் தரும், வீண் சிந்தனையாயினும் இந்நாள் மிக நன்மையானதாம்.

———

ஹிட்லர்மேல் கண்!

ஹிட்லர், முஸோலினி, பிரான்கோ—இவர்களுடைய ரகசிய போலீஸாரின் கையில், ஸ்டாலின் கட்சியைச் சேர்ந்தவன் எவனாவது அகப்பட்டால். அவன் கொஞ்சம் புத்திசாலியாகக் காணப்பட்டால், அவனை அவர்கள் கேட்கும் முதல் கேள்வி 'எர்னஸ்டு எக்ஸ் எங்கே' என்பதுதான்.

இவனைக் கண்டுபிடிக்க ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் நூற்றுக்கணக்கான ரகசியப்படைகள் வேலைசெய்கின்றன. அவ்வளவு சாமர்த்தியம் வாய்ந்த இந்தப் பேர்வழி யார்? இவன் ஸர்வதேச பொதுவுடைமை கட்சியின் வட பகுதிக்குத் தலைவன். பெரிய பெரிய கக்ஷி உத்தியோகஸ்தர் உயிர் இவன் கையில்தான்; ரஷ்யாவுக்கு வெளியில் காமின்டர்னுக்கு (பொது உடமை ஸ்தாபனத்துக்கு) ஆணி வேர் போன்ற ரகசிய மனிதன்.

அவன் ஒரே ஒரு தடவைதான் பிடிபட்டான். ஆனால் அவனை வைத்திருந்த வீட்டில் அவன் ஆட்கள் தீயை வைக்க, அவன் தப்பி ஓடி விட்டான்.

ஒரு நாள் பேர்லின்-ஹேம்பர்க் காலை ரயிலில் அவன் பிரயாணம் செய்துகொண்டு இருந்தான், பொய் அனுமதிச் சீட்டுடன். சின்ன ஸ்டேஷன் ஒன்றில் வண்டியை திடீரென்று நிறுத்தி போலீஸார் பிரயாணிகளை சோதனை யிட்டனர். வந்து வளைத்துக்கொண்டவர்கள் நாஸி கஸ்டாபோ ரகசியப் படைவீரர். அவனுக்கு இது புதிதல்ல. ஆனால் இப்பொழுது அவனை அழிவு ஒவ்வொரு நிமிஷமும் எதிர் பார்த்துக் காத்திருந்தது. இருந்தாலும் நெஞ்சழுத்தத்தோடு தான் நின்றிருந்த லயனிலிருந்து தனியே பிரிந்து நேரே படைத்தலைவனிடம் சென்று வார்த்தை யாடினான். இவன் யாரோ நமது படைத் தலைவனுடன் பேசுகிறான் என்றெண்ணி படைவீரர் உதாசீனமாயிருந்து விட்டனர். அடுத்த நிமிஷம் படைத்தலைவனும் அவனும் இணைபிரியா நண்பராய் விட்டனர். ரயில் புறப்படும் சமயம் கைகுலுக்கி 'ஹிட்லருக்கு ஜே' எனக் கூவினர். அவனும் கூவினான்.

எர்னஸ்ட் எக்ஸ் வியாபாரியைப் போல் நுண்ணிய தந்திரவாதியும் கூட. நன்கு தேறிய படைவீரன். ஸைலீஷிய சுரங்கத் தொழிலாளர் குடும்பத்தில் பிறந்தவன். அவன் அறிவாளிகளை மிகவும் கேவலமாக எண்ணுபவன். செயலில்தான் அவனுக்கு நம்பிக்கை. கட்டுப்பாட்டையும் உழைப்பையும் அவன் வெறுத்ததால் புரட்சி இயக்கத்தில் கலந்து கொண்டான்.

சில வருஷங்கள், அபாயம், அதிசயம் இவை இரண்டும் ஒருங்கே நிறைந்த வாழ்க்கையை நடத்திவிட்டு, மகா யுத்தத்தின் போது கைதியானான். ஆனால் அவன் யார் என்று யாராலும் தெரிந்துகொள்ள முடியவில்லை. அதனால் அவனுக்கு ஜெர்மன் அரசாங்கக் கப்பலில் உத்தியோகம் கிடைத்தது. அவன் வியாதியால் பீடிக்கப்பட்டு ஆஸ்பத்திரியில் இருந்தான். சிகிச்சைக்கு வந்த மற்ற கப்பல் வேலைக்காரர்கள் திரும்பிப்போகும்போது அவன் சேர்க்கையால். அபாய புரட்சிக்காரராய் மாறிவிட்டார்கள். கொஞ்ச நாளில் அவனுக்கு கப்பல் படைக்கு முக்கிய அதிகாரப் பதவி கிடைத்தது. ஆங்கிலேயருடன் சதி செய்து கெய்ஸரை ஹாலந்தில் சரண்புகச் செய்துவிட்டான்.

மஹா யுத்தத்திற்குப் பிறகு ஜெர்மனியின் புரட்சி இயக்கங்களுக்கெல்லாம் இவன் தலைவனாகி விட்டான். அவன் பேச்சுத் திறமை அபாயமானது. கேட்டவர் ஸ்தம்பித்து அவன் வலையில் விழுந்தனர். இதே சமயத்தில் சர்வதேச பொதுவுடமைக் கட்சி ஸ்தாபிக்கப்பட்டது. அதற்கு இவன் யுத்த மந்திரியானான். ஹிட்லருடைய இயக்கத்திற்கு பெருந் தீங்கு விளைவித்தான்.

அதி ஜாக்கிரதையுடன் ஒரு ரகசிய பத்திர இலாகாவை உண்டாக்கினான். பொதுஉடமை உத்தியோகஸ்தர்களின் குற்றங்கள் யாவும் அதில் பதிவு செய்யப்பட்டிருந்தது. இதை அவன் தன்னுடன் போட்டி யிடுபவரை நசுக்கவும் உபயோகித்து வந்தான். அவன் ஸ்டாலின் முதலியவர்களுக்கு எழுதிய கடிதங்களால், அவன் விரோதிகள் பலர் உயிர் துறந்தனர்.

இவைகளைக் கண்டு சந்தோஷமடைந்த ரஷ்யத் தலைவர்கள் ஒரு பெரிய பொறுப்பை அவனிடம் ஒப்படைத்தனர். ஸ்டாலினுக்கு இடையூறு விளைவித்த நாட்டுப் படைகளைக் கலைத்து, பொதுவுடமை படையைத் திரட்டல், பொருளாதார சீர்திருத்தத்திற்கு போராடியவர்களை ராஜீய லக்ஷியங்களுக்காகப் போராடச்செய்தல், தேர்தல்களில் தலையிடுதல், தொழிலாளர் சங்கங்களைத் தகர்த்தல் இந்த மகத்தான வேலைகளில் அவன் ஈடுபட்டான்.

ஜெர்மனியில் ஹிட்லர் அதிகாரத்தைக் கைப்பற்றினார். ஜெர்மனியில் வேலை நிறுத்தம் செய்யவேண்டுமென்று மாஸ்கோவில் தொழிலாளர் ஆர்ப்பாட்டம் செய்தனர். இந்த நெருக்கடியை சமாளிக்க அவன் ஜெர்மனிக்குப் போனான்.

ஜெர்மனி பொதுவுடமை வாதிகளுக்கு தலைமை வகித்து ஹிட்லருக்கு விரோதம் செய்ய நியமித்திருந்த 'தேல்மான்' என்பவன் காரியங்களைச் சமாளிக்க முடியவில்லை. இவன்வந்து நிலைமையைக் காப்பாற்றினான். பல பொதுவுடமை வாதிகள் பலியாயினர். இருந்தாலும் ஒரு சக்தி வாய்ந்த ஸ்தாபனத்தை உண்டாக்கிவிட்ட பிறகே அவன் அங்கிருந்து வெளிவந்தான். இதற்கு வெகுமதியாக காமின்டர்னுக்கு வடபாகத் தலைவன் பதவி கிடைத்தது.

தன் ரகசிய இயக்கங்களில் துணை புரிவதற்காகவே எர்னஸ்ட் எக்ஸ் பல பெண்களை மணந்தான். முதலில் ஹாலந்து ஸ்தானிகர் காரியாலயத்தில் வேலை செய்துவந்த ஒரு பெண்ணை மணந்தான். அவள் மூலமாக அனுமதிப் பத்திரங்கள் பல கிடைத்தன.

அவன் தான் நினைத்த பெண்களை மணப்பதற்காக பல கொலைகளும் புரிய நேர்ந்தது. இரு பெண்கள் இவனை மணப்பதற்கு மறுத்தனர். அவர்கள் இருவரையும் ஜெர்மனிக்கு அனுப்பி வைத்தான். அவர்கள் கஸ்டாபோவின் நாஜி ரகசியப் படையின் கையில் அகப்பட்டு மாண்டனர்.

தன் விரோதிகளைக் கருணையில்லாமல் வெட்டி வீழ்த்துவது அவனுக்கு சர்வ சாதாரணம். பல வாலிபர்கள் இப்படி உயிர் துறந்தனர்.

அவன் செய்தவற்றிலெல்லாம் அற்புதமானது பாசிசத்திற்கு விரோதமாகக் கூட்டிய உலக மகாநாடு. அதில் நாற்பது நாடுகள் கலந்துகொண்டன. ஹென்ரி பார்போஸ், ரோமேன் ரோலந்து முதலிய பிரமுகர்களை இவன் சொன்னபடி கேட்க வைத்தான்.

எர்னஸ்ட் எக்ஸ் இன்றும் உயிருடன் இருக்கிறான். ஒரு அழகிய நார்வே தேசத்துப் பெண்ணுடன் சுகமாகக் காலங்கழிக்கிறான். அவனுடைய சொந்த அபிப்பிராயங்கள் வேறுபட்டாலும் கூட, தன் கட்சியின் நன்மைக்காக வெளிக்காட்டுவதில்லை. அவனுக்குக் கிடைக்கும் பணத்துக்குப் பதிலாக அவன் ஜனநாயகக் கட்சியை ஆதரிக்கிறான். மூன்றாவது சர்வதேச பொதுவுடைமை விசேஷ கூட்டத்தைப்பற்றி பெருமையாகக் கூறுகிறான். இன்று அவனுக்கு தொழிலாளர் நன்மையைப்பற்றிக் கவலையில்லை. உலகப் புரட்சியிலும் நம்பிக்கை போய்விட்டது. அவன்கூட இவ்வியக்கங்களைப் பற்றிப் பேசினாலும், தனி மனித முன்னேற்றத்தில்தான் நம்பிக்கையுள்ளவன். அவன் வாழ்க்கையைப்பற்றி அழகாகச்சித்திரித்தாலும், உண்மையில் அதை வெறுப்பவன் என்ற உண்மையை அவன் நண்பர்கள் நன்றாக அறிவார்கள். அவனுக்குக் கருணையே கிடையாது. அவன் நெஞ்சே கல் நெஞ்சு.

எர்னஸ்ட் எக்ஸ் குட்டையாகவும் கனமாகவும் இருப்பான். முகம் கடுகடு வென்று இருக்கும். இரும்புபோன்ற நெற்றியின்கீழ் மின்னும் கண்களில் வெள்ளை விழியே கிடையாது. கருவிழிகள் கண் நிறைந்திருக்கும்.

———

ஒரு பழம் தானே !

சி. சு. செல்லப்பா

1

(பிரசவத்தில் ஏற்பட்ட வியாதி அதிகமாகி, பல மாதங்களாக காமாக்ஷி படுத்த படுக்கையாக உயிரோடு போராடிக் கொண்டிருக்கிறாள். ஏதோ ஒரு சப்தம் அவள் அரை குறை தூக்கத்தைக் கலைத்து விடுகிறது. விழித்து சுற்று முற்றும் பார்க்கிறாள். அம்மா இல்லை.)

காமாக்ஷி :—அ ம் ம ா ! ...(பலக்க) அம்மா, அம்மா !

அம்மா :—போ, முழிச்சுண்டாச்சா. உயிரோடே வதைச்சுப்பிடு அம்மாவை !...காமு ! இரு வந்துட்டேன்......இன்னும் கொஞ்சம் தூங்கப்படாதோ அம்மா !

கா :—தூக்கம் வரல்லெம்மா. வாசல்லே என்னவோ சத்தம் கேட்டதே என்னம்மா அது ?

அ :—அதுவா ? மண்ணெண்ணெய் வண்டிக்காரன் 'லொடபட'ன்னு சத்தப்படுத்திண்டு போறான்.

கா :—அதை சொல்லல்லேம்மா. வேறே ஏதோ கத்திண்டுபோன சத்தம் கேட்டுதே அம்மா.

அ :—என்ன கேட்டுது வாசல்லே இருந்த எனக்கு கேட்காமே ?

கா :—இரும்மா ! கொஞ்சம் இரு. அதோ கேட்டியா ?

ந :—நாவப்பழம் ! நாவப்பழம் !

கா :—நாவப்பழம்னு சொல்றாப் போலெ இல்லெம்மா ?

அ :—நல்ல பிரமை உனக்கு, காமு ! நாவப்பழமா ? இப்போ ஏது அதுக்குக் காலம் ? அதை எங்கே நினைச்சுக்கிண்டே. பேசாமல் படுத்துக்கோ. கொஞ்சம் தூங்கு.

கா :—இல்லேம்மா, பொய்யா சொல்றேன் ? எவ்வளவு நன்னா என் காதிலே விழுந்ததே. இப்போ கத்துவான் பாரு.

ந :—நாவப்பழம் ! நாவப்பழம் !

கா :—பார்த்தியா அம்மா. என்னை ஏமாத்தப் பாக்கிறயே. உடம்பு இப்படி போச்சுன்னாலும் காது போகல்லேம்மா.

அ :—இல்லே காமு ! எதிராளாத்து பாட்டியோடே பேசிண்டு இருந்தேன். அந்த ஸ்வாரஸ்யத்திலே காதுலே விழல்லேம்மா. எனக்குத்தான் வரவர காது போயிடுத்து.

கா :—நான்தான் அம்மா, அப்போவே சொன்னேனே.

அ :—வித்து ரெண்டு காசு வந்து வயித்துப் பிழைப்பு நடக்கணும். கத்திட்டுப் போறான். யாரோ வாங்க காத்திண்டு இருக்கா இதை ? ஆமாம், மருந்து சாப்பிடுகிறவேளை வல்லியோ ? தரட்டுமா காமு ?

கா :—அம்மா......

அ :—என்ன, அம்மா ?

கா :—இல்லே......

அ :—என்ன இழுக்கிறே ? தெரியுமே எனக்கு !

கா :—நவாப்......

அ :—என்னது நாவப்பழமா ? உனக்கென்ன பைத்யமா ?...

ந :—நாவப்பழம் ! நாவப்பழம் !

கா :—அதோ கத்தறான் அம்மா, ஆசையா இருக்கு.

அ :—நல்ல ஆசையம்மா உனக்கு! முதல்லே உசிருமேலே ஆசை வச்சுக்கோ. அப்புறம் இருக்கட்டும் இந்த ஆசை......

(காமாக்ஷி மௌனமாக இருக்கிறாள்) ஒண்ணும் தின்னக் கூடாதுன்னு டாக்டர் உன்கிட்டவே எத்தனை தரம்சொல்லிருக்கார்? இதென்ன அதிசயச் சரக்கா, கிடைக்காத சாமானா? பிழைச்சுக் கிடந்தால் கூடை கூடையாகத் தின்கலாம். இப்போ உடம்புக்கு...

ந :—நாவப்பழம்! நாவப்பழம்!

அ :—......சனியன் பிடித்தவன். எதிரே எதிரே வந்து கத்திண்டு. தொலையமாட்டேன்கிறானே.

கா :—அம்மா! ஒண்ணே ஒண்ணு தானே கேக்கறேன். அதுக்கு மேலே...நாக்கெல்லாம்...

அ :—என்ன கஷ்டம் உன்னோடே காமு. நித்ய கண்டம் பூர்ண ஆயுசா இருக்கிற இந்த உடம்புலெ இதெல்லாம் சாப்பிடலாமா? நன்னா இல்லேன்னா கேளு. பிடிவாதம் பண்ணாதே.

கா :—நாக்கெல்லாம் உணந்து போயிருக்கும்மா...

அ :—அதுக்குத்தான் டாக்டர் பாட்டில், பாட்டிலா வாங்கிக் கொடுத்திருக்காரே. அதுதான் இருக்கே.

கா :—யாருக்கு வேணும்மா அது. கொண்டு போய் சாக்கடையிலே கொட்டு. இனிமே அதை சாப்பிடவே மாட்டேன்.

அ :—நீ என்ன சின்ன குழந்தையா காமு! வயசு பதினாறு, இதென்ன இப்படி? அண்ணாவுக்குத் தெரிஞ்சா?

கா :—அண்ணாவுக்கு எதுக்குத் தெரியணும்?

அ :—அட தெய்வமே! உனக்குத்தான் கண் இருக்கா? இப்படி ஒரு வருஷமா ஒரு உசிரைப் போட்டு பழி வாங்கறையே. குழந்தை ஒரு நல்ல சாமானை வாயிலே போட்டிருக்குமா? ஹூம்! (பெருமூச்சு விடுகிறாள்).

ந :—நாவப்பழம்! நாவப்பழம்!

கா :—அம்மா, ஒரு பழம், ஒண்ணும் பண்ணாது ..ஒண்ணே ஒண்ணு!

அ :—ஐயோ! காமு, ஏன் இப்படி சித்ரவதை பண்றே. விட்டுடேன். கேட்கமாட்டியா?

கா :—அண்ணா தூங்கிண்டுதானே இருக்கான். அவன் வரதுக்குள்ளே வாங்கித்தாயேன்.

அ :—அட, கண்றாவியே, இந்த கூத்தெல்லாம் பார்க்காமே கண்ணை மூடிண்டு போயிருக்கக் கூடாதா நான்!

கா :—சீக்கிரம் அம்மா! அவன் போயிடப் போறான். அதுக்கு மேலே நீ கொடுத்தாக்கூட தின்கல்லெ.

(பதிலில்லை. அம்மா பெருமூச்சு விடுகிறாள்).

கா :—என்னம்மா, பேசாமே இருக்கே. மாட்டியா?

அ :—அட, கஷ்டமே!

ந :—நாவப்பழம்! நாவப்பழம்!

கா :—அம்மா! அவன் போயிடப் போறானே!

அ :—சரி. உன் தலையெழுத்துப் போலெ இருக்கு போ. ஒரு பழம் என்ன செய்யப்போறுது. வெங்கட்டாரமண ஸ்வாமி! நீதான் பார்த்துக்கணும். (போகிறாள்)

ந :—நாவப்பழம்! நாவப்பழம்!

அ :—ஸ்......! சத்தம் போடாதே. சாமி தூங்கறாரு. நல்ல பழமா போடு. காய்ச்சக்கார அம்மாவுக்கு செங்காயா போட்டுடாதே.

(வாங்கிக் கொண்டு உள்ளே வருகிறாள்)

காமு! சீக்கிரம் தின்னுடு. அண்ணா முழுச்சுக்கிற சமயம் இந்தா...

(காமு ஒன்றை சுவைத்துக்கொண்டிருக்கிறாள். ஒரு தட்டை முன் வைத்துவிட்டு, அம்மா பக்கத்தில்

யில் சத்தம் கேட்கிறது).

அ :—(ஒதிய குரலில்) ஐயோ! காமு! ராமு வந்துட்டானே. பார்த்துட்டா புலியா வருவனே. போ, பார்த்துட்டான் போ...

ராமு :—(நுழைந்து) அம்மா, என்னது? காமாக்ஷி என்ன தின்கிருள்?

அ :—ஒண்ணுமில்லே. வா, காபி சாப்பிட. (எழுந்திருக்கிருள்).

ரா :—என்னது என்று கேட்டால் பதிலைக் காணேம். மறைப்பானேன்? சொல்றதை விட்டுட்டு.

பண்ணப்போறது? பிரமாத
படுத்தறையே.

ரா :—டாக்டர் படிச்சுப் படிச்
என்ன சொல்லி இருக்கார் தெ
யாதா உனக்கு?

அ :—நித்யம்தான் சொல்லிண்
இருக்கார். நாம் என்ன நித்யம
கொடுக்கிறேம்? ஒருநாள் ஒ
சுண்டைக்காய் பழம்.

கா :—அண்ணு, நான் தா
அம்மாவை வாங்கச் சொல்லி க
டாயப்படுத்தினேன்.



(காமு கொட்டையை துப்புகிருள்)

ரா :—(திடுக்கிட்டு) நவாப்பழமா! அம்மா!

அ :—ஆமாம். நாக்கு செத்துக்கிடக்குன்னு வாயைத் திறந்து கேட்டாள் குழந்தை. ஒரு பழம் வாங்கிக் கொடுத்தேன்.

ரா :—ஒரு பழம் போதுமா அம்மா, சிராங்காய்ப்பழம் வாங்கிக்கொடுக்கிறது தானே?

ரா :—டாக்டருக்குத் தெரிஞ்சால்

கா :—ஒரு பழம் தானே அண்ணு!

அ :—டாக்டர் இதை எல்லாம் கண்
கொண்டு இருக்காராக்கும்.
படபடப்புலே ஏதாவது......

ரா :—ஓஹோ! டாக்டருக்கு ந
சொல்லித்தான் தெரியணுமோ

அ:—அவள் தவிச்ச தவிப்பைப் ப
த்து இருந்தாயானல் நீ
கண்லே ஜலம் விட்டிருப்பே.

ரா:—என்னம்மா, ஒரு வருஷமா—

அ:—இதுவரை ஜாக்ரதைக்கு என்னடா குறைவு? பிரமாதம்?

ரா:—(ஆத்திரமாக) போனவாரம் அவன் பட்டபாடு ஞாபகம் இல்லியாம்மா?

அ:—ஆமாம்; ஒரு வருஷமா பூமிக்கும் எமலோகத்துக்குமா போராடற உசிரை காப்பாத்த முடியல்லே இந்த டாக்டராலே. தலைவிதிபோல இருக்கு. அவளோ பிழைக்கிறவளா தோணல்லே.

ரா:—இப்படி ஏதாவது செய்; அப்புறம் டாக்டர் மேலே புகார்!

அ:—(கோபமாக) என்னை மடக்கி அடிக்காதே. எங்களுக்கு முந்திப் பிறந்தவன் நீ. ரொம்பத் தெரியும் உனக்கு. அவளை பட்டினி போட்டே கொன்னுடுவேள்; நீங்கள் ஈவு இரக்கம் இல்லாத பாவிகள்!

ரா:—(ஆத்திரமாக) ஆமாம். நானும் டாக்டரும் பட்டினி போட்டுக் கொன்னுடுவோம். நீ விஷத்தைக் கொடுத்து கொன்னுடறேன் என்கிறையாக்கும்?

அ:—ராமு! நீ பேசாமல் போ.

கா:—அண்ணு! ஒரு பழம் நான் தின்னதுக்கா இந்த அமர்க்களம்?

ரா:—என்ன சொன்னுலும் உங்களுக்கு கொஞ்சம்கூட படப்போறதில்லெ. டாக்டர் பாடு, உங்கபாடு இனிமே. நான் தலையிடல்லெ. (வாசல் பக்கம் போகிருன்.)

அ:—காபி சாப்பிட்டுப் போயேன்டா!

கா:—அண்ணு கோபிச்சுண்டு போருனே அம்மா. அண்ணு! அண்ணு!

அ:—இனிமே அவன் கோபம் தணியவா? போ, எட்டு மணிக்கு வருவான். வரட்டும் போ. காபியை பிளாஸ்க்லெ கொட்டி வைக்கறேன். சரி நீ மருந்தை சாப்பிடு.

2

(எட்டு மணி சமயம். ராமு உள்ளே நுழைகிருன்.)

அ:—காமு! கண்ணை முழிச்சுப் பாரேன். டாக்டரே, நீங்கள்தான் கொஞ்சம் கூப்பிடுங்களேன்.

டா:—பதறுதேயுங்கோ அம்மா. ராமு எங்கே காணும்?

அ:—ஐந்து மணிக்கு வெளியே போனவனை இன்னும் காணுமே!

ரா:—என்னம்மா?

அ:—ராமு! வாடாப்பா! நீதான் கொஞ்சம் கூப்பிட்டுப் பாரேன். அவளுக்கு உசிரு வரதாக தோணல்வியே.

ரா:—டாக்டர் சார், கையைப் பார்த்தேளா? காமு! காமு!

டா:—உசிருக்கு ஒண்ணும் ஆபத்தில்லெம்மா. இல்லே, ராமு! திடீரென ரத்தவேகம் அதிகரிச்சிருக்கு. கொஞ்ச நோத்துலெ சரியாப் போயிடும். காமு அம்மா! (பதிலில்லை)

அ:—மீனுக்ஷி! உன்னைத்தான் நம்பி இருக்கேன். வெங்கட்டரமணு! என்ன செய்வேன்டா ராமு!

ரா:—டாக்டர்தான் ஆபத்தில்லென்னு சொல்ருரே. பயப்படாதே அம்மா. இதோ காமு அசையருள் பாரு. காமு! காமு!

கா:—ஐயோ அ...ம்ம!

அ:—என்னம்மா பண்றது?

கா:—தாகமா...

டா:—குளுகோஸ் கரைத்துக் கொண்டா, ராமு! என்னம்மா ஒரு மணி நோத்திலெ என்னையே பயமுறுத்திட்டையே. (ராமு குளுகோஸ் கொண்டு வருகிருன்) இந்தாம்மா குடி.

கா:—வேறே ஏதாவது தாங்கோளேன் மாமா.

டா:—வேறேயா? ஒண்ணும்கூடாது. இதைச் சாப்பிட்டுத்தான் ஆகணும். கையைக் காண்பி கொஞ்சம்.

கா :—என்ன சார், யோஜனை பண்றேள் ?

டா :—இல்லே ஜ்வரம் ஒரு வாரமா படிப்படியா குறைஞ்சு வருதே, இன்னிக்கி திடீரென அதிகம் ஆவானேன்னு யோஜனை பண்றேன்.

ரா :—என்ன காரணம் இருக்கும் அப்படி ?

டா :—(யோசித்து) குளிர்ச்சியான சாமான் எதாவது உடம்புலே சேர்ந்து இருக்குமோன்னு சந்தேகம். இல்லாவிட்டால் ஜ்வரம் ஏற காரணம்? ஏனம்மா நீங்க ஒண்ணும் கொடுக்கல்லியே ?

அ !—(திடுக்கிட்டு) நானா ? ஊஹூம் ! ஜலபானம், உசிருக்கு மன்றாடுகிறவளுக்கு உங்களைக் கேட்காமே கொடுப்போமா ?

ரா :—(தனக்குள்) என்ன பொய்! முழுப் பொய்!

(குனிந்த தலைநிமிரவே இல்லை).

டா :—பின்னே, காமு! நீதான் அவாளுக்குத் தெரியாமே எதாவது சாப்பிட்டுட்டியாம்மா?

கா :—(தயக்கத்துடன்) சாப்பிடுவேனா மாமா.

அ :—அவள் என்ன குழந்தையா டாக்டரே. என்னவோ கிரகச்சார வேளை. படவேண்டியதைப் பட்டு...

டா :—அதுக்கு இல்லேம்மா. குழந்தை அது கேக்கறது, இது கேக்கறதுன்னு சொல்லுவேளே, ஒரு வேளை மனசு இரங்கி......என்ன ராமு சார்! எங்கேயோ யோசனையா இருக்கேளே! நான் சொல்றது சரிதானே (சிரிக்கிறார்)

ராமு:—ஹூம்...(இழுக்கிறான். தலை நிமிரவே இல்லை)

அ :—அப்படியெல்லாம் இரக்கப்படுகிற கட்டை இது இல்லெ டாக்டரே!

டா :—(எழுந்து கொண்டே) அது போறது. இனிமேலாவது ஜாக்ரதையாக இருக்கணும். இப்படி வருவதே ஆபத்து ராமு! வரேளா மருந்து தரேன்.

ரா :—ஆகட்டும். (டாக்டர் போகிறார்)

அ:—(தயங்கி) பாட்டில் அந்த பீரோவிலே இருக்கு. எடுத்துண்டு போய்...

ரா:—(சீறி) ஆகட்டும். போய் வாங்கிண்டு வரேன். நாளைக்கும் எதாவது வாங்கிக் கொடு. (விறுட்டென்று பாட்டிலுடன் வாசலுக்குப் போகிறான்)

அ :—புத்தி வந்துதுடாப்பா. புத்தி வந்தது. போ. ஹூம்!

கா :—அம்மா, இனிமே, நான் ஒண்ணுமே கேக்கல்லே.

அ :—உன்னை சொல்றதுலே என்னடிம்மா தப்பு ? இத்தனை வயசானவளுக்கு இப்படி புத்தி போச்சு பாரு குழந்தை சொன்னதைக்கூட கேக்காமே. அதான் காலம்! (பெருமூச்சு விடுகிறாள்.)

சுதந்திர புருஷன்

(ஸரஸி)

யார் சுதந்திர புருஷன்? பல வருஷங்களுக்கு முன்னே சில நண்பர்களுக்குள் இதைப்பற்றி ஒரு சம்பாஷணை நடந்தது. சுதந்திரம் பணத்திலிருக்கிறது என்றார் ஒருவர். பலத்திலிருக்கிறது என்றார் மற்றொருவர். எக்காரியத்திற்கும் பிறர் கையை எதிர் பாராதிருப்பதிலேதான் இருக்கிறது அது என்றார் இன்னொருவர்.

இப்படியாக ஒவ்வொருவரும் என்னென்னவோ கூறியிருக்கிறார்கள். ஆயிரம் ரூபாயை லஞ்சம் வாங்கும் ஒருவனுக்குப் பணம் வருகிறது; சுதந்திரம் போய் விடுகிறது. அடிமை பணத்துக்கானுலென்ன? மனிதனுக்கானுலென்ன? இரண்டும் ஒன்றுதான். மனிதனுடைய சாதனங்களிலே, உடைமைகளிலே, உறவுகளிலே இல்லை சுதந்திரமும் அடிமைத் தனமும். மனிதனிடமே அவை இருக்கின்றன.

* * *

நம் விருப்பப்படி யெல்லாம் நடக்கும் உரிமையிலேதான் சுதந்திரம் இருக்கிறது. ஆனால், அப்படியெல்லாம் நடக்க ஆரம்பித்து விட்டோமானுல், சுதந்திரம் போய்விடுகிறது.

ஜன சமூக வாழ்விலே பின்னிக் கிடக்கும்போது, அலங்கோலச் சுதந்திரத்தை எதிர்பார்க்க முடியுமா? சுதந்திரம் ஒரு கண்கட்டு வித்தையா? கட்டுத்திட்ட வாழ்வுதான் சுதந்திரமோ? அவரைக்கொடி "எனக்கேன் வேலிபோட்டு என் சுதந்திரத்தை அடக்குகிறாய்?" என்று கேட்குமானுல், அதனை ஆடுதான் மேய்ந்துவிட்டுப் போய்விடும்.

* * *

பாடகனின் கையிலுள்ள வீணை, கீதத்தைப் பொழிகிறது. ஸப்த ஸ்வரங்களும் கூடி இசைகின்றன. ஸ்வரங்களெல்லாம் தலைவிரிகோலமாய்த் தன் தன் வழியிலே ஆர்ப்பரிக்குமானுல், சங்கீதத்தைக் காண முடியாது; கர்ணகடூரம்தான் விளையும் பலன்.

நிலமகளின் சுதந்திரம் பூகம்பத்திலில்லை. அந்தப் பூகம்பம் அவளது வியாதியைப் போக்கிக் கொள்ளவந்த சிகிச்சை யாகும். 'புரட்சி நீடூழி வாழ்க' என்று சிகிச்சையை வாழ்த்தி, வியாதியையுமா நாம் வாழ்த்துவது? நிலைகுலைந்து நிற்கும் ஒழுங்கீனத்தைப் போக்கவே புரட்சி. அந்த நோக்கத்தோடு அதில் கலப்பவன்தான் சுதந்திர புருஷன்.

சென்ற மகாயுத்தத்தின் ஆரம்பத்திலே பெல்ஜியம் தாக்கப்பட்டது. அதன் கோட்டை யொன்றிலே, ஜெர்மனியின் பயங்கர பூத பீரங்கிகள், குண்டுகளைக் கக்கின. கோட்டையை மிகச் சில வீரர்களைக் கொண்டே மகா தீரத்துடன் பல நாள் வரையில் காப்பாற்றினார் ஜெனரல் லீமான் என்ற பெல்ஜிய தளபதி.

என்றாலும், இறுதியிலே கோட்டை விழுந்துவிட்டது. ஜெர்மன் தளபதி, ஜயசீலராய்க் கோட்டைக்குள் புகுந்தார். சில தினங்களுக்கு முன்னே, கம்பீர மதிலும் கோட்டையும் கொத்தளமுமாய் அழகுடன் பொலிந்த அந்தக் கட்டிடம் நாசமாகி, பாழுங் கற்குவியலும் உடைந்த இரும்பு உத்திரங்களும் ரத்தக்களரியுமாய்க் கிடந்த கோரக் காட்சியைக் கண்டு வியந்தார். அது பெல்ஜிய வீரரின் வீர சின்னமல்லவா?

ஜெர்மன் தளபதி ,அந்தப் பாழும் கோட்டையைச் சுற்றி வரும் போது, பூதாகாரமான இரும்புத் தூண் ஒன்றின் கீழே, பிரக்ஞையிழந்து அலங்கோலமாய்த் தளபதி உடையுடன் கிடந்த ஒருவரைக் கண்டார். அவர்தான் லீமான்.

அவருடைய ஸ்மரணை தெளிந்தபோது, தாம் ஜெர்மனி தளபதியின் கைதியாயிருக்கக் கண்டார். மூர்ச்சை தெளிந்தவுடனே முதன் முதலிலே அவர் சொன்ன வார்த்தைகள் என்ன தெரியுமோ? “என் ஸ்மரணையிலிருந்த வரையில் நான் போர் புரிந்தேன்; ஸ்மரணையிழந்து கீழே கிடந்த என் உடல்தான் கைதியாயிற்று—இதை மட்டில் உங்கள் அறிக்கையில் குறிப்பிட மறந்துவிடாதீர்கள்” என்று சொல்லி, தமது உடைவாளை எடுத்து, ஜெர்மன் தளபதியிடம் கொடுக்க வந்தார்.

அதை வாங்கிக்கொள்ள ஜெர்மன் தளபதிக்கு மனம் வரவில்லை. “பாதகமில்லை; அது உங்களிடமேதான் இருக்கவேண்டும்” என்று சொல்லிவிட்டார். ஏன்? உண்மையில் தளபதி லீமான் கைதியல்ல; இன்னும் அவர் சுதந்திர புருஷனேயாவார்.





மார்க்கோனி

(வே. மா.)

எடிஸனைப் பற்றிப் பிரஸ்தாபிக்கையில், பிரகிருதி தான் காமதேனு என்றோம். பிருகிருதிக்கு மாயா என்ற பெயர் வெகு காலமாக இருந்து வருகிறது. ஆதலால் இந்த மார்க்கோனியை ஒரு மாயாவி என்றழைப்பதில் எவ்விதப் பொருத்தக் குறைவுமில்லை.

ரேடியோ அற்புதத்தை இவ்வுலகத்தில் நிலைநாட்டினவர் மார்க்கோனி தான். ஆயினும், இந்த அற்புதம் இந்த உலகத்துடனேயா நிற்கப்போகிறது? நாளடைவில் சகல அண்டங்களையும் ஒன்றோடொன்று சம்பாஷணை செய்யும்படி செய்யப்போகிறது, இந்த ரேடியோ! மனித வர்க்கத்தில் அநேக மூளைகள் பாடுபட்டால், அந்த சம்பவங்கள் விரைவில் நடைபெற முடியும். இந்தியாவில் இருந்துவரும் 36கோடி மூளைகளில் பாடுபடும் மூளைகள் ஒருவரையொருவர் திட்டிக் கொள்வதில் ஈடுபட்டிருந்தால், உண்மையான முன்னேற்றம் ஒருநாளும் ஏற்படப் போவதில்லை.

ஆகாயத்தின் அதிபதியாகிய மாயாவி மார்க்கோனியின் மோஹன சரித்திரத்தின் திவ்யமான வாஸனையைச் சற்று முகரப் புறப்படுவோம்.

அவர் 25-4-1874ல் இத்தாலி தேசத்தில் பிறந்தார். அவருடைய தந்தையின் பெயர் ஜோஸப் மார்க்கோனி. அவருடைய தாயார் அன்னி ஜேமிஸன். தாயார் ஒரு ஐரிஷ் மாது. சங்கீத வாத்தியாராக அவள் இருந்தபோது, அவளை ஜோஸப் கண்டார். அவருடைய மனைவி இறந்து விட்ட சமயம். இந்த மாதை இளைய தாரமாக மணந்துகொண்டார். இவர்களுக்கு இரண்டாவது மகன் தான் கூக்ஸியெல்மோ மார்க்கோனி.

உலக விவகாரங்களில் ஜோஸப் நல்ல கெட்டிக்காரர். ஒரு உதாரணம் :—

ஒரு மாதாகோவில் கட்டிடம் கட்டவேண்டும் என்று ஒரு சங்கத்தை ஏற்படுத்திக்கொண்டு, நன்கொடை பெறுவதற்கு, சங்கத்தின் நிர்வாகஸ்தர்கள் இவரிடம் வந்தார்கள். காரியம் நடைபெறாது என்பது இவருக்குத் தெரியும். பணம் கொடுத்தால், பணம் கைவிட்டுப்போவதுடன், அது வீணாகவும் போய்விடும். பணம் கொடுக்க மறுத்தால், இவருடைய பெயரும் கெட்டுவிடும். ஆகையால் "பேஷாக நடத்துங்கள். மாதா கோயில் உச்சியில் நிற்க வேண்டிய சிலுவைச் செலவு முழுதும் என்னைச் சேர்ந்தது. அது எவ்வளவானாலும் சரி" என்று சொல்லி, அந்த கோஷ்டியைத் தாட்டிவிட்டார்!

பையன் மார்க்கோனி பௌதிக சாஸ்திரப் படிப்பிலேயே பூரண கவனத்தையும் செலவழித்து வந்தான்.

1894 (இவனுக்கு வயது 20) கோடைகாலத்தில் ஆல்ப்ஸ் மலையில் குடும்பத்துடன் இவன் வாசம்

செய்து வந்தான். ஒரு இரவு மார்க் கோனிக்கு நித்திரை வரவேயில்லை. ஹெர்ட்ஸ் என்ற ஒரு நிபுணர் கம்பி யில்லாத தந்தியின் ரகசியத்தை எட்டிப்பிடிக்கும் நிலைமைக்கு வந் திருந்தார். அந்த சமயத்தில் அவர் மாண்டு போனார். அவருடைய ஆராய்ச்சிகளையும், அவர் வேலையை முடிப்பதற்குள் அவர் மாண்டு போனதையும், அன்றிரவு, மார்க் கோனி சிந்திக்கலானான். அவர் அவ் விதம் இறந்து போனது, இவனுக்கு மனதாகவில்லை. ஒரு குறை மாதக் குழந்தையை விட்டுவிட்டு, ஒரு தாயார் இறந்து போனதுபோல், மார்க்கோனி வியாகூலம் கொண் டான்.

நித்திரை வரவில்லை. நித்திரைக்கு பதிலாக ஒரு நம்பிக்கை வந்து புகுந்துகொண்டது. "வாஸ்தவத்தி லேயே, உலகத்திற்கு கம்பியில்லாத் தந்தியைக்காட்டி விடலாம், நிலைநாட்டி விடலாம். ஹெர்ட்ஸின் பாடு வெறும் கனவாகப் போய் விடாது. நிஜ உலகத்தில் நிஜமாக நர்த்தனமிடச் செய்துவிடலாம்" என்ற நிச்சயம் அவனுடைய மனதில் அன்றிரவே ஊன்றிக் கொண்டு விட் டது. அதன் பிறகுதான் தூங்கினான்.

மலையிலிருந்த. வரைக்கும் மனதி லேயே அந்த யோசனையைப் புரட் டிப் புரட்டி, கற்பனை செய்துகொண் டிருந்தான். கோடைகாலம் தீர்ந்து, கிராமத்திற்கு வந்ததும், ஆராய்ச்சி யும் பரிசோதனையும் செய்யப் புகுந் தான். தாயாரைக் கேட்டு, மேல் மெத்தையிலுள்ள இரண்டு அறை களையும் தனது பிரத்தியேக உப யோகத்திற்காக ஒதுக்கி வைத்துக் கொண்டான்.

அந்தரங்க மூலையில் இந்திரசித் தன் நிகும்பலை யாகம் செய்ததுபோல் —இவன் மேல்மெத்தையைப் பூட்டி வைத்துக் கொண்டு—ஆராய்ச்சி களைச் செய்தான். மெத்தையில் நடுநிசி வரைக்கும் விளக்கெரிந்த வண்ணம்தான். தாயாருக்கு அந்த மெத்தை விளக்கே தான் ஞாபகம். மனம் கேளாமல், அவள் மெத்தைக் குச் சென்று கதவைத் தட்டுவாள்.

ஒரு பிரபுவின் புத்திரனாகிய இந் தப் பையன், சீரிழந்தவனாய் அலங் கோலமாய் வந்து, கதவைத் திறப் பான். தாயைக் கையைப் பிடித்து உள்ளே கூட்டிப்போய் தனது மின் சார பேட்டரிகளையும், தனது கை களைக்கொண்டு தானே தயாரித்த கருவி வரிசைகளையும், அவிழ்க்க முடியாத சிக்கலில் கிடப்பதுபோல் காணப்படும் கம்பிகளையும், சுருள் களையும், பிரியத்துடன் தாயாருக்குக் காண்பிப்பான். அவள், "இதெல் லாம் சரி, நீ தூங்கவேண்டாமா?" என்பாள். அதற்கு அவன், "அம்மா, எனக்குச் சிரமம் தோன்றின் நிமி ஷத்தில், நான் தூங்கப்போய் விடு வேன்" என்று உறுதி கூறி ஆறுதல் அளிப்பான்.

தாயார்தான் உள்ளே வரலாம். வேறு ஒருவருக்கும் உள்ளே வருவ தற்கு அனுமதி கிடையாது. அழுக் கையும் குப்பையையும் கூட்டுவதற்கு, வேலைக்காரரை அப்போதைக்கு மாத் திரம் அனுமதிப்பான். ஒரு நாள் ஜோஸப், தம் மனைவியைப் பார்த்து, "முற்றுகை நடத்துகிறானே என்ன உன் பையன்? ஆள் ஒருவரையும் உள்ளே விடுவதில்லை. என்னிடமும் விவரம் எதையும் சொல்லுவது கிடை யாது. என்னதான் செய்துகொண் டிருக்கிறான்?" என்று கேட்டார்.

அதற்கு அன்னி கணவன் உட் கார்ந்திருந்த நாற்காலியின் கையிலே யே உட்கார்ந்து கொண்டு, புத்திர வாத்ஸல்யம் பெருகப்பெருக, கண வனுக்குச் சிறந்த புத்திரன் என்ற பிரசாதத்தைக் கொடுக்கும் பெருமை யுடனும், பிரேமையுடனும்—"ககன மார்க்கத்தில் ஒரு இடத்திலிருந்து வெவ்வேறு இடங்களுக்கு குறிகளை

அனுப்பலாம், குரல்களையே அனுப்ப முடியும் என்று உறுதிகொண்டு, பையன் பல பரிசோதனைகளைச் செய்து வருகிறான்" என்றாள்.

பெரியவர், நம்பிக்கை கொள்ளாதவராய், புருவங்களை சுருக்கிக்கொண்டு, "கூத்திலே கோமாளியாவது, காற்றிலே குரல்களாவது" —என்று சொல்லிவிட்டு, மேலே எதையோ அதே தினுசில் சொல்லப் போகும்போது, அழகிய அன்னியின் கண்களில், சிறிய மார்க்கோனி ஏற்றி வைத்திருந்த பெரிய நம்பிக்கையின் ஜோதியைக் கண்ணுற்றார். அதன்பேரில், பேச்சின் முறையை மாற்றிக்கொண்டு, "அதெல்லாம் சரி. ஆனால், தந்தையின் கண்கள் எப்போதாவது குழந்தையைக் கண்டால்தானே கண்ணைப் படைத்ததும் குழந்தையைப் படைத்ததும் வீண் போகாது" என்று புத்திர தரிசனத்திற்குப் பிரார்த்தனை செய்திடலானார். அந்தப் பிரார்த்தனையை தாயாரிடம் தந்தை செய்துகொண்டார். அந்தத் தாயார்தான், நமது மார்க்கோனியின் முதல் மாணவி.

தாயாரைத் தவிர வேறு எவரிடத்திலும் தனது ரகஸ்யங்களை மார்க்கோனி சொல்லமாட்டான். மற்றவர்கள் ஒருக்கால் கேலி செய்யலாம், அல்லது அனுதாபமற்றிருக்கலாம்.

தான் உபயோகித்த கருவிகளைப் பெரும் பாகம் தானே தனது கையாலேயே செய்திட்டான். நேரத்தை அவன் கட்டி யழுவதில்லை. பரிசோதனைகளைச் செய்த வண்ணமாயிருந்தான். நேரம் என்னவானாலும், எடுத்த பரிசோதனை முற்றுப்பெற வேண்டும். எவ்வளவோ பரிசோதனைகள் பயன்தாராமலேயே முற்றுப்பெற்றன.

ஆயினும் அவைகள் முற்றிலும் வீண் என நினைத்துவிடக் கூடாது. பரப்பிரும்மத்தை வர்ணிக்கும்போது, உபநிஷத்துக்கள், "இது அல்ல," "இது அல்ல" என்று விஷயத்தை தெளிவு படுத்தி, உண்மைக்கருகில் நம்மைக் கொண்டு போவது போலவே — அந்த பயன்தராத பரிசோதனைகள், "வழி இதல்ல" "இதல்ல வழி," என்று தெளிவு படுத்திக்கொண்டு, உண்மை வழியைக் கண்டு கொள்வதற்கு உதவி வந்தன.

"இதல்ல, இதல்ல" வென்றே சொல்லிக்கொண்டிருக்கிறது!— என்று ஒருவன் பொறுமையை இழந்து, பிடித்த சங்கற்பத்தைக் கலைத்து, உபநிஷத்தை உதாசீனம் செய்வானானால், அவனுக்கு பிர்ம தரிசனம் எங்கு உண்டாகப்போகிறது? அதுபோலவே, பரிசோதனை மார்க்கத்தில் தளர்ச்சியே அடையாமல் தபஸ்வியாக ஈடுபட்டால், பலன் உண்டு; அது இல்லையேல் பயனுமில்லை.

1894-ல் கோடைகால முடிவில் ஆரம்பித்து, ஒரே மூச்சாகப் பரிசோதனை செய்து வந்ததில்— 1895-ல் டிஸம்பர் மாதத்தில்தான், மின்சார அலையை வீசும் பிரச்னையில், முதன்முதலாக வெற்றி மார்க்கோனிக்குக் கிடைத்தது.

குளிர் மாதங்களில், மார்க்கோனி குடும்பம் கிராமத்தில் தங்குவது கிடையாது. குளிர்ச்சி மட்டாயிருக்கும் ஒரு இடத்திற்குச் சென்று, அந்த மாதங்களைக் கழிப்பது வழக்கம். மார்க்கோனி வேலையை நடுவாந்தரத்தில் விட்டுவிட்டு வரமுடியாதென்று உறுதியாய்ச் சொல்லி விட்டான். இவனுடைய நெருப்பு போன்ற பக்தியே போதுமான சூட்டைக் கொடுத்து, குளிரை வெருட்டக் கூடியதாக இருந்தது.

இவனுடைய முயற்சியில் தாயின் பக்தியும் அபாரமானதால், அவள் குளிரானாலும் கிராமத்திலேயே தங்குவதாகத் தீர்மானித்து விட்டாள்.

ஒவ்வொரு இரவிலும், அந்த மெத்தை விளக்கிலேயே இவளுடைய கவனம். குழந்தை ஞாபகம் தான். இடையிடையே சென்று, படிக்கட்டுகளை ஏறி, கதவைத் தட்டி, பையனைப் பார்த்துவிட்டு வருவாள். சில வேளைகளில், இவள் போகும் போது சமையல்காரியும் தட்டுகளில் சாப்பாட்டை எடுத்துக்கொண்டு வருவாள். மார்க்கோனி, அன்றைக்கு சாப்பாட்டு நேரத்தையே மறந்து, வேலையில் மூழ்கி விழுந்திருப்பான்.

1895-ல் டிஸம்பரில் ஒரு இரவில் சீக்கிரம் தூங்கப் போய் விடுவதாக மார்க்கோனி தாயினிடம் வாக்குக் கொடுத்திருந்தான். அந்த உறுதியின் பேரில், மெத்தை விளக்கை மறந்து, கவலையற்று, தாயார் நித்திரையில் மூழ்கிவிட்டாள். அதன் நடுவில், ஒரு கை வந்து, அவளுடைய தோள்களைப் பிடித்து அசைத்து, இவளை எழுப்பிற்று. கையில் ஒரு மெழுகு வர்த்தியை வைத்துக்கொண்டு, இவளுடைய படுக்கையண்டை, கூகீலியேல்மோ நின்றான்.

வழக்கமாகவே உறுதியாகவுள்ள அவனுடைய வாய் இன்னமும் உறுதியாக இருந்தது. அவனுடைய கம்பீரமான நெற்றியின்மீது, அலைமோதும் பழுப்பு நிறமுள்ள கேசவர்க்கம், வழக்கத்தைக் காட்டிலும் மீறிய அலங்கோலத்துடன் இருந்தது.

"வாருங்கள், அம்மா நான் உங்களுக்கு காண்பிக்கிறேன்" என்றான். அவள் உடனே அறிந்துகொண்டாள். வியாக்கியானம் அவளுக்குத் தேவையில்லை. ஒரு கவுனைப் போர்த்திக்கொண்டு, பையனுடைய கைக்குள் தனது கையை நுழைத்துக் கொண்டு, இருவருமாக படிக்கட்டுகளை ஏறிச் சென்றார்கள். அறைக்குள் நுழைந்தார்கள்.

கருவி வரிசையின் மேலே பல கம்பிகள் இணைக்கப்பட்டு பின்னப்பட்டு நின்றன. கமான் வழியே பார்த்தபோது, எட்டிய அறையில் 'பாட்டெரி' களும் துத்தநாகக் கோல்களும், கம்பிச் சுருள்களும் ஒரு நெருங்கிய கும்பலாக இருந்தன.

முதல் அறையில் இவர்கள் நின்றுகொண்டிருந்த இடத்திற்குப் பக்கத்தில், ஒரு சிறிய மேஜை இருந்தது. அதன்மீது ஒரு சாவி.

"கவனித்துக் கேளுங்கள் அம்மா" என்றான் பையன். அந்தச் சாவியை அழுத்தினான்.

எட்டிய அறையின் ஓரத்திலிருந்து ஒரு ஜங்கார சத்தம் வந்தது. மின்சாரமணி ஒலித்து விட்டது. "இது மகத்தான அற்புதம்," என்றாள் தாயார்.

தாயின் தோளில் ஒரு கையைப் போட்டுக்கொண்டு, அவளுடைய படுக்கையண்டை அவளைத் திருப்பிக் கொண்டுபோய் விட்டான். ஒரு மின்சார அற்புதமே நிகழ்ந்து விட்டது. ஒருமணி அடிக்கும்படி அவன் செய்து விட்டான், ஜயித்து விட்டான். வீசப்பட்ட மின்சார அலை, ஆகாயமார்க்கத்தில் 30 அடி தூரத்தைக் குதித்துக் கடந்து விட்டது!

வருங்காலத்தில், உலகமே அறியாத மாதிரியில், இங்கிலாந்துக்கும் பிரான்சுக்கும் இடையிலேயுள்ள 36 மைல் அகலமுள்ள சமுத்திரத்தை, செய்திகள் தாண்டிச் செல்லும்படி, மார்க்கோனி செய்வித்தான்.

அதற்குப் பின்னிட்டு, அகண்டமான 1700 மைல் அகலமுள்ள அட்லாண்டிக் மஹா சமுத்திரத்தையே, மின்சார அலை ஒரே தாண்டில் தாண்டிக் குதிக்கும்படி செய்து விட்டான்.

அந்த 36 மைல் தாண்டும், அந்த 1700 மைல் தாண்டும், உலகத்தின் முகத்தையே மாற்றிய, மஹத்தான அதிர்ச்சிகளைக் கொடுக்கக் கூடிய

பராக்கிரமங்களாக இருந்தபோதிலும்—மார்க்கோனி சம்பந்தப்பட்ட மட்டில்—தனது தாயாருடைய திருச்சந்நிதானத்தில் நடந்த அந்தச் சின்னஞ் சிறிய 30 அடி தாண்டல், அதற்கெல்லாம் மீறிய மயிர்க்கூச்சலை தந்திட்டதென்பது நிச்சயம்.

ஜோஸப் மார்க்கோனி, புத்திரனுடைய ஜயத்திற்கு பூரித்தான். உற்சாகம் எற்படவில்லை.

“ஒரு மணியை எத்தனையோ விதத்தில் அடிக்கலாம். நமது பையன் அதை ஒரு புதிய வழியில் அடிக்கக் கற்றுக் கொண்டிருக்கிறான் போலிருக்கிறது” என்றார்.

ஆயினும், அந்த மின்சாரமணி உலகத்தையே வேறுமார்க்கத்தில் திருப்பிவிடும் பிரபாவத்தைப் படைத்த மணி, என்பதில் சற்றும் சந்தேகமில்லை.

வேலைக்குப் புதிசு.

முனியனுக்கு ரேஸ் குதிரைகளின் லாயத்தில் ஒரு வேலை கிடைத்தது. அவன் அந்த வேலைக்குப் புதிசு. எஜமானர் வந்தார். முனியனைப் பார்த்து, “போய் இந்தக் குதிரைகளுக்கெல்லாம் அந்த ஏரியில் தண்ணீர் காட்டிவா” என்றார்.

முனியன் குதிரைகளை ஓட்டிப்போனான். அவன் திரும்பி வந்ததும், “குதிரைகள் தண்ணீர் குடித்தனவா?” என்று கேட்டார் எஜமானன்.

“குடிச்சுதுங்க எஜமான். ஆனால் ஏரியிலே ஜலம் மீந்துடுச்சுங்க” என்றான்.

* * *

ஒரு சிறு திருத்தம்.

“உமது மனைவி பெரிய குடும்பத்திலிருந்து வந்திருக்கிறாள் என்று நினைக்கிறேன்.”

“இல்லை; பெரிய குடும்பத்துடன் வந்திருக்கிறாள்.”

* * *

எச்சரிக்கை!

தாய் மீன் குட்டிகளைப் பார்த்து :—குட்டிகளே! மழை பெய்யறது. ஜலத்துக்கு வெளியே தலையை நீட்டாதீர்கள். ஜலதோஷம் பிடிச்சுக்கும்.

* * *

நாடக முடிவு

" ரஞ்சனன் "

எல்லோருடைய மனமும் 'திக்- திக்' கென்று அடித்துக் கொண்டது. அவர் முகத்தையே எல்லோரும் பார்த்துக்கொண்டு மரமாய், உணர்ச்சி இழந்து நின்றார்கள்.

கட்டிலின்மேல் கல்யாணி படுத்துக்கொண்டிருந்தாள். அவர்கள் செல்லமாய் வளர்த்த குழந்தை கல்யாணி. அவளைச் சுற்றி எல்லோரும் நின்றுகொண்டு மூச்சு விடாமல் டாக்டர் முகத்தையே பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

விடியற்காலை விழித்தெழும் இடத்திற்கும், அஸ்தகிரியின் அடிவாரத்திற்குமாக ஊசலாடிக் கொண்டிருந்த அவர்களுடைய உணர்ச்சிகளுக்கு, ஒரு சாந்தியைக் கொடுத்தார் டாக்டர். 'அவ்வளவு மோசமில்லை' என்று அவருடைய உதடுகள் முணுமுணுத்தன.

வெள்ளத்தில் போகிறவனுக்குத் துரும்பு அகப்பட்டதுபோல், எல்லோரும் ஒரு பெரு மூச்சு விட்டார்கள். மனத்திலிருந்த பெரிய பாராங்கல்லை இறக்கி வைத்ததுபோல், அருகிலிருந்த நாற்காலியில் போய் சாய்ந்தான் ஜெயராமன்.

அவன் புது மாப்பிள்ளை. எல்லோருடனும் போய் தன் மனைவியிடம் நின்று கொண்டு அவளை பார்க்க பயம்! வெட்கம் ஒரு பக்கம்.

அதோடு, தான் ஊருக்குப் புறப்படலாம் என்ற ஆசை கொஞ்சம் கொஞ்சமாக அவனுக்கு வந்து கொண்டிருந்தது. அவனுடைய கலாசாலை மாணவர்களெல்லாம் சேர்ந்து போடும் டிராமாவில் அவனுக்கு முக்கியமான பாகம். அவன்தான் கதா நாயகன். அதெல்லாவற்றையும் விட முக்கியமான விஷயம், அந்த நாடகம் அந்த ஜில்லாக் கலெக்டர் ஜான்ஸ்டன் ஐ. சி. எஸ். முன்னிலையில் நடக்க இருந்தது.

ஜில்லா கலெக்டர், இளைஞர் முன்னேற்றத்தில் அபார நம்பிக்கைக் கொண்டு ஊக்கம் செலுத்தி வந்தார். கலாசாலை நாடக கோஷ்டி, சாரண இயக்கம், கிராம முன்னேற்ற சங்கங்கள் எல்லாவற்றிலும் அவர் காண்பித்த ஊக்கம் இவ்வளவு அவ்வளவென்று சொல்ல முடியாது.

ஜான்ஸ்டனின் தயவைப் பெற்றுக்கொண்ட ஜெயராமன், சர்க்கார் உதவிச் சம்பளம் பெற்றுக் கொள்வது, பி. ஏ. பாஸ் செய்வது, ஒரு ரெவின்யூ இன்ஸ்பெக்டர் உத்தியோகம், பிறகு தாசில்தார்...மேன்மேலான கனவு... இதுதான் தகப்பனாரின் நினைவு.

ஜெயராமன் நல்ல அழகு. இனிய குரல். அதோடுகூட நன்றாக நடிக்கும் சக்தியும் சேர்ந்திருந்தது. எனவே எல்லோருக்கும் அவன் அபிமானப் புத்திரன். கலாசாலை உபாத்தியாயர்களுக்கெல்லாம் அவன்மேல் உயிர். அதற்கேற்றாற்போல, படிப்பிலும் அவன் அவ்வளவு மோசமில்லை. பணக்காரர் வீட்டுக் குழந்தையிடம் அதற்குமேல், உபாத்தியார்களும் எதிர்பார்க்கவில்லை!

எனவே புதிய ஜில்லா கலெக்டர் வந்து வேலை ஒப்புக்கொண்டவுடனே, பலவிதமான வதந்திகள் பறந்தன.

அவருக்கு நாடகங்களைக் கண்டால் பிடிக்குமென்று அவருடைய பட்லர் சொன்னதை வைத்துக்கொண்டு, ஆரம்பப் பள்ளிக்கூட வாத்தியார்கள், சிறு பிள்ளைகளை அபிநயத்தோடு பாட்டுப் பாடுவதற்குச் சொல்லிக்கொடுத்தார்கள்.

அந்த ஜில்லாவிலுள்ள ஹைஸ்கூல்களிலும் காலேஜிலும் நாடகச் சபைகள் ஏற்படுத்தப்பட்டன! இன்னும் ஒன்றிரண்டு விஷயங்களில் கலெக்டர் கவனத்தைச் செலுத்தினர் என்பது சின்னசாமி போன்றவர்களுடைய முன்னேற்றத்திலிருந்து தெரிந்தது.

அந்தப் புத்துயிரில் பிறந்த உணர்ச்சி வேகந்தான், ஜெயராமன் இன்டர்மீடியேட் படித்துக்கொண்டிருந்த கலாசாலையையும் தாக்கியது. அந்தப் பள்ளிக்கூடத்தில் படித்துக்கொண்டிருந்தவர்களில் யாருக்கு நடிப்பு முக்கியத்துவம் கொடுப்பது என்ற கேள்வியே, ஜெயராமன் இருக்கும் வரையில் உண்டாகவேண்டிய அவசியமில்லை.

அடுத்த மாதத்துக் கலெக்டர் முகாமை ஒட்டி அந்தக் கலாசாலை நாடகத்திற்கான ஏற்பாடுகள் வெகு தடபுடலாய் நடந்துகொண்டிருந்தன. அவரவர்கள் பாகத்தை அவரவர்கள் மனப்பாடம் செய்துகொண்டிருந்தனர். ஜெயராமனைப் பற்றிய கவலை ஒருவருக்குமே இல்லை. அவன்தான் ஒரு நிமிஷத்தில் எல்லாவற்றையும் உருப்போட்டுவிடுவானே!

இப்படி நிச்சிந்தையாக இருந்த பிரின்ஸ்பால் தலையில் இடி விழுந்த மாதிரி ஒரு செய்தி வந்தது. ஜெயராமனுக்குப் புதிதாகக் கல்யாணமான இடத்தில், அந்தப் பெண்ணுக்கு ரொம்பவும் அபாயகரமான ஜுரம் வந்திருப்பதாகவும், ஜெயராமனை அங்கே உடனே அனுப்பவேண்டுமென்றும் தந்தி வந்திருந்தது.

அவர் இடிந்தே உட்கார்ந்து போனார். ஜெயராமன் பாகம் என்ன சிறியதா, வேறு ஒருவனுக்குத் 'தூக்கிக்கொடுத்துவிடலாம் என்பதற்கு! கொடுத்தாலும் அவனைப்போல வேறொரு பையன் நடிக்க முடியுமா?' இப்படியெல்லாம் அவருடைய மனம் குழம்பியது.

ஜெயராமனது உணர்ச்சிகள் ஒரு தனி முறையில் ஓடிக்கொண்டிருந்தன. அவனுக்கு ஒரே பயம்! இவ்வளவு காலம் கல்யாணமே வேண்டாம் வேண்டாமென்று மழுப்பிக்கொண்டிருந்தவன், தன் மனதிற்கேற்றது போல் எல்லாம் அமைந்த உடனே, "சரி, சரி" என்று

தலையை ஆட்டி சம்மதத்தைத் தெரிவித்தான். பெண் ரொம்ப அழகு என்று எல்லோருடைய அபிப்பிராயமும்.

* * *

டாக்டர் சொன்னதில் ஜெயராமனுக்கு மகா சந்தோஷம். மனைவியின் கவலை ஒரு பக்கம் தீர்ந்த உடனே தனது கலாசாலை நாடகத்தினுடைய ஞாபகம் வந்தது. வரப்போகும் இரண்டு மூன்று நாட்களில் அவளுக்கு உடம்பு சரியாகப்போய்விட்டால், அவன் ஊருக்குப் போவதற்குத் தடையே இருக்காது. பெயர், புகழ், ஜில்லாக் கலெக்டரின் ஆதரவு.........

அன்று சாயங்காலம் ஒரு எதிர்பாராத சம்பவம் நடந்தது. பிரதோஷம். 'கோவில் பக்கம் போயிட்டு வரேன். குழந்தையைப் பார்த்துக் கொள்ளுங்கோ' என்று மாடிமேல் உட்கார்ந்

திருந்த மாமனாரிடம் சொல்லி விட்டுப் போய்விட்டாள் மாமியார்.

அவரும் 'ஆகட்டும், என்று சொல்லிவிட்டு ஏதோ எழுதிக் கொண்டிருந்தார். ஜெயராமன் இந்த சமயத்தைப் பயன் படுத்திக்கொண்டான்.

ஜெயராமனைப் பார்த்ததும் அவளுக்கு ஆச்சரியம் கலந்த பய உண்டாயிற்று. முதல் தடவையாக அவள் தன்னுடைய க வனைத் தனியாகப் பார்த்தா படுக்கையைவிட்டு எழுந்திரு முடியவில்லை அவளால். என சொல்லமுடியாத வெட்க கைகளால் முகத்தை மூடி கொண்டாள்.

ஜெயராமன், "அலமு!" எ ன்றான். அவன் குரலிலும் வெ கம் பிரதிபலித்தது.

"நான் அவசரமாக ஊருக்கு போகவேண்டும். உடம்

ஜாக்ரதையாகப் பார்த்துக்கொள் கிறாயா? காரியம் ஆனதும் இங்கே ஓடிவந்துவிடுகிறேன்" என்றான் அன்பு நிறைந்த குரலில்.

அவள் அதற்கு பதில் சொல்லவில்லை. மூடியிருந்த கையை எடுக்கவுமில்லை. மாமா மாடியிலிருந்து இறங்கிவரும் சத்தம் கேட்டதும், "போய்வருகிறேன்" என்று சொல்லி அவளுடைய கைகளின்மேல் ஒரு தட்டுத்தட்டி விட்டு வெளியே போய்விட்டான்.

மறுநாள் சாயங்காலம் அவன் ஊருக்குப் புறப்பட்டபோது, எல்லாவற்றையும்விட, அவன் தன்னுடைய அலமுவிடம் சொல்லிக்கொள்ள நேற்று வாய்த்த சமயத்தைப் பற்றியே நினைத்துக் கொண்டிருந்தான். அதில்தான் அவனுக்குத் திருப்தி!

* * *

பள்ளிக்கூடத்தில் நாடக தினம். ஏக அமளி! காலை முதற்கொண்டே ஜெயராமனைப் புகழ்ந்துகொண்டும் அவனுடைய நடிப்பினால் தங்களுடைய பள்ளிக்கூடத்திற்கே உண்டாகப்போகும் பெருமையைப்பற்றியும் மாணவர்களும் உபாத்தியாயர்களும் பேசிக்கொண்டும், கட்டிடத்திற்கு அலங்காரம்செய்து கொண்டுமிருந்தார்கள்.

ஜெயராமன் ஒரு தடவைக்கு இரண்டு தடவையாகத்தான் நடிக்கவேண்டிய பாகத்தை மனப்பாடம்செய்து கொண்டான். எங்கெங்கே எதுபோல நடித்தால் நன்றாக இருக்கும் என்ற யோசனையோடு நோட்டுப் புஸ்தகத்தை எடுத்துத் திருப்பிப் பார்த்துக் கொண்டான். அவனுக்கும் மனதில் ஒருவிதமான கிளர்ச்சியும், குழப்பமும்! ஆனால் ஒரு காரணமுமில்லை.

மணி நாலடித்ததுமே கலாசாலையிலிருந்து கார் வந்தது. ஏறி உட்கார்ந்து கொண்டான். கார் புறப்பட்டது.

"ஸார், ஸார்" என்ற சப்தம் புறப்பட்ட காரை நிறுத்தியது. தந்தி!

"அலமு—அபாயம்"

ஜெயராமனுக்குத் தலை சுற்றிற்று. காரணமற்ற மனக்கிளர்ச்சிக்குக் காரணம் விளங்கிப் போயிற்று.

"அப்பா! என்ன செய்யாது?" என்று கேட்டான் தகப்பனாரை.

"இனிமேல் வண்டி ஏது?" என்றார் செல்லப்பா அய்யர். அப்பொழுதுதான் ஜெயராமனுக்கும் நினைவு வந்தது. மறுநாட்காலை ஒன்பது மணி வரைக்கும் ஊருக்குப் போவதற்கு ரயிலே இல்லை. அதுவரையில்......?

மூன்றாவது காட்சி ஆரம்பத்திலேயே ஜெயராமன் சோர்ந்துவிட்டான். நாடகத்தில் அவனுடைய மனைவியை முதல் தடவையாக அவன் சந்திக்கப் போகும் சமயம்.

"டேய் ஜெயராம்! ஒரு நிமிஷம் இப்படி வா!" என்றார் அவனுடைய ஆசிரியர். மறு தந்தி வந்திருந்தது!

"அலமு—இறந்துவிட்டாள்". நாடகத்தில் திரை விழுந்தது.

திரைப்படச் செய்திகள்

ஸ்ரீ. எஸ். எஸ். வாசன் ஆரம்பித்துள்ள 'ஜெமினி பிக்சர்ஸ்' மதராஸ் யுனைடெட் ஆர்டிஸ்ட் படங்களையெல்லாம் விநியோக உரிமைக்கு வாங்கிக்கொண்டிருக்கிறதாம். ஜெமினி தன் சொந்தத்திலும் சில படங்களைத் தயாரிக்குமாம்.

*　　*　　*

சில தினங்களாக ஸ்டுடியோக்களுக்கு ஓய்வென்பதையே காணோம். வெகு மும்முரமாக பட உற்பத்திகள் நடந்து வருகின்றன. எந்த எந்த ஸ்டுடியோக்களில் என்ன என்ன படமெடுக்கிறார்கள் என்று தெரியவேண்டாமா?

ஸென்ட்ரல் ஸ்டுடியோஸ்:—இவர்களுடைய பிரகலாதன் கத்திரி அறைக்குப் போகும் தறுவாயிலிருக்கிறனாம். அங்கே போனதும் டைரக்டர் பி. என். ராவ் அவனை வெட்டி ஒட்டிச் சீர்படுத்தி வெளியில் அனுப்புவாராம்.

சபா பிலிம்ஸாரின் 'சதி முரளி,' சேலம் ஷண்முகா பிலிம்ஸ் 'பூலோக ரம்பை,' நாராயணன் கம்பெனியின் 'ரிஷ்ய சிருங்கர்,' 'ஏஞ்சல் பிலிம்ஸ்' 'பரசுராம அவதாரம்' முதலிய படங்களெல்லாம் அங்கே தயாரிக்கப்பட இருக்கின்றன.

மாடர்ன் தியேட்டர்ஸ் மட்டும் மேற்கண்ட ஸ்டுடியோவுக்குக் குறைந்ததா என்ன? மாணிக்க வாசகர், சத்தியவாணி, மகானந்தா, ஹரிஹர மாயா, இவ்வளவு பேர்களும் சேலம் மாடர்ன் தியேட்டரில் இராப்பகலாக உலாத்திக்கொண்டுதானிருக்கிறார்கள்.

கோயமுத்தூர் பிரீமியர் ஸ்டுடியோவும் சளைக்கவில்லை. அங்கே 'கிளாப் ஸ்டிக்' சப்தம் பலமாய்த்தான் கேட்கிறது. வாமனவதாரம், திருவள்ளுவர், திலோத்தமா, தானசூர கர்ண முதலியவர்கள் அங்கே 'டிகாண' போட்டிருக்கிறார்கள். இவர்களெல்லாம் சீக்கிரத்திலேயே வெளியேறுவார்களாம்.

'பக்த சேதா' 'சண்டிகர்', சூர்யா பிக்சர்ஸின் சில ஹாஸ்யப் படங்கள், சுகன்யா, இத்தனையும் அங்கே உருப்பட இருக்கின்றன. எம். பி. பி. ஸி. இப்போது ஒரு புதுக்களையுடன் சோபிப்பதைக் கண்டு நாம் சந்தோஷிக்கிறோம்.

சியாமளா பிக்சர்ஸார் எடுக்கப்போகும் படத்திற்கு 'சீதா ஜனனம்' என்பது பெயர். அவள் ஜனிக்கப் போவது நியூடோனில். ஜனகர் யாரோ? மிஸ். தவமணிதான் சீதைபோல் இருக்கிறது.

* * *

'சகுந்தலை' படத்தில் துஷ்யந்தனுக நடிக்கப்போவது இன்னும் யாரென்று நிச்சயப்படவில்லையாம். எம். கே. தியாகராஜ பாகவதர் என்று நாம் சென்றவாரம் குறிப்பிட்டதை வாபஸ் வாங்கிக்கொள்ள வேண்டும் போலிருக்கிறது. துஷ்யந்தனுக வர இதற்குள் நாலைந்து பேர்கள் போட்டி போட்டுவிட்டார்கள். இப்போது ஜி. என். பாலசுப்பிரமணியம் என்ருெரு வதந்தி காற்றில் பறந்துகொண்டிருக்கிறது. ஒரு பலமான காற்றை அந்த வதந்தி எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறதா?

* * *

நேர் விரோதம்.

ஹாலிவுட்டிலுள்ள நடிகர்கள் எப்பொழுதாவது, கலியாணம் செய்துகொள்ள வேண்டுமென்ருே, அல்லது விவாக ரத்து செய்து கொள்ளப்போவதாகவோ சொன்னுல், அதற்கு நேர் விரோதமாக நடக்கப் போகிறது விஷயம் என்று முடிவு கட்டிவிடலாம்.

மெர்லி ஓபிரான் ஒவ்வொருவரிடமும், தான் அலெக்ஸாண்டர் கோர்டாவைக் கலியாணம் செய்துகொள்ளப் போவதில்லை என்று சொல்லிக் கொண்டிருந்தாள். ஆனுல் என்ன ஆயிற்று? சில நாட்களுக்கெல்லாம் அவள் கோர்டாவின் ஸஹதர்மிணி ஆனுள்!

ஜீன் பார்க்கர், தான் தன் கணவனை விட்டுப் பிரியப்போவதில்லை என்று கூறினுள். பிறகு தான் அப்படிச்செய்ததை ஒப்புக் கொண்டாள். இதைச் சொல்லும்போது எனக்கு ஆஸ்டிரிச் என்ற பெரிய பறவையின் ஞாபகம் வருகிறது. அது தன்னுடைய தலையை மணலுக்குள் மறைத்துக்கொண்டு தன்னை யாரும் பார்க்க முடியாது. என்று எண்ணிக்கொள்ளுமாம்!

* * *

சில்லறைச் செய்திகள்

'ஹோனேலுலு' தீவுகளைச் சுற்றுவதற்காக லீவெடுத்துக் கொண்டு போன பால் முனி ஹாலிவுட் திரும்பி விட்டாராம்.

ஜோன் பாண்டைன் டிராமாக்களில் நடிப்பதற்காக வேண்டி சிலகாலம் ஸ்டுடியோவைவிட்டுப் போயிருக்கிருராம்.

கிரேடா கார்போ சொந்தத்தில் ஒரு வீடு கட்டிக்கொண்டிருக்கிருராம். இதிலிருந்து அவர் படத்தில் நடிப்பதை விட்டு விலகுவார் என்று அங்குள்ளவர் ஊகிக்கிருர்கள்.

யமப் பையன்

(விகடானந்தன்)

ஒரு ஆயுர்வேத நிபுணர் எழுபதாவது வயது கடந்த பிற்பாடும் ஆராய்ச்சியில் ஈடுபட்டு—மிருத்யும்ஜய சரபத் என்ற ஒரு யமனை வெல்லும் பானம்போன்ற பானம் ஒன்றைத் தயாரித்தார். ஒரு இளம் பையனை மாத்திரம் கூட வைத்துக்கொண்டு இந்த அம்ருதத்தைத் தயாரித்தார். வேலை முடிந்ததும், "உனக்கென்ன பீசு வேண்டும்?" என்று பையனைக் கேட்டார். "இந்த சரபத்தில் ஒரு சீசா வேண்டும், வேறு ஒன்றும் வேண்டாம்" என்றான் பையன். நிபுணர் சந்தோஷத்துடன் பெரிய சீசாவில் நிரம்பப் போட்டுக் கொடுத்து, பையனை ஆசீர்வதித்து அனுப்பினார்.

புட்டி பெரியது—பையன் சிறியவன்—சரபத் ஒரு கனமான குழம்பு—அதில் ஒரு துளியையும் வீணாக்க மனமில்லை—தூக்குவதும் கஷ்டமாகயிருந்தது—யாருக்காவது கொஞ்சம் கொடுத்து கனத்தைக் குறைத்துக் கொள்ளலாம் என்று யோசித்தான் பையன்.

பாதையில் ஒரு வயோதிகரைக் கண்டான். இவருக்குக் கொஞ்சம் கொடுக்கலாம் என்று நினைத்து, "நீர் யார்?" என்றான். அவர், "நான்தான் கடவுள்" என்றார்.

"நீர்தானா! அநியாயக்காரரே! உமது உலகில் யோக்கியன் பாழாகிறான்; அயோக்கியன் ஓங்கி வாழ்கின்றான். இந்த இனிய பானம் உமக்குக் கொடேன்" என்று புறப்பட்டு விட்டான்.

இந்தக் கோபத்தின் வேகம் குறைந்ததும் சீசா திரும்பவும் கனக்க ஆரம்பித்துவிட்டது. அத்தருணம் இன்னுமொரு கிழவரைக்கண்டான். "யாரையா நீர்?" என்று அவரைக் கேட்டான்.

"என்னைத்தான் 'சைத்தான்' என்றும் 'சனியன்' என்றும் அழைப்பார்கள்" என்றார் கிழவர். பையன், "உலகத்தில் என்ன கஷ்டம் நேர்ந்தாலும், உன் தலையிலே அல்லவோ சுமத்துகிறார்கள். அப்பேர்ப்பட்ட துன்ப மூர்த்தியல்லவோ நீ! உனக்கா எனது அம்ருதத்தை நான் கொடுப்பேன்!" என்று அவரை உதறிவிட்டு புறப்பட்டுவிட்டான்.

கோபம் குறைந்ததும், கனம் தாங்க முடியவில்லை. கீழே கொஞ்சம் சரபத்தைச் சாய்த்து விடலாமாவென்று கூட யோசிக்கலானான். அத்தருவாயில், ஒரு

கிடைத்திர கிழவர் வந்தார். "நீர் யாரையா?" என்றான் பையன்.

"நான்தான் யமன்" என்றார் கிழவர். உடனே பையன், "நீர்தான் உத்தமர், பாரபட்சமே அற்றவர். யாரையும் வீழ்த்துபவர். ஆகையால் நீர் எனது சர்பத்தை அருந்த வேண்டும்" என்று அவருக்கு அளித்தான்.

பானத்தினிடத்திலும் பையனிடத்திலும் யமதேவன் மோகம் கொண்டார். "நீ வைத்தியத் தொழிலை எடுத்துக் கொள். இந்த சர்பத்துடன் எவ்வளவு நீரைக் கலந்தாலும், அதனுடைய சக்தி குறைந்திடாது. 'இதுதான் ஒரே மருந்து, சர்வ ரோக நிவாரணி' என்று சொல்லிவிடு. உனக்கு ஒரு உபகாரம் செய்கிறேன். நீ வைத்தியம் செய்ய வரும்போது ஒன்று வியாதியஸ்தர் கால் பக்கம் நான் உட்கார்ந்திருப்பேன். அல்லது தலைப்பக்கம் உட்கார்ந்திருப்பேன். உனது கண்ணுக்குத்தான் புலப்படுவேன். நான் கால் பக்கம் இருந்தால், சௌக்கியமாவது நிச்சயம். தலைப்பக்கமானல் மாண்டு போவது நிச்சயம்" என்று வரனைக் கொடுத்துவிட்டு யமன் போய்விட்டார்.

பையன் ஒரு சொட்டு சரபத்தைக் கொண்டு, ஒரு அண்டா ஜலத்தில் கலந்து, நிச்சயமான வைத்தியன் என்று பிரபலமடைந்துவிட்டான். 'பிழைக்கும்' என்றாலும் நிச்சயம்; "சாகும்" என்றாலும் நிச்சயம். எங்கும் பிரசித்தி; அரண்மனைக்குப் அது எட்டிவிட்டது.

அரசனுக்கு ஒரே பெண். வேறு வாரிசு கிடையாது. வயதும் பதினறு. மரணவஸ்தை. வைத்தியர்களெல்லாம் கைவிட்டு விட்டார்கள். இவனை நாடினர்கள். ராஜகுமாரியை அவனுக்கே மணம் செய்து கொடுத்து விடுவதாகவும், அவனுக்கே முடிசூட்டி வைப்பதாகவும் அரசன் வாக்குக் கொடுத்தார்.

ராஜ குமாரி படுத்தப் படுக்கை. பையன் சென்று பார்த்தான். தலைமாட்டில் யம தேவன். அவ்வளவு ஆசையையும் மண்ணில் போட பையனுக்கு மனது வரவில்லை. சற்று கவனித்தான். யமதேவன் சற்று தூக்கத்திலிருந்தார். ஆட்களை சரேலென கட்டிலை மாற்றிப்போடும்படி ஏவினன். யமன் கண்ணைத் திறக்கு முன் ராஜ குமாரியினுடைய பாதங்கள் யமனண்டை வந்து விட்டன. சரபத்தையும் சாப்பிட்டு விட்டாள்; பிழைத்துக் கொண்டுவிட்டாள்.

அரண்மனையிலும், நகரத்திலும் ஆனந்த வெள்ளம் அலைமோதியது.

யமன் பையனைத் தனியே கூப்பிட்டார். "நீ என்னை இன்றைக்கு மோசம் செய்தாய். இத்துடன் நமது ஒப்பந்தம் ரத்து. உனது உயிரையே நான் வாங்கப் போகிறேன்" என்றார். பையன் திடுக்கிட்டான்.

"யமதேவரே, ஆசையால் தவறு செய்து விட்டேன். பழைய சிநேகிதத்திற்காக சைத்தானுக்கு மேலாகவும், கடவுளுக்கு மேலாகவும் நான் உம்மைக் கொண்டாடுவதற்காக எனக்கு ஒரு வரன் தாருங்கள். நான் பிரார்த்தனையை படனம் செய்வதற்கு முன் நீர் என்னைக்

கொல்லக் கூடாது" என்று வேண்டிக்கொண்டான். "அது நியாயம்தான்" என்று யமதேவர் சம்மதித்தார்.

ஆனால் இந்த யமப் பையன் மணம் செய்து கொண்டான். மனைவியுடன் சல்லாபம் செய்கிறான், ராஜ்யத்தை ஆள்கிறான்; புதிய கோவில்களைக் கட்டுகிறான். பிரார்த்தனை செய்வதைத் தவிர பாக்கி எதையும் செய்கிறான்.

யமன் திடுக்கிட்டான். யமபுரத்தின் ஜோதியே மங்கி விட்டது. என்ன செய்வான்? பையன் படுத்திருக்கும் அறையில், சுவர்களின் மேல் பகுதியில் எல்லாம் யமன், பிரார்த்தனைகளை ஒரு இரவில் எழுதி வைத்து வந்து விட்டான்.

பையன் தூங்கியானதும் கண்கள் இயற்கையாகவே சுவர்களின் பேரில் விழுந்தன; எழுத்துக்களைப் படித்தன. படித்து முடிந்ததும், "ஐயோ! பிரார்த்தனையைப் படனம் செய்து விட்டேனே" என்று ஆதங்கம் கொண்டான்.

அந்த க்ஷணமே யமதேவன் ஆஜராகி, "யமன் முரடனல்ல, யமன் நியாயஸ்தன், யமனுக்கு தந்திரமுண்டு; பழைய வியாதிகளுக்குப் புதிய மருந்துகள் வந்தால் புதிய வியாதிகளை சிருஷ்டிப்பான். புதிய வியாதிகள் வருவதையே மனுஷ்யவர்க்கம் விஞ்ஞானத் திமிர்கொண்டு தடுக்குமேயாகில், யமன் அந்த விக்ஞானத்திலேயே விஷத்தை வைத்து ஒருவரையொருவர் கோடிக்கணக்கில் கொலை செய்து கொள்ளும்படி செய்துவிடுவான். யமப் பையன் என்றால், மற்றவர்களை வெல்லலாமே ஒழிய, யமனையே வென்றுவிட முடியாது" என்று சொல்லிக் கொண்டு யமன் சிரித்தான்.

நம்ப முடியாது.

"இதோ தெரிகிறதே, இந்தப் பெரிய மரங்களை யெல்லாம் எங்க தாத்தா குழந்தையா யிருக்கச்சே நட்டார்."

"சீ, பொய் சொல்லாதே. அத்தனை சின்னக் குழந்தை இவ்வளவு பெரிய மரங்களை எப்படி நடமுடியும்?"

* * *

தெரியாமலா செய்தாள்!

மனைவி:—நீங்கள் எனக்கு எழுதி இருந்த கடிதத்தை என் தாயார் படித்துப் பார்த்துவிட்டு ரொம்ப சந்தோஷப்பட்டுக்கொண்டாள். அதில் அவளைப்பற்றி ஓரேயடியாய்ப் புகழ்ந்திருக்கிறீர்களல்லவா? கவரின்மேல் 'ரகசியம்' என்று நீர் எழுதியிருந்தும்கூட அவள் அதைப் பிரித்துப் படித்துவிட்டாள்.

கணவன்:—எனக்குத் தெரியும், அவள் அப்படிச் செய்வாள் என்று!

ஒரு நிமிஷக் கதைகள்

யூகம் எப்படி ?

"நம்ம ராஜம் வாய்ப்பாட்டைவிட வாத்தியத்தில் நன்றாய்ப் பாடுவாள்."

"ஏன்? அவள் வாத்தியத்தில் பாடி நீ கேட்டிருக்கிறாயா ?"

"இல்லை; வாயால் பாடிக் கேட்டிருக்கிறேன்."

* * *

சரியான நியாயம்

வாதி செவிடு. பிரதிவாதி செவிடு. ஜட்ஜும் அப்படியே.

வாதி :—ஜட்ஜ் அவர்களே, இவன் எனக்குக் கொடுக்கவேண்டிய ஐந்து ரூபாய்க்கு ஐந்து வருஷ காலமாக சால்ஜாப்பு சொல்லிக் கொண்டு வருகிறான்.

பிரதிவாதி :—இல்லை எஜமான்; என் மாடு இவன் வீட்டு வைக்கோல் போரைத் தின்னவில்லை.

ஜட்ஜ் :—உங்களுக்குள் இப்படி சண்டை போட்டுக்கொள்வது அழகல்ல. உங்களில் யாராவது ஒருவர் உங்கள் தாயாரைக் காப்பாற்றித்தான் ஆகவேண்டும்.

* * *

நியாயமில்லைதான்

மனைவி :—நீங்கள் செய்த காரியம் ரொம்ப அழகாயிருக்கு; இது உங்களுக்கே நியாயமாய்ப் படறதா பாருங்கோ. நீங்க இப்படிச் செய்யலாமா ?

புருஷன் :—வாஸ்தவம்தான். நான் செய்தது நியாயமில்லைதான். செய்யக் கூடாததுதான். ஆமா... நான் என்ன காரியம் செய்தேன் ? அதைச் சொல்லமாட்டாயா ?

ஒரே போடு

போலி வைத்தியர் :—நான் இருபது வருஷ காலமாக இந்த மாத்திரைகளை விற்று வருகிறேன். இதுவரை ஒருவராவது இதைப் பற்றிக் குறை சொன்னது கிடையாது. இதிலிருந்து என்ன தெரிகிறது?

ஒரு குரல் :—இறந்தவர்கள் பிழைக்கமாட்டார்கள் என்று.

* * *

குடித்துவிட்டுத் தெருவில் புரண்டு கொண்டிருந்த ஒருவனை ஒரு போலீஸ்காரன் கோர்ட்டில் கொண்டுபோய் நிறுத்தினான்.

"எங்கே இன்னொரு போலீஸ்காரன்?" என்று கேட்டான் குடிகாரன்.

"இன்னொருவன் ஏது? உன்னை இவன் ஒரே போலீஸ்காரனல்லவா பிடித்து வந்தது?" என்றார் ஜட்ஜ்.

"இரண்டு பேர் இருந்தார்களே; என் கண்ணால் பார்த்தேனே நான்" என்றான் குடிகாரன்.

"அதற்காகத்தான் உன்னை இங்கு இழுத்து வந்தது" என்றார் ஜட்ஜ்.

* * *

18691

சிநேகம் வேண்டாம்.

"கடைசிவரை நாம் சிநேகமாயிருப்போம்".

"ஓ! அப்படியானால் எனக்கு ஒரு ஐந்து ரூபாய் கடன் கொடு."

"அதுதான் நமது சிநேகத்தின் கடைசி."

* * *

எங்கே அவர்?

"என்ன ஐயா உம்மை நம்பிப் பணத்தைக் கொடுத்துவிட்டுத் தினமும் நடக்கவேண்டியிருக்கிறதே. அத்துடன் இல்லாமல் முதல் வருமோ வராதோ என்றல்லவா கவலைப்பட வேண்டியிருக்கிறது."

"என்னய்யா அப்படிச் சொல்லுகிறீர்! ஒரு பெரிய மனுஷன் சொல்லுகிறாரே அதைக்கூடவா நம்பக்கூடாது?"

"சரி; அப்படியானால் அந்தப் பெரிய மனுஷனை இங்கே அழைத்துக்கொண்டு வாரும்."

ஆச்சரியம் என்ன?

மனைவி :—நீங்கள் ஆச்சரியப் படக்கூடியதாய் இப்போது ஒரு சமாசாரம் சொல்லப் போகிறேன்.

புருஷன் :—எனக்கா? நீயா சொல்லப்போகிறாய்? அப்படின்னா அது எனக்குத் தெரியும். உன் அம்மா இங்கே இன்னும் எத்தனை நாள் தங்கியிருக்கப் போகிறாள்?

* * *

ஒரே நிபந்தனை!

ஸர்க்கஸ் கம்பெனி ஒன்றில் ஒருவர் உத்தியோகம் கேட்டார்.

முதலாளி :—உமக்கு என்ன தெரியும்?

வேலைக்கு வந்தவர் :—எனக்கா? நான் சேர்ந்தாற்போல் முப்பது இட்டிலியும், இருபது 'கப்' காப்பியும் சாப்பிடுவேன்.

முதலாளி :—அடே! சரி; நாங்கள் தினசரி இரண்டு காட்சிகள் நடத்துவோமே. அந்த இரண்டிலும் அம்மாதிரி சாப்பிட்டுக் காண்பிப்பீரோ?

வந்தவன் :—ஓ! பேஷாக.

முதலாளி :—சனி, ஞாயிறுகளில் மூன்று காட்சிகள் நடத்துவோமே!

வந்தவன் :—மூன்று காட்சிகளிலும் சாப்பிட்டுக் காண்பிக்கிறேன், ஆனால் ஒரு நிபந்தனை.

முதலாளி :—அது என்ன அது?

வந்தவன் :—இந்த மூன்று காட்சிகளுக்கும் இடையில் எப்போதாவது அரைமணி வீட்டிற்குப் போய்ச் சாப்பிட்டுவர அனுமதி கொடுக்கவேண்டும்.

சரியான கண்ணாடிதான்!

பார்வை மங்கின பெரியவர் ஒருவர், மூக்குக் கண்ணாடிக் கடைக்குள் சென்று பலவிதமான கண்ணாடிகளைப் போட்டுப் பார்த்தார். கடைசியாக ஒன்று அவருக்குப் பொருந்தியது. அதைப் போட்டுக் கொண்டு வீட்டுக்குப் போனார்.

வழியில் வண்டியில் வந்த திராக்ஷைப் பழக்கூடையைக் கண்டு "இதில் ஒரு கொத்து பலூன்களை வாங்கிக்கொண்டு போனால் பசங்கள் விளையாடுவதற்கு உபயோகப்படும்" என்றார்.